திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மே 2020, விலை ரூ.5/-



திருவேங்கடவனைப் போற்றும்
அன்னமய்யா...







ஸ்ரீராமநவமி பருவதினத்தை முன்னிட்டு 07-04-2020 அன்று ஆ.மா. ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயத்தில் நடைபெற்ற ஸ்ரீசீதாராம கல்யாணத் திருக்காட்சிகள். கொரோனா வைரஸ் காரணத்தால் ஏகாந்தமாக நடைபெற்றது



*ப்ரத்யாதிஷ்ட புராதந ப்ரஹரண*
*க்ராம: க்ஷணம் பாணிஜை:*
*அவ்யாத் த்ரீணி ஜகந்த் யகுண்ட்ட மஹிமா*
*வைகுண்ட்ட கண்ட்டீரவ: |*

**கணப்பொழுது நகங்களால்**
**மறுக்கப்பட்ட பழமையான ஆயுதக்**
**கூட்டத்தையுடையவனாய்,**
**வீணாகாத சக்தியுடையவனாயுள்ள**
**நரசிங்க வடிவு கொண்ட**
**எம்பெருமான் மூன்று**
**உலகங்களையும் காத்தருள**
**வேண்டும்**

*- ஸ்ரீதசாவதார ஸ்தோத்ரம்*





*அபர்யாப்தம் தத$_3$ஸ்மாகம்*
*ப$_3$லம் பீ$_4$ஷ்மாபி$_4$ரக்ஷிதம் |*
*பர்யாப்தம் த்வித$_3$மேதேஷாம்*
*ப$_3$லம் பீ$_4$மாபி$_4$ரக்ஷிதம் ||*

**பாட்டனார் பீஷ்மரால்**
**காக்கப்படும் நமது**
**படை எவ்விதங்களிலும்**
**எதிரிகளால் வெல்ல**
**இயலாதது. ஆனால், பீமனால்**
**கட்டிக் காக்கப்படும்**
**இவர்களுடைய படை நம்மால்**
**எளிதில் வெல்லப்படக்கூடியது.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–10*

உங்கள் வீட்டிற்கே திருமலையப்பன்
நேரில் வந்த அநுபூதியைப் பெறுங்கள்



"ஸப்தகிரி" மாத
இதழுக்கு
சந்தா செலுத்தி

திருமலையப்பனின்
எழுத்தமுதை
மாதாமாதம் பெறுங்கள்







திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

**சமய மாத இதழ்**

(தெலுங்கு, தமிழ், கன்னடம், இந்தி,
ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளில்)

## சந்தா விவரங்கள்

வருடச் சந்தா : ரூ.60.00
ஆயுள் சந்தா : ரூ.500.00
அயல்நாட்டு வருடச் சந்தா : ரூ.850.00

சமஸ்கிருத மொழி இதழுக்கு ஆயுள் சந்தா கிடையாது.

**விவரங்களுக்கு :**

பிரதான ஆசிரியர்
தி.தி.தே. அச்சக வளாகம்,
கபில தீர்த்தம் சாலை, திருப்பதி-517 507.
தொலைபேசி : 0877-2264543,
2264363.



# 50 ஸப்தகிரி

1970 சமயமாத இதழ் 2020



மே 2020

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

மலர்-50 இதழ்-12


## உள்ளுறை

பக்கம்


பச்சை தோரணம் : இந்து தர்ம பிரச்சாரத்தில் ஸப்தகிரி மாத இதழ் — 7
- திரு. ராமநாதன், திருப்பதி.

நேரலையாம் நம் ஸப்தகிரி - திரு. கே. வெங்கட்ராமன், சேலம். — 10

சிறுவனின் வாயில் ஓராயிர ஹரிநாமங்கள் — 12
- திருமதி டி.எஸ். ராஜலக்ஷ்மி, கேரளா.

அன்னமய்யா வாழ்க்கை வரலாறு — 15
- திருமதி ராதாராமநாதன், திருப்பதி.

ஸ்ரீபெருந்தேவி உடனுறை ஸ்ரீகரிவரதராஜ ஸ்வாமி திருக்கோயில், சத்திரவாடா — 18
- திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா.

மதுரகவி கண்ட மாறன் - திருமதி குமுதா வரதராஜன், சென்னை. — 21

வைகாசி மாத சிறப்புகள் - திரு. ஜி.வேலாயுதம், சேலம். — 24

நவவித பக்தி–தாஸ்ய பக்தி - திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி. — 25

அனுமனின் பெருமைகள் - திரு. கே.எஸ். மணி, செஞ்சிக்கோட்டை. — 31

சிறார்களுக்காகவே “ஸப்தகிரி” — 34
- செல்வன் சி.ஸ்ரீவாசுதேவன், திருப்பதி.

அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல் : கன்னிகாதானத்தின் சிறப்பு — 36
- பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

ஸ்ரீமத்பாகவத கதை சாகரம் – பும்சவன விரதம் — 39
- டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர்.

அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் — 42
- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

108 திவ்யதேச வைபவம் – வரகுணமங்கை — 45
- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

பகவத் கீதை–இளைய சமுதாயம் – இது கர்ம பூமி — 48
- திரு. பு.வெ. ராஜா, நகரி.

ஸப்தகிரியின் வைணவ தொண்டு - திரு. சத்தியதாரா, சென்னை. — 50

ஆயுர்வேதம் – பேரிச்சம் - திருமதி. வி. உஷா, திருப்பதி. — 52


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : ஸ்ரீதேவி பூதேவி உடனுறை திருமலையப்ப ஸ்வாமியும், அன்னமய்யாவும்.

பின்னட்டை : திருவேங்கடவனும், வெங்கமாம்பாவும்.


சிறப்பு ஆசிரியர் :
திரு. அனில்குமார் சிங்ஹால், ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.

பிரதான ஆசிரியர் :
Dr. K.ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,

ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,

அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ. பி.எட்.,,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.

டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.

புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
“Sapthagiri”, T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு sapthagiri_helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர். -பிரதான ஆசிரியர்

# "ஸப்தகிரி"க்கு அகவை ஐம்பது

மானிட வாழ்க்கையில் ஆன்மீகம், லௌகீகம் என்பது இரு எருதுகள் பூட்டிய மாட்டு வண்டியைப் போன்றது. அப்பொழுதுதான் வாழ்க்கை சுகமாகவும், ஆனந்தமாகவும், அமைதியாகவும் அமையும். மானிடர்களுக்கு வருவாய் ஈட்டுதலும் அவசியமானதுதான். அதனோடு ஆன்மீகத்திலும் ஈடுபாடு ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். இரை தேடுவதோடு இறையையும் தேட வேண்டும். தெய்வீக ஈடுபாடு, பாவத்தின் மீது பயம் போன்ற சிறந்த லட்சணங்களையும் பெற்றிருத்தல் வேண்டும்.

இதயத்தில் அன்பு, மன்னிப்பு, கருணை போன்ற குணங்கள் அமைதல் வேண்டும். பத்து பேருக்காவது நாம் அன்புடன் உபயோகப்படுதல் வேண்டும். வண்டிக்கு உள்ள இரு சக்கரங்களைப் போன்று, பறவைகளுக்கு உள்ள இரு சிறகுகளைப் போன்று லௌகீகத்திலும் ஆன்மீகத்திலும் சமமாக ஈடுபட்டால்தான் உன்னதமான, மேன்மையான வாழ்வு அமையும்.

இவற்றினைப் பெறுவதற்கு ஓர் உந்துதல் சக்தி தேவைப்படுகிறது. இக்குறையினை "ஸப்தகிரி" தீர்க்கின்றது என்பதில் வியப் பொன்றும் இல்லை. சமுதாய நலனே இலக்கியத்தின் மேலானப் பொருள் என பெரியோர்கள் கூறும் வார்த்தையை மெய்பிக்கின்ற வகையில் உள்ள ஒரு சில பத்திரிகைகளில் மிக உயர்ந்த நிலையில் உள்ள பத்திரிகை "ஸப்தகிரி" எனப் பெருமையாகக் கூறலாம். திருமலையப்பனின் திருலீலைகளின் சிறப்புகளை இலட்சக்கணக்கான பக்தர்களின் இதயத்தில் ஆழஅச்சிட்டு வைக்கிறது இப் பத்திரிகை. அந்த எழுத்துக்களால் அச்சடிக்கப்பட்டுள்ள எம்பெருமானின் அனந்த சக்தியையும் அவர்களை அனுபவிக்கச் செய்கிறது. **''அக்ஷராணாம் அகாரோஸ்மி''** என்றாரல்லவா ஸ்ரீகிருஷ்ண பகவான். அந்த வார்த்தைக்கேற்ப, பத்திரிகையில் ஒவ்வொரு பக்கமும் எம்பெருமானின் திருவடிகளுக்கு எழுத்துக்களால் அர்ச்சனை செய்யப்படுகின்றது அந்த அர்ச்சனை பிரசார(து)த்தை 50 வருடங்களாக பக்தர்களுக்கு வழங்கி வருகின்றது.

திருமலை யாத்திரை என்றாலே ஒரு திவ்ய அநுபூதி! ஒரு ஆனந்தம், ஒரு பரமானந்தம் ஆதலால் தான் திருமலை யாத்திரைக்கு ஒரு சிறப்பு உள்ளது. ஸ்வாமிக்கு வேண்டிக்கொண்டு, வேண்டுதல் நிறைவேற்ற, வீட்டிலிருந்து புறப்படும் நொடிப்பொழுதிலிருந்து மீண்டும் யாத்திரை பரிபூரணமடையும் வரை "கோவிந்த" நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருப்பர். **''கலௌ ஸ்மரணான் முக்தி''** என்கிறாரல்லவா ஸ்வாமி. இப்படியாக ஸ்வாமி நாமத்தை துதிப்பதன் வாயிலாக பாவப்பெருங்கடலிலிருந்து கடக்க வைக்கின்றார் அவ்வேங்கடவன். இதனைத் தான் வள்ளுவரும் **''பிறவிப்பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்''** என்கிறார். எனினும் அவர்கள் மானிடர்களல்லவா... லௌகீகபந்தம் அவர்களைத் தடுக்கும். அனைத்தையும் விடுத்து செல்ல வேண்டுமென்றாலும் அஞ்ஞானத்தை கடந்துச் செல்வதும் எளிதான செயல் அல்ல. எனவேதான் அச்செயலையும் எம்பெருமானே செய்கின்றார்.

பக்தர்களுக்காக எம்பெருமான் எதையும் செய்வார். ஆதலால்தான் யாத்திரை நிறைவடைந்து வீட்டிற்கு பயணிக்கும் பக்தர்களுக்குத் துணையாக ஸப்தகிரிவாசன் "ஸப்தகிரி" வடிவில் பயணிக்கின்றார். கையைப் பிடித்து அவர்களின் கைகளில் "ஸப்தகிரியை" அளித்து வாயால் திருநாமத்தை உச்சரிக்க வைக்கிறார்.

எம்பெருமானை அருகிலேயே தரிசித்தோம் எனும் எண்ணத்தை ஏற்படுத்தும் புகைப்படங்கள் வாசக பக்தர்களின் மனதினை கட்டி இழுக்கின்றது. தேர்ச்சிப் பெற்ற எழுத்தாளர்களின் கட்டுரைகள் வாசகர்களை மேலும் படிக்கத் தூண்டுகிறது. சூழ்நிலைக்கேற்றவாறு இதழில் எதனை பிரசுரித்தால் சிறந்ததாக இருக்கும் என்பதனைக் கலந்தாலோசித்து, அதனை தேர்வு செய்து பத்திரிகையில் சிறப்பாக வெளியிடப்படுகிறது. ஸப்தகிரி பத்திரிகை ஊழியர்களும், தம் பணியை உத்தியோகமாக எண்ணாமல், எம்பெருமானின் சேவையாக எண்ணி அவர்களனைவரும் செய்கின்ற சேவை பக்தர்களின் இதயத்தை ஏழுமலையானின் கருணைக் கடலில் மூழ்கச் செய்கின்றது.

பக்தர்களின் அனுபவங்கள், அதிகாரிகளின் ஆலோசனைகள், திருமலை யாத்திரைக்கு வழிகாட்டுதல்கள், ஆலயத்தில் ஸ்வாமிக்கு நடைபெறும் கைங்கர்யங்கள், உற்சவங்கள், ஆலயத்தில் நடைபெறும் வளர்ச்சி திட்டங்கள், மாத சிறப்புகள் என பத்திரிகையில் அவைகள் தானே வந்து அமைகின்றன.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் ஆன்மீகத் திங்களிதழான இந்த "ஸப்தகிரி" ஐம்பது அகவை பொன்விழாவைக் கடந்து வெற்றி நடை போடுகிறது எனில் இது வாசகர்களாகிய உங்களால் சாத்தியமானது. ஸப்தகிரியை படியுங்கள்! ஸப்தகிரி வாசனின் அருளைப் பெறுங்கள்!!

பச்சை தோரணம்




50



தெலுங்கு மூலம்
டாக்டர். கே. ராதாரமணா,
பிரதான ஆசிரியர்,
தி.தி.தே., திருப்பதி

# இந்து தர்ம பிரச்சாரத்தில்...
# ஸப்தகிரி மாத இதழ்

மக்களிடையே நன்னடத்தை, நல்லொழுக்கம், தர்ம நெறி ஆகியவற்றை ஊக்குவித்து முன் நடத்திச் செல்வதில் தார்மீக பத்திரிகைகளின் பங்கு குறிப்பிடத் தக்கது. அதிலும் திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டு வரும் "ஸப்தகிரி" மாதப் பத்திரிகையின் பங்கு முதன்மையானது. இந்த பத்திரிகை ஆரம்பம் முதல் இன்று வரை அடைந்துள்ள வளர்ச்சியை உள்நுழைந்து அறிந்து கொள்வோம்.

சேஷாசலபதி ஸ்ரீஸ்ரீநிவாசனை தரிசிக்க வரும் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களுக்கு தேவஸ்தானம் செய்து வரும், இனி செய்யப்போகும் வசதிகளின் விவரங்களை உலகின் ஏதோ ஒரு மூலையில் வசித்து வரும் பக்தர்களுக்கு தெரிவிக்க வேண்டும். இந்த திருத்தலத்தின் மகிமையைப் பற்றி அனைவரும் அறிய வேண்டும். நமது புராணங்களிலும், நமது வைதீக மதத்தில் காணப்படும் அறிவு களஞ்சியத்தைப் பற்றியும் அனைவரும் அறியும் வகையில் எடுத்துக்கூறி, ஆத்திகர்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்கு உதவ வேண்டும் என்பது போன்ற பல கொள்கைகளை உள்ளடக்கி ஆரம்பிக்கப் பட்ட பிரச்சார சாதனமே "ஸப்தகிரி". திருமலை திருப்பதி தேவஸ்தானம் 1949 ஆம் ஆண்டு இதற்கான ஆரம்ப சுழி இட்டது. அதன்படி முதலில் பிரச்சாரம் என்பதை உள்ளடக்கி 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் "தேவஸ்தான புல்லட்டின்" என்ற பெயருடன் ஒரு அறிவிப்பு பத்திரிகையாக மட்டுமே கையளவு பிரதியாக வெளியிடப்பட்டது. படிப்படியாக வேங்கடவனின் பூஜை சேவைகள் அதிகரித்து வந்தன. எனவே வெறும் அறிவிப்புப் பத்திரிகையாக மட்டுமேயல்லாது ஆன்மீகக் கல்வியில் கரை தேர்ந்த பல பண்டிதர்களின் உதவியுடன் நமது ஆன்மீக இலக்கியத்தின் சுவையையும், அழகையும் அனைவருக்கும் எடுத்துக்காட்டும் விதமாக "ஸப்தகிரி"யில் கட்டுரைகள் வெளி வந்தன. இதன் பணி 1961ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது. இதற்கிடையே "ஸ்ரீவேங்கடேஸ்வரா கீழ்த்திசை ஆராய்ச்சி மையம்" திருமலை திருப்பதி தேவஸ்தான கட்டமைப்புக்குள் வந்ததால், பல பண்டிதர்கள் அதில் ஈடுபட்டு ஒரு பத்திரிகை நடத்தும் அளவிற்கு

தமிழாக்கம்
திரு. ராமநாதன்,
திருப்பதி.










கட்டுரைகள் எழுதி வழங்கி வந்தனர். தேவஸ்தானத்தாரால் வெளியிடப்பட்டுள்ள பல புத்தகங்கள் முதலில் "ஸப்தகிரி" பத்திரிகையில் தொடராக வெளி வந்தவையே என்றால் அது மிகையாகாது.

ஒரு சிறுமரக்கன்று மரமாகி, மரத்தில் பூக்கள் பூத்து, பூக்கள் காயாகி பலனளிப்பது இயற்கையின் நியதி. அவ்வாறே திருமலை திருப்பதி தேவஸ்தான யாத்திரிகர்களுக்குப் பயன்படும் அறிவிப்பு கைப்பிரதியாக மட்டுமே நின்று விடாமல், இதனை ஒரு ஆன்மீகப் பத்திரிகையாகச் சுடர் விட்டுப் பிரகாசிக்கச் செய்யும் முயற்சி 1961ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்தது. ஒரு சிறிய கையளவு புல்லட்டின் மாத சஞ்சிகையாக மாறுவதற்கு, அதற்கு செயல் வடிவம் தருவதற்கு பணியாளர்கள் தேவைப்பட்டனர். அதற்கேற்றவாறு 1963 ஆம் ஆண்டு பத்திரிகை ஆசிரியர், ஊழியர்கள் என நியமிக்கப்பட்டனர். இதனால் இந்த பத்திரிகையின் வெளியீட்டு பணிகளில் இவர்கள் முனைந்து அக்கறையுடன் செயல்படுவதற்கு இது துணை செய்தது. அந்த காலக்கட்டத்தில் "ஸப்தகிரி" பத்திரிகை 1/8 டெம்பி அளவில் ஒரு சிறிய புத்தகமாக 3000 பிரதிகள் மட்டுமே வெளியிடப்பட்டது. பின்னர் சந்தாதாரர்களுக்கு மட்டுமேயல்லாது திருமலை, சென்னை, ஹைதராபாத், பெங்களூர் ஆகிய நகரங்களில் விற்பதற்கு ஏற்பாடாயிற்று. அப்போது "ஸப்தகிரி" ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம், இந்தி ஆகிய மொழிகள் அனைத்திலும் கட்டுரைகள் ஒரே பத்திரிகையில் சிறு சிறு கட்டுரைகளாக இடம் பெற்று வந்தன.

நாம் நினைத்த அளவு இல்லாவிடினும், சிறிய அளவிலாவது நம் முயற்சியில் பலனை அடைய வேண்டுமென்றால் பத்திரிகையின் பெயர் பலருக்கும் தெரிய வேண்டிய முயற்சியில் ஈடுபடுவது அவசியமாயிற்று. இதன் ஆரம்ப கட்டமாக திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் நிர்வாகத்திற்குட்பட்ட தர்ம சாலைகளிலும், தேவஸ்தான தகவல் நிலையங்களிலும் "ஸப்தகிரி" விற்பனைக்கு வந்தது. இது 1966 ஆம் ஆண்டு ஜுலை மாதம் தொடங்கியது. விற்பனை மையங்களின் எண்ணிக்கை 3 லிருந்து 12 ஆக உயர்ந்தது. இதன் எண்ணிக்கை இன்னும் விரிவடைந்த நிலையில் பத்திரிகைகள் பெரிய அளவில் வெளியிடப்பட்டது.

தேவஸ்தான பூஜை, விழா நடைமுறை பற்றிய செய்திகளுடன் வேத விக்ஞானத்தைப் பற்றிய பிரச்சாரமும் தொடங்கிய பின், அதன் தேவை பல பிரதேசங்களுக்கு விரிவடையத் தொடங்கியது. அதனால் அந்த பத்திரிகைகளை பிற விற்பனையாளர்கள் மூலமாகவும் விற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1967 ஏப்ரல் மாதம் முதல் விற்பனையாளர்களுக்கு ஊக்கத் தொகையும் (கமிஷன்) வழங்கப்பட்டது. பல மொழிக் கட்டுரைகளையும் உள்ளடக்கி வந்த "ஸப்தகிரி" பத்திரிகை அதன்பின் தெலுங்கு, தமிழ், கன்னடம், இந்தி எனத் தனித் தனியே வெளியிடத் தொடங்கின. இதனால் அந்தந்த மொழி பேசும் பகுதிகளுக்கெல்லாம் மூலை முடுக்கெல்லாம் ஊடுருவ மக்கள் உள்ளங்களில் ஒரு நிலையான இடத்தைப் பிடித்தது. அதன் பின் 1966ஆம் ஆண்டு முதல் 1970 ஆண்டு வரை படிப்படியாக அதன் வடிவில் மாற்றங்கள் புகுத்தப்பட்டு பத்திரிகை உலகிலேயே ஒரு மேன்மையான இடத்தைப் பிடித்தது.

1949 ஆம் ஆண்டிலிருந்து 1970 ஆம் ஆண்டு வரை சுமார் இருபது ஆண்டுகளாக பத்திரிகை வழிமுறைகளைப் பின்பற்றி பத்திரிகைத் துறையில் "ஸப்தகிரி"க்கு ஈடான ஒரு இதழ் இல்லை என்ற நற்பெயரையும் பெற்றது. ஏழுமலையின் செய்தி பத்திரிகையாகப் பிறந்து, மாதப் பத்திரிகையாக வளர்ந்து, 1970 ஆம் ஆண்டு ஜுன் மாதம் "ஸப்தகிரி" என்ற பெயர் சூட்டப்பட்டது. ஏழு மலையையும், ஏழுமலையானையும் நினைவூட்டும் பெயராக அது அமைந்தது ஒரு சிறப்பம்சம்.

இதன் பிறகு பத்திரிகையின் வளர்ச்சியில் பல குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. அது வரை ஒரு சிறிய பத்திரிகையாக வெளியிடப்பட்டு வந்த பத்திரிகை 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1/4 க்ரௌன் அளவு பத்திரிகையாக வெளியிடப்பட்டு ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் கூட ஒரே அளவில் வெளிவந்தது. வேறு மொழிப் பத்திரிகையை அதனைப் படிக்க வேண்டும் என்ற விருப்பம் இல்லாதவர்கள் மீது அதனை திணிக்கத் தேவையில்லை எனக் கருதியும், பிற மொழிப்பத்திரிகைகள் அந்தந்த மொழி பேசப்படும் மாநிலங்களில் ஒரு மேன்மையான இடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதற்காகவும் ஜனவரி 1975ஆம் ஆண்டு முதல், ஆங்கிலத்தை விடுத்து பிற ஐந்து மொழிகளிலும் பத்திரிகைகள் தனித்தனியே வெளியிட்டனர். இந்த முறையினால் ஒவ்வொரு மொழிப் பத்திரிகையும் இன்னொரு மொழிப் பத்திரிகையுடன் தொடர்பின்றி வேறு வேறு தேதிகளில் முன்னும், பின்னுமாக வெளி வந்தன. பத்திரிகையின் அளவு 1/4 க்ரௌன் அளவிலிருந்து 1/4 டெம்மி அளவிற்கு 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மாற்றப்பட்டது.

“ஸப்தகிரி” மாதப்பத்திரிகையைப் படிப்பவர்களின் ஆதரவு பெருகி, அதனைப் படிப்ப வர்களின் எண்ணிக்கையும் கூடி வந்தது. இந்த வளர்ச்சியின் ஒரு பாகமாகவே 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து சமஸ்கிருத மொழியில் “ஸப்தகிரி” பத்திரிகை வெளி வர ஆரம் பித்தது. 2016 ஆம்ஆண்டு ஜனவரி முதல் “ஸப்தகிரி” பத்திரிகை தெலுங்கு, தமிழ், கன்னடம், இந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய ஆறு மொழிகளில் வண்ண வண்ண புகைப்படங்களுடன் வலம் வர ஆரம்பித்தது. ஆரம்ப காலத்தில் வெறும் 3000 பிரதிகள் மட்டுமே வெளி வந்த பத்திரிகை தற்போது 2,00,000 (இரண்டு இலட்சம்) பிரதிகள் விற்பனையை எட்டியுள் ளது. அதிக அளவில் விற்பனையாகும் ஆன்மீகப் பத்திரிகையில் முதல் இடத்தில் உள்ளது என்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கக் கூடிய செய்தி. மேலும், சிறுவர்களிடையே ஆன்மீக அறிவை வளர்க்க வேண்டும் எனும் எண்ணத்துடன் மார்ச் 2020 முதல் “பால ஸப்தகிரி” எனும் இணைப்பை ஸப்தகிரி இலவச இணைப்பாக வெளியிடப்பட்டு வருகிறது. “ஸப்தகிரி” இதழ் வளர்ச்சியின் பங்கு ஏதோ ஒருவரைச் சார்ந்ததல்ல. தேவஸ்தான செயல் நிர்வாகிகள், அனைவருமே அவரவர் பணியை அவரவர் பாணியில் நிறைவேற்றி “ஸப்தகிரி”யின் வளர்ச்சியில் முத்திரைப் பதித்துள்ளனர்.

“ஸப்தகிரி” வெளி வந்த நாள் முதல் பக்திக்கு, தர்மத்திற்கு, ஆன்மீகத்திற்குத் தொடர்பு டைய திருத்தலங்கள் குறித்தும், அங்குள்ள தெய்வங்களின் மகிமையைக் குறித்தும் கட்டுரைகள் இடம் பெற்று வந்தன. அது மட்டுமேயன்றி மும்மதாச்சாரியர்கள் குறித்தும், அவர்களது சித்தாந்தங்களைக் குறித்தும் (அத்வைதம், த்வைதம், விசிஷ்டாத்வைதம்) அவை மக்களிடையே ஏற்படுத்திய எழுச்சியைப் பற்றியும், பக்தி நெறி முறைகள் பற்றியும், பக்தர்களின் வாழ்க்கை வரலாறு பற்றியும் இன்னும் ஆன்மீக, தர்ம நெறிகள் பற்றிய நூல்களின் அறிமுகம், அதன் சிறப்புகளைப் பற்றியும் எளிய மொழியில் அனைவருக்கும் புரியும் வகையிலும் எடுத்துரைக்கும் பணியில் “ஸப்தகிரி” ஈடுபட்டு வருகிறது. இவைமட்டு மன்றி திருமலை ஆலயத்திலும், அதன் நிர்வாகத்தின் கீழுள்ள ஏனைய ஆலயங்கள் பற்றியும், அங்கு நடைபெறும் பூஜைகள், பண்டிகை நாட்களில் நடைபெறும் விசேஷ பூஜைகள் உற்சவங்கள் பற்றியும் வெளியிட்டு வருகிறது.

தேவஸ்தான பத்திரிகைக்கு ஏழுமலைக்கும் ஏழுமலையானுக்கும் அடையாளமாக “ஸப்தகிரி” என்ற பெயர் மிகமிகப் பொருத்தமானது. இந்தப் பெயரைக் கேட்டவுடனேயே ஏழுமலையும், ஏழுமலையானும் நம் மனச் சித்திரத்தில் தோன்றி நம்மை பரவசப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

“ஓம் நமோ ஸ்ரீவேங்கடேசாய”



ராசி பலன்

சிறார் வாக்கு



தொடர் கதைகள்

சிறுவர் வினா விடை



திருமலை விஷயங்கள்



ஆன்மீகம், ஆலய தரிசனம்





# நேரலையாம் நம் ஸப்தகிரி

*ஸப்தகிரி ஸப்தகிரி ஸப்தகிரி*
*பக்தி மணம் கமழுகின்ற ஸப்தகிரி !*

*இராமாயண பாரத கதைகளை*
*கண்ணெதிரில் கொண்டு வரும்*
*நேரலையாம் நம் ஸப்தகிரி !*

*கண்ணன் அருளிய கீதையினை*
*எளிதாக புரிய வைக்கும்*
*சீர்மிகு தொண்டனாம் நம் ஸப்தகிரி !*

*ஆழ்வார் சரிதமும் அற்புதங்களையும்*
*அழகு தமிழில் சொல்லியே*
*ஆன்மீகம் பரப்புமே நம் ஸப்தகிரி !*

*திவ்ய தேச தலங்களையும் மகிமைகளையும் அறிய*
*ஆங்கே அழைத்துச் செல்லும் நல்வழிகாட்டியாம் நம் ஸப்தகிரி !*

*ஆன்மீகப் புதிர்களும் சிறார்கதைகளும் நம் சிந்தனையை*
*தூண்டிவிட விருந்து படைக்கும் உறவினராம் நம் ஸப்தகிரி !*

*சுக்கு மிளகு திப்பிலி நல் ஆயுர்வேத மருந்தென ஆரோக்கியம்*
*காத்திடும் நல்மருத்துவராம் நம் ஸப்தகிரி !*

*இல்லந்தோறும் நம்மை நாடி வந்து பக்தி மழை பொழியும்*
*சீர்மிகு அடியாராம் நம் ஸப்தகிரி !*

*முதல் தொடங்கி ஈறு வரையில் எல்லாமே ஆன்மீக மணம் கமழும்*
*வேங்கடேசன் அருள் பிரசாதமாம் நம் ஸப்தகிரி !*

*பக்க மெலாம் பக்தி சுவையே சொல்வதெலாம் பக்தியே*
*நாம் படிக்க படிக்க புண்ணியமாம் நம் ஸப்தகிரி !*

*எளிய நடையில் தீந்தமிழில் உன்னத சாராம்சம் செப்புகின்ற*
*வேதவித்தகராம் நம் ஸப்தகிரி !*

*பண்டிகை சிறப்புகளை மகிமைகளை நமக்கு பாங்குடன்*
*விளக்கியே பாரம்பர்யம் காத்திடும் நம் ஸப்தகிரி !*





- திரு.கே. வெங்கட்ராமன்,
சேலம்.

வேதங்களும் உபநிடதமும் உணர்த்துவதை
அழகு தமிழில் அள்ளித்தரும்
அக்ஷய பாத்திரமாம் நம் ஸப்தகிரி !

நோன்புகள் விரதங்கள் சாஸ்திர நீதிகள்
இன்தமிழில் எடுத்து விளம்பிடும்
ஆன்மீகத் தொண்டராம் நம் ஸப்தகிரி !

மறந்து போன சம்பிரதாய பழக்க வழக்கங்களை
மீட்டெடுத்து கலாச்சாரம் தழைக்க
வைக்கும் ஆன்மீக நாயகனாம் நம் ஸப்தகிரி !

படிக்கப்படிக்க மெய்யறிவை தூண்டியே
ஞான ஒளி ஏற்றிவிடும் அற்புதமாம்
ஆன்மீக சற்குருவாம் நம் ஸப்தகிரி !

பக்திவிதை பதித்து பக்தி விருட்சம் வளர்த்து
ஆன்மீகப் பணியில் நம்மை அர்ப்பணிக்கும்
அருங்குணமாம் நம் ஸப்தகிரி !

பக்தி தொண்டாற்றிட ஊக்குவிக்கும் இதயமாம்
ஆன்மீக கரம் நீட்டும் மாண்பாம்
மென்மலர் பண்பாம் நம் ஸப்தகிரி !

தோட்டத்து மலரெலாம் நல்மணம் வீசுமே
இதழெலாம் இனிமையே சுவையே
எல்லாமே பக்திமயமே நம் ஸப்தகிரி !

எல்லாமே பக்தி மணமே பக்தி மயமே
பக்கமெலாம் பக்தி சுகந்தமே
நோக்கமெலாம் ஆன்மீகமாம் நம் ஸப்தகிரி !

புது நிலவாய் பூர்ண நிலவின் பொலிவாய்
பக்தியே பிரதானமாய் ஆன்மீகமே மூச்சாய்
அன்புடன் உலாவரும் நம் ஸப்தகிரி !

எளிமையான இதழாம் அருமையான இதழாம்
பக்திக்கான இதழாம் ஆன்மீக அணிவிளக்காம்
யாவர்க்கும் பொக்கிஷமாம் நம் ஸப்தகிரி !

முதற்பக்கமே வழிகாட்டும் நற்பாதையாம்
கண்ணனின் கீதையாம் மாபெரும் சொத்தாம்
தீந்தமிழில் செப்பிடுமே நம் ஸப்தகிரி !

புண்ணியமாம் புஷ்கரணி நீராடலாம் மகிமையை
விளக்கிடுமே இன்தமிழில் மூழ்க வைக்கும்
பக்தி நம் ஸப்தகிரி !

இளைய தலைமுறையினர்க்கும் அற்புத வழிகாட்டி
நரை முடியினர்க்கும் சீரிய வழிகாட்டி
ஞானம் ஊட்டிடுமே நம் ஸப்தகிரி !

உண்டு கல்லுக்குள் உருவம், சிப்பியில் முத்து
உண்டு, நம்முள்ளே பக்தி உண்டு,
செதிக்கிடும் சிற்பியாம் நம் ஸப்தகிரி !

இன்ருசியும் திகட்டிடும் அதி உணவும் கேடே
பகவான் குணங்கள் அறிந்திட இன்பமே
அமுதாய் தந்திடுமே நம் ஸப்தகிரி !

சொல்வது எளிதாம் செயல் கடினமாம்
சொல்லும் செயலும் கைகோர்க்கும்
வெற்றிப் பயணமே நம் ஸப்தகிரி !

பக்திக்காக பிறந்த பிள்ளை, பக்தியில் வளர்ந்த
பிள்ளை, பக்தியை வளர்க்கும் பிள்ளை, நம்
பிள்ளை, நம் ஆன்மீக பிள்ளை நம் ஸப்தகிரி !

நல்ல குணம் தரும் நல்ல மணம் தரும்
நல்லோரிடம் சேர்க்கும் நல்லன யாவும் செய்யும்
நான் கண்டு கொண்டேன் ஸப்தகிரி (யை)

ஆன்மீகம் வளர்க்கும் ஸப்தகிரி வாழ்க
அருள் பெருக்கும் ஸப்தகிரி வாழ்க
சமயநெறி காட்டும் ஸப்தகிரி வாழ்க !

வாழ்க வாழ்க பல்லாண்டு
பலகோடி பல்லாண்டு கோடி கோடி
ஆண்டுகள் வாழ்க வாழ்கவே ஸப்தகிரி !

அழகர் பிரான்

# சிறுவனின் வாயில் ஓராயிர ஹரிநாமங்கள்



ஓம் நமோ நாராயணா! ஓம் நமோ நாராயணா! ஓம் நமோ நாராயணா! ஓம் நமோ நாராயணா! ஓம் நமோ நாராயணா! ஓம் நமோ நாராயணா!

திருமதி. டி.எஸ். ராஜலக்ஷ்மி,
கேரளா,
9946I 28I02

நரசிம்ம அவதாரம் பகவானின் நான்காவது அவதாரமாகும். இந்த அவதாரம் இரண்யகசிபுவை வதம் செய்வதற்காக இருந்தாலும் பக்தியின் மேன்மை, பரம்பொருளின் கருணை, பக்தனின் பெருமை, பக்தனின் நம்பிக்கை, பகவானின் சர்வ வ்யாபத்வம், சர்வ வல்லமை, சர்வத்திற்கும் ஆதாரம், உலக க்ஷேமம் போன்ற பல உண்மைகளை நமக்கு தெரிவிக்கிறது.

நாம் பிரகலாதனின் வாழ்க்கையை வைத்து இந்த தத்துவங்களை தெரிந்து கொள்ளலாம்.

**பிரகலாதனின் பிறப்பு :**

பிரகலாதனின் தாயார் லீலாவதியை இந்திரன் கொல்வதற்காக இழுத்துச் சென்றான். நாரத முனி, இந்திரனுக்கு நல்வாக்கு அருளி லீலாவதியை தன்னுடைய ஆசிரமத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு எப்போதும் ஹரி நாம சங்கீர்த்தனம் நடந்து கொண்டே இருக்கும். இந்த சூழ்நிலையில் லீலாவதியின் கர்ப்பத்தில் நாரத முனியின் நல்வாக்கால் மிக மிகச் சிறந்த குழந்தை உருவானது. அவன் கர்ப்பத்திலேயே ஞானம் பெற்றதால் பிரகலாதன் “கர்ப ஸ்ரீமான்” என்று போற்றப்பட்டான். இதிலிருந்து நாம் உணர வேண்டியது என்னவென்றால், “தந்தை கொடூரமான அசுரனாக இருந்தாலும், மகனான பிரகலாதன் நல்ல தர்ம ஆசிரமத்தில் உதித்தான். மிக மிக பக்திமானானான்”.

**பிரகலாதனின் கல்வி :**

சுக்ராசாரியாரின் ஆசிரமத்தில் பிரகலாதன் சிறந்த கல்விமானாக விளங்கினான். அவன் மிகப் பெரிய அரசனுடைய குமாரனாக இருந்தாலும், மிக மிக எளிமையாக, நல்லொழுக்கத்துடன், பக்தியுடன், தெளிவான ஞானத்துடன் எல்லா பிள்ளைகளுடன் பழகினான்.

அதுமட்டுமின்றி, உண்மையான பரமனிடம் பக்தி செய்ய வேண்டும் என்று மிக மிக எளிமையாகக் கூறினான். இதிலிருந்து நாம் கற்க வேண்டியது என்னவென்றால், நமக்குத் தெரிந்த நல்ல விஷயங்களை, ஞானத்தை பிறரிடத்தில் பகிர்ந்து கொள்ளுதல் அவசியமாகும். இதுவே ஒரு வித, பாகவத பகவத் கைங்கர்யமாகும்.

**பிரகலாதனின் அறிவுரை :**

தன் தந்தையாக இருப்பினும், அவன் தன் பக்தியின் தத்துவத்தை விடாமல், உபதேசித்திருந்தான். தன் மனம் தளராமல், மிக தைரியமாக அந்த கொடூர அசுரனிடம் கூறினான். "பகவானே எல்லாவற்றிலும் ஆதாரம். ஸ்ரீஹரி ஒருவனே தெய்வம். அவன் எல்லா இடத்திலும், எல்லா வற்றிலும் உளன்'' என்று உறுதியாகக் கூறினான்.

**பிரகலாதனுக்கு நடந்த கொடுமைகள் :**

இரண்யகசிபு பலவிதமான கொடுமைகளை தன் மகன் பிரகலாதனுக்கு செய்தான். இருட்டு அறையில் அடைத்தான். ஆனால் குழந்தை பிரகலாதன் அந்த இருட்டில் ஜோதிஸ்வரூபமாக பகவானை தியானித்து பலன் பெற்றான். பின்னர், தீயில் தள்ளினார்கள். பக வானின் சிறப்பை தியானிக்க தீ சுடாமல் பூவாக மாறியது.

பின்னர், யானையை வைத்து மிதிக்கச் செய்தார் கள். பகவானை, சிம்ம ரூபமாகத் தியானித்தான். ஏனெ னில் எல்லாவற்றிற்கும் அரசனாக இருப்பவன் பகவான். அவனே காட்டிற்கு அரசன். அதனால் சிம்மமாகவே தியானித்தான். யானைகள் பிரகலாதனை தன் தோளில் ஏத்தி மரியாதை செய்தன.

பின்னர், மலையிலிருந்து உருட்டினார்கள். அவன் அப் போது எம்பெருமானை லக்ஷ்மி நாராயணனாகப் பிரார்த்தித் தான். அது மட்டுமல்ல, உருளும்போது தன் நெஞ்சை கெட்டி யாகப் பிடித்துக் கொண்டான். ஏனெனில் தன் இதய கமலத் தில் வீற்றிருக்கும் பகவானுக்கு தலை சுற்றும் என்று மனம் வருந்தினான். தனக்கு என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை, பகவானுக்கு ஒன்றும் நேரக் கூடாது என்ற "பொங்கும் பரிவு" கொண்டான். கீழே விழும்முன், தாயாரான பூமி தேவியும் பகவான் நாராயணரும் அவனைத் தாங்கிப் பிடித்தார்கள்.

அதன் பிறகு அசுரர்கள் அவனைக் கடலில் வீசினார்கள். அங்கி ருந்தும் தப்பித்து வந்தான்.

பாம்பாட்டியிடம் கூட்டிச் சென்றார்கள். அங்கிருக்கும் பாம்பு களை பகவானின் இருக்கை, குடை, படுக்கையாக பாவித்து, *''சென் றால் குடையாம், இருந்தால் சிங்காசனமாம்''* என்ற ஆழ்வாரின் பாசுரப்படி பாவித்தான். பாம்புகளும் தீண்டவில்லை.

அவனுடைய தாயாரின் கைகளால் கொடிய விஷத்தை கொடுக்கச் சொன்னான் இரண்யகசிபு. அதை அன்போடு பருகி, ஒன்றும் ஆகாமல் பகவத் தியானத்தில் இருந்தான் சிறுவன் பிரகலாதன். அவனை இரண்யன் தர தர என இழுத்து வந்து எங்குளன் விஷ்ணு என்று கேட்டான். அதற்கு பிரகலாதன் – "தூணிலும் உளன், துரும்பிலும் உளன், நீ சொன்ன சொல்லிலும் உளன்" என்று பகவா னின் பரத்தத்துவத்தை நிலை நாட் டினான்.

இரண்யன் கட்டிய தூணை உடைக்க, பகவான் நரம் கலந்த சிங்கமாகத் தோன்றி அவனை அவன் வரத்திற்கேற்ப கொன்று முடித்தார். எல்லா தேவர்களும் பயந்து நிற்க, சிறுவன் பிரகலாதன் பகவானை "ஜகந் மோகனாகரா..." என்று அவனுடைய திவ்ய மங்கள ரூபத்தின் அழகை வர்ணித்து ஸ்தோத்திரம் செய்தான்.

பகவான், அவனுக்கு என்ன வேண்டும் என்று கேட்க, பிரகலாதன் தன் தந்தையை மன்னித்து அருள வேண்டும்.





மற்றும் தனக்கு ஹரி பக்தி வளர வேண்டும் என்று கூறினான். சிறுவனின் ஞானத்தைக் கண்ட பகவான் அவ்வாறே அருளினான். இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை என்னவென் றால் எத்தனை துன்பங்கள் வந்தாலும், பகவானிடம் நம்பிக்கை அதாவது “மஹாவிச்வாசம்” இருக்க வேண்டும்.

அவன் நம்மைக் காப்பாற்றுவான் என்ற உறுதி இருக்க வேண் டும். உலகில், தெய்வம் உளன் என்று நிரூபித்தவன் பிரக லாதன். பின்னர் கஜேந்திரன், அதன் பின் திரௌபதி. ஏனெனில் இவர் களுக்கு நடந்த துன்பங்கள் ஏராளம். ஆனாலும் அந்த துயரத்தி லும் இறைவனின் கல்யாண குணங்களைத் தியானித்து அவ னையே கொண்டு வந்து நிறுத்தியவர்கள் ஆவர்.



இந்த அவதாரம், ஒரு சிறப்பு வாய்ந்ததாகும். ஏனெனில் உலகத்தில் பகவான் எங்கும் உளன், எதிலும் உளன், எப்போதும் உளன் என்று நிரூபித்தவர் நரசிம்மர். ஒரு சிறு குழந்தை யின் சொல்லை நிரூபித்தவர் ஹரி நாராயணர்.

அவனுடைய பக்தியை நிலைநாட்டுவதற் காகவே பகவான் இந்த அவதாரம் செய்தார். பகவானுக்கு எந்த வித ஆயுதங்களும் கொல்வதற்கு தேவையில்லை என்று நிரூ பித்தார். பகவான் தன் பக்தனுக்கு அபசா ரம் நேர்ந்தால் என்ன செய்வார் என்று உலகிற்கு காண்பித்தார்.

ஒரு முள் செடியில் அழகான ரோஜா பூத்தது போல பிரகலாதன் தோன்றி னான். அவன் நல்ல பக்தனாக விளங் கக் காரணம் நல்ல இடத்தில், நல்லவர் கள் உபதேசம் பெற்றதாலாகும்.

இவ்வாறு உலகில் ஒருவனுடைய பிறப்பு, வளர்ப்பு எப்படி ஒருவனை மாற்றும் என்று நமக்கு உணர்த்திய அவ தாரம் நரசிம்ம அவதாரமாகும். பக்திக்கு வய தில்லை என்று உணர்த்தினான் பிரகலாதன். ஏனெனில் அவனுடைய வயது 5 ஆகும்.



ஒருவன் வயதான பிறகு தான் பக்தி செய்ய வேண்டும் என்பது இல்லை என்பதை பிரகலாதன் உணர்த்தினான். அவன் கருவிலிருந்தே பகவானை தியானம் செய்தான் என்பது நமக்கு ஒரு பாடமாகும். ஏனெனில் எப்பொழுது வேண்டுமானாலும் ஒருவன் பகவான் நாமாவைக் கூறலாம் என்று உணர்த்துகிறது இந்த சம்பவங்கள்.

நேரம், காலம், வயது, உணர்ச்சி ஒன்று இல்லை என்பது பிரகலாதனின் பக்தி. பகவான் மிக எளியவன் என்றும் இந்த அவதாரம் கூறுகிறது.

ஒரு சிறுவனுக்காக, ஒரு சொல்லிற்காக தெய்வம் கீழே இறங்கி காத்துக் கொண்டிருந்தது. இவ்வாறு பிரகலாத சரித்திரத்தின் மூலம் நாம் நம் வாழ்க்கையை பக்தியோடு இணைத்து வாழ்வோமாக.

# அன்னமய்யா வாழ்க்கை வரலாறு

தெலுங்கு மூலம் : டாக்டர். மன்னூரு சிவப்ரவீண்
தமிழாக்கம் : திருமதி ராதாராமநாதன், 93936 09240



**நாராயணன் :**

அன்னமய்யாவின் கொள்ளு தாத்தா விட்டலன். அவரது மகனே நாராயணன். விட்டலன் தனது குமாரனான நாராயணனுக்குத் தானே கல்வியை போதித்தார். தந்தையே குமாரனுக்கு முதல் குருவாக இருப்பது என்பது நமது முந்தைய தலைமுறை வரை நடந்து வந்தது. தற்போது நமக்கு அது விந்தையாகத் தோன்றலாம். விட்டலன் தனது குமாரனுக்குத் தானே கல்வி புகட்ட ஆரம்பித்தார்.

சிறிது காலம் கழித்து தன் மகன் தன்னிடம் ஈடுபாட்டுடன் சரியாகப் பாடம் கேட்பதில்லை என்ற சந்தேகம் அவருக்குத் தோன்றியது. உடனே ராஜம்பேட்டை அருகிலுள்ள ஊட்டுக்கூரு பள்ளிக்கு அனுப்பி, நெருங்கிய உறவினர்களின் மூலம் வேறொரு குருவிடம் கற்பதற்கு ஏற்பாடு செய்தார். நாராயணன் அங்கும் படிப்பில் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை. அப்பள்ளி ஆசிரியர்கள் அவனை எவ்வாராயினும் கல்வியில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான பலவித முயற்சிகளை மேற்கொண்டனர்.

புதிதாகப் பள்ளியில் சேர்ந்த மாணவர்களை உடனே இதை மனப்பாடம் செய்து வா, அதை எழுதிக் கொண்டு வா என்று மிரட்டாமல் அந்த மாணவர்களுக்குப் பள்ளிச் சூழ்நிலை பழகும் வரை உடன் படிக்கும் மாணவர்களைப் பார்த்து, கேட்டு கற்றுக் கொள் என்று சொல்வது வழக்கம்.

ஊட்டுக்கூரு பள்ளி ஆசிரியர்களும் அதைத்தான் செய்தனர். நாராயணன் படிப்பில் அக்கறை கொள்வதற்காக உடன் நன்கு படிக்கும் மாணவர்களைச் சுட்டிக் காட்டி அவனைப் போல் நீயும் படிக்க வேண்டும் என்று கூறி வந்தனர். அப்படியும் அவர் படிக்காது போகவே அதட்டிச் சொல்லுதல், கன்னத்தில் அறைதல், கம்பால் தட்டுதல், தோப்புக் கரணம் செய்வித்தல் என அனைத்து வழிகளையும் கடைபிடித்தனர். ஆசிரியரை எதிர்த்துப் பேசும் கீழ்த்தனம் இல்லாததால் நாராயணன் மறைவாகச் சென்று அழுவாராம். ஒரு நாள் துக்கம் தாங்காமல் அருகிலுள்ள கிராம தேவதை சிந்தலம்மா ஆலயத்தில் ஒரு பாம்பு புற்று இருப்பதாகவும், அதில் விஷநாகம் இருப்பதாகவும் கேள்விப்பட்டு அங்கு சென்று, புற்றில் உள்ள நாகத்தால் கடிப்பட்டு உயிர்த் தியாகம் செய்து விடுவது என்ற முடிவுக்கு வந்தாராம்.

ஆவேசத்துடன் ஆலயத்தில் நுழைந்து புற்றில் கைவிட்டாராம் நாராயணன். அனைத்தும் அறியும் அன்னை சிந்தலம்மா இந்த சிறுவனின் மேல் கருணை கொண்டு மனித உருவில் நேரில் தோன்றி தடுத்தணைத்தாள். பாம்பு நாராயணனைத் தீண்டியிருந்தால் அந்த வம்சமே அத்துடன் அழிந்து போயிருக்கும். அழிந்திருந்தால் இத்துனை பெரிய அளவில் இயல், இசை யக்ஞம் நடந்திருக்குமா? சுப்ரபாதம் முதல் பவளிம்பு சேவை வரை நாளும்

நடந்து வரும் இசை கைங்கர்யம் போக ஸ்ரீநிவாசனுக்குக் கிடைத்திருக்குமா?

32,000 கீர்த்தனை பொக்கிஷம்தான் தெலுங்கு மொழிக்குக் கிடைத்திருக்குமா? அல்லது சுமார் ஐந்து தலைமுறை இலக்கியப் பரம்பரை தொடர்ந்திருக்குமா? அதனால் தான் முக்காலமும் அறிந்த அந்த கிராம தேவதை சிந்தலம்மா அவன் முன் தோன்றி தடுத்தாட் கொண்டாள்.

நாராயணனின் மனக்கிளர்ச்சியை உணர்ந்து, அவனது பிறப்பின் காரணத்தையுணர்த்தி, “அப்பனே! கவலைப்படாதே கல்வி, கலைகள் அனைத்திற்கும் அதி தேவதையான சரஸ்வதி தேவியின் மாமன் கேசவன் என்ற நாமத்தையேற்று தாள்ளப்பாக்கத்தில் கமலக் கண்ணனாக ஸ்ரீஹரி குடி கொண்டுள்ளார்

அந்த ஸ்ரீஹரி ஆலயத்தை தினமும் பக்தியுடன் வலம் வந்து வேண்டிக் கொள். உன் எண்ணம் நிறை வேறும். உன் மூன்றாவது தலைமுறையில் சிறந்த பக்தன் ஒருவன் தோன்றி உலகோர் வியக்கும் வண்ணம் வாழ்ந்து நிலையான புகழ் பெறுவான்” என்று கூறி மறைந்தார் (அன்னமய்யா சரித்திரம், பக்கம் 86,87).



## ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

**ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவணையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது. ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை** (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) **இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.**

– பிரதான ஆசிரியர்

உடனே நாராயணன் தாள்ளபாக்கம் சென்று, கோடி சூரிய பிரகாசத்துடன் ஒளி வீசிக் கொண்டிருக்கும் அந்த கேசவ ஸ்வாமியை தரிசித்தார். ஆலய பிராகாரத்தை வலம் வந்து “நீயே கதி, உன்னைத் தவிர வேறொருவர் சரணங்களையும் நாடேன்” (*அன்யதா சரணம் நாஸ்தி த்வமேவ சரணம் மம*) என்று வணங்கி தனக்கு கல்வியை அருளுமாறு வேண்டி நின்றார். பக்தர்கள் கேட்டவுடனேயே அள்ளிக் கொடுக்கக் காத்திருக்கும் ஏழுமலையான், அவரது வரப்பிரசாதமாகவே பிறந்த நாராயணன் கேட்ட வரத்தினை கொடுக்காதிருப்பாரா?

அவர் உடனே “அப்படியே ஆகட்டும்” என வரமளித்தார். வித்யா தேவி சரஸ்வதி நாராயணனின் நாவில் குடி கொண்டாள். நாராயணன் மட்டுமேயல்லாது தாள்ளபாக்க வம்சத்தினர் அனைவரையும் ஆட்கொண்டு அருள் புரிந்தாள். கேசவ ஸ்வாமியின் அருளாலும், சரஸ்வதி தேவியின் அருளாலும் நாராயணனுக்கு கல்வியின் நுணுக்கங்கள் புலப்பட ஆரம்பித்தன.

அது முதல் அவனுக்கு ஆசிரியர்கள் போதித்த ஒவ்வொரு பாடமும் உடனுக்குடன் மனப்பாடம் ஆயிற்று. உடன் படித்த மாணாக்கர்கள், ஆசிரியர்கள், பண்டிதர்கள் அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் கல்வி கற்றார். இவ்வாறாக ஊட்டுக் கூரில் கல்வியை கற்றுத் தேர்ந்து சர்வக்ஞன் என்று அனைவரது போற்றுதலையும் பெற்று தாள்ளபாக்கம் வந்தடைந்தார்.

**நாராயண சூரி :**

"சர்வக்ஞன்" என்று புகழ் பெற்ற நாராயணனுக்கு நாராயண சூரி என்ற மகன் பிறந்தான் . தந்தையைப் போலவே மகனும் அனைத்துப் பாடங்களையும் நன்கு கற்று "சூரி" என்ற பட்டம் பெற்றான். "சூரி" என்றால் பண்டிதன் என்று பொருள். நாராயண சூரியின் மனைவி பெயர் லக்க மாம்பா. அவள் சாந்த குணம் நிறைந்த, தெய்வ பக்தி மிகுந்தவள். தாள்ளபாக்கத்தில் இருந்து கூப்பிடும் தூரத்தில் உள்ள மாடுபூரியிலுள்ள அர்ச்சாவதார மாதவ மூர்த்தி லக்கமாம்பா கூப்பிட்டக் குரலுக்கு வருவார் என்பது அங்குள்ள அனைவரும் அறிந்த விஷயம்.

நாராயண சூரி, லக்கமாம்பா தம்பதிகளின் வாழ்க்கை உலகுக்கே உதாரணமாக நன்முறையில் நடந்து வந்தது. இந்த புண்ணிய தம்பதிகளுக்கு "புத்" என்கிற நரகத்திலிருந்து தம்மை காப்பாற்ற பிள்ளைப் பேறு வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது. உடனே திருமலைக்கு வந்து திருவேங்கடமுடையானை சரணடைந்து, அங்கு கருட ஸ்தம்பத்துக்கருகில் நின்று தங்களுக்கு ஓர் பிள்ளை வரம் வேண்டுமென வேண்டி நின்றனர். அவரவர் கோரியதைக் கேட்டவுடனே கொடுக்கத் தயாராக நிற்கும் திருவேங்கடவன் அன்றிரவே அந்தப் புண்ணிய தம்பதிகளின் கனவில் தோன்றி அவரது நந்தகத்தைப் பரிசாக அளித்தாராம்.

அந்த தம்பதிகள் அடைந்த ஆனந்தத்தை அளவிட முடியாது. பிறவிகள் ஒரு கோடி எடுத்தாலும் காணக் கிடைக் காத விஷ்ணு தரிசனம், யுகயுகங்களாகத் தவம் கிடந்தாலும் பெற இயலாத விஷ்ணுவின் தோற்றம். பக்த பிரகலாதன், துருவன், அம்பரீஷ் இவர்களைப் போன்ற பக்தர்களுக்குக் கிடைத்த ஸ்ரீஹரி தரிசன பாக்கியம் அத்தம்பதியருக்கு கனவில் கிடைத்தது. அதிலும் இருவருக்கும் ஒரே மாதிரியாகக் கனவு வந்தது என்றால் அது தெய்வ சங்கல்பம். அவர்களது நெடுநாளைய ஆசை நிறைவேறப் போகிறது என்ற மகிழ்ச்சியுடனும், தமது தவம் பலித்தது என்ற ஆனந்தத்துடனும் அவர்கள் தங்களது கிராமத்தை வந்தடைந்தனர்.

தொடரும்...

## "ஸப்தகிரி" யில் வாழும் "ஸப்தகிரி"வாசன்!



**"ஸப்தகிரி"**யில் வாழும் **"ஸப்தகிரி"**வாசனுக்கு - எழில்
**"ஸப்தகிரி"** ஸ்தலத்திலென்றும் திருவிழா!
**"ஸப்தகிரி"** இதழுக்கின்றோ பொன்விழா! - மாத
**"ஸப்தகிரி"** படிப்பவர் மனதில் சுடர்விடும் பக்தி விழா! **(ஸப்தகிரி)**
**"ஸப்தகிரி"**யில் கொலுவிருக்கும் நாராயணனை! - உயர்
**"ஸப்தகிரி"**யில் காட்சியளிக்கும் வேங்கடேசனை!
**"ஸப்தகிரி"**யில் சென்று சேவித்திடும் சேவார்த்திகளை - அண்டாது
**"ஸப்தகிரி"** தெய்வம் போக்கிடுமே பாவவினைகளை! **(ஸப்தகிரி)**
**"ஸப்தகிரி"** திருக்கோயிலில் எத்தனையோ சேவைகள்! - சொர்க்க
**"ஸப்தகிரி"** மலையப்பனுக்கு அலங்காரக் கோலங்கள்!
**"ஸப்தகிரி"** திவ்ய தேசத்தில் தீர்ந்திடும் தீராக்குறைகள்! - ஒருமுறை
**"ஸப்தகிரி"** செல்லாதோர் பிறந்தும் பயனிலா பிறவிகள்! **(ஸப்தகிரி)**

*கவிஞர் "கல்யாணியின் செல்வன்", சென்னை.*

ஆலய தரிசனம்

# ஸ்ரீபெருந்தேவி உடனுறை ஸ்ரீகரிவரதராஜ ஸ்வாமி திருக்கோயில் – சத்திரவாடா





திரு. வ.ஒ. சுரேஷ், 9003068532

*“ஸ்ரீய: காந்தாய கல்யாண நிதயே நிதயே நிதயேர்த்தினாம்:
ஸ்ரீவேங்கட நிவாஸாய ஸ்ரீநிவாஸாய மங்களம் :”*

திருப்பதி – திருத்தணி பிரதான சாலையில் திருப்பதியிலிருந்து சுமார் 50 கி.மீ. தெற்கில் நகரி எனும் ஊர் உள்ளது. இந்த நகரியிலிருந்து 4 கி.மீ. மேற்கே சென்றால் குசஸ்தலை நதியின் வடக்கரையில் சத்திரவாடா என்னும் ஊரின் மையப்பகுதியில் மிக அற்புதமான முறையில் மேற்கு நோக்கிய திருமுகமாய் “ஸ்ரீபெருந்தேவி உடனுறை ஸ்ரீகரிவரதராஜ ஸ்வாமி” கொலுவீற்றிருக்கிறார்.

**தல புராணம் :**

இந்த ஊருக்கு தெற்குப் பகுதியில் முனிபல்லை என்கிற கிராமம் இருந்தது. அந்த காலத்தில் முனிவர்கள் முனிபல்லை கிராமத்தில் தவம் செய்து எம்பெருமானை குறித்து யாக யக்ஞங்கள் செய்து வந்தார்கள். கரி என்ற நாமத்தைக் கொண்ட அசுரன் அந்த யாகத்தை அழிக்கத் தொடங்கினான். எம்பெருமான் எதற்கு அதிக முக்கியத்துவம் தரவில்லை என்றாலும் பக்திக்கு விரைந்து வந்து உதவி புரிவான் என்று நாம் புராணங்கள் மூலம் அறிகிறோம். பக்தன் பிரகலாதனை காக்க எம்பெருமான் மனித சரீரமும் மிருகத்தலையும் கொண்ட வடிவுடன் நரசிம்ம அவதாரம் எடுத்து இரண்யாக்ஷனைக் கொன்றார். இங்கும் எம்பெருமான் முனிவர்களின் வேண்டுகோளினை ஏற்று அசுரனைக் கொன்று முனிவர்களை காத்து இவ்வூரிலே கொலுவீற்றிருக்கிறார். மேலும் இவ்வூரைச் சுற்றி மூன்று பக்கமும் அதாவது கரிம்பேடு, நகரி, தெரணி எனும் மூன்று ஊர்களிலும் கரிய மாணிக்கப் பெருமாளாக அவதரித்து பக்தர்களுக்கு அந்த ஸ்வாமியே அருள்பாலிக்கிறார்.

ஸ்ரீபெருந்தேவி உடனுறை ஸ்ரீகரிவரதராஜ பெருமாள் வீற்றிருக்கும் இவ்வூர் சத்திரவாடா என்று அழைக்கப்படுகிறது. சுமார் 500 வருடங்களுக்கு முன்பு விஜயநகர பேரரசின் தலைசிறந்த அரசனான ஸ்ரீகிருஷ்ண தேவராயர் ஆட்சி காலத்தில் வேங்கடகுமார ராஜா என்பவர் கார்வேட் நகர சாம்ராஜ்ஜியத்தை ஆண்டு வந்தார். அச்சமயத்தில் கார் வேட் நகர சாம்ராஜ்ஜியத்தின் கீழ் சத்திரவாடா கிராமம் இருந்தது. சுற்று வட்டார கிராமங்களுக்கு தலைமையகமாகவும் இவ்வூர் இருந்து வந்தது. கார்வேட் நகர சாம்ராஜ்ஜியத்தின் போது இவ்வூரை “சத்ரவாடி” என்று அழைத்து வந்தனர். இதற்கான கல்வெட்டு ஆதாரங்களும் இத்திருக்கோயிலில் உள்ளன.

இவ்வூரின் தெற்கே இருக்கும் குசஸ்தலை நதியில் தான் முனிவர்கள் நீராடி, பிறகு எம்பெருமானை பிரார்த்

தி த் து ஆனந்தமடைவர். எம்பெருமானும் முனிவர்களுக்காகவும், பக்தர்களுக்காகவும் கரி என்ற அசுரனை அழித்து அனைவருக்கும் நன்மை புரிந்து இவ்வூரை ஓர் புனித இடமாக மாற்றியருளினார்.

### உற்சவ பூஜை முறைகள் :

இத்திருக்கோயிலில் வைகானஸ ஆகமப்படி பூஜைகள் நடைபெறுகிறது. இத்திருக்கோயிலில் நடக்கும் திருவிழாக்களில் முக்கியமானது "சித்திரா பௌர்ணமி" விழாவாகும். சித்திரை மாத பௌர்ணமியன்று எம்பெருமான் ஸ்ரீதேவி பூதேவியுடன் குசஸ்தலை நதியில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார். இத்திருவிழா சுமார் 153 ஆண்டுகளாக வெகு விமரிசையாக நடந்து வருகிறது.

இது தவிர காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் கோயில் வைகாசி கருட சேவை நடைபெறும் நாளில் இவ்வூரிலும் ஸ்ரீவைகானஸ ஆகம முறைப்படி கருடசேவை உத்ஸவம் நடக்கிறது. இத் திருக்கோயிலில் ஸ்ரீபெருந்தேவி உடனுறை கரிவரதராஜ ஸ்வாமி, ஸ்ரீபெருந்தேவித் தாயார், ஸ்ரீஆண்டாள் தாயார், ஸ்ரீஆஞ்சநேயர், ஸ்ரீசக்கரத்தாழ்வார் தனிச்சந்நதிகளில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர்.

### திருநட்சத்திர விழாக்கள் :

ஞாயிற்றுக்கிழமை தோறும் ஸ்ரீவீர ஆஞ்சநேயருக்கு வார வழிபாட்டு விழா, வெள்ளிக்கிழமை தோறும் ஸ்ரீகரிவரதராஜ பெருமாளுக்கு வார வழிபாட்டு விழாவும் நடைபெறுகின்றன. அஃது மட்டுமில்லாமல், ஏகாதசி திதி, இரதசப்தமி, புரட்டாசி மாத வழிபாடு, மார்கழி மாத வழிபாடு, கார்த்திகை வார வழிபாடு, வீர ஆஞ்சநேயர் ஜெயந்தி, போகிப்பண்டிகை போன்ற நாட்களில் விசேஷ அபிஷேக அலங்காரம் நடைபெறுகிறது.

மேலும் தினந்தோறும் அர்ச்சனை ஆராதனைகளும் நடைபெறுகின்றன. எம்பெருமானின் திருமுகத்திற்கு எதிரே கருடாழ்வார் வீற்றிருக்கிறார். எம்பெருமானின் கருவறைக்கு அருகாமையிலே ஆழ்வார் ஆசாரியர்கள் மண்டபமும் உள்ளது. இம்மண்டபத்தில் ஸ்ரீவிகனாசாசாரியார், ஸ்ரீசேனை முதலியார், ஸ்ரீநம்மாழ்வார், ஸ்ரீதிருமங்கையாழ்வார், ஸ்ரீராமாநுஜர், ஸ்ரீமணவாள மாமுனிகள் போன்றோரின் விக்ரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

### ஸ்ரீவீர ஆஞ்சநேய ஸ்வாமி சன்னதி :

எம்பெருமானின் கருவறைக்கு வெளியே வடக்கு பகுதியில் தெற்கு திருமுகமாக சுமார் 8 அடிக்கு மேல் ஸ்ரீவீர ஆஞ்சநேய ஸ்வாமி கம்பீர தோற்ற காட்சியுடன் கூடிய சன்னதி உள்ளது. இத்திருக்கோயிலில் வீற்றிருக்கும் ஆஞ்சநேயர் சன்னிதியில் சிறிய குழந்தைகளுக்கு "பாலரிஷ்டதோஷம்" நீங்குவதற்கு தீர்த்தம் முகத்தில் அடிப்பது விசேஷம் ஆகும். மேலும் ஆஞ்சநேயர் உருவம் பதித்த டாலர் அர்ச்சனை செய்து குழந்தைகளுக்கு கழுத்தில் கட்டப்படுகிறது.

இது தவிர சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீபரமாச்சார்ய ஸ்வாமிகள் இந்த ஊரின் மேற்கு பகுதியில் உள்ள கார்வேட் நகரத்தில் கொலுவீற்று இருக்கும் ஸ்ரீவேணு கோபால ஸ்வாமியை தரிசிக்க வந்தார். அத்திருக்கோயிலில் ஆறு மாத காலம் தங்கினார்.

அச்சமயத்தில் ஸ்ரீபரமாச்சார்ய ஸ்வாமிகள் சத்திரவாடாவில் எழுந்தருளி அருள்பாலிக்கும் ஸ்ரீபெருந்தேவி உடனுறை கரிவரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்கும் வந்து பெருமாளை சேவித்தார். ஒரு ஜகத்குரு மகானின் பாதம்பட்ட இடம் புண்ணியம் பெற்றதாகும். அந்த விதத்தில் இவ்வூரும் ஜகத்குருவின் பாதம் பட்டதினால் மேலும் புண்ணியம் பெற்றதாகும். 17-7-2000 ஆம் ஆண்டு வெள்ளிக்கிழமை திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் அன்றைய ஸ்ரீஸ்ரீஸ்ரீ சின்னஜீயர் ஸ்வாமிகளின் முன்னிலையில் குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) விழாவும் மிக விமரிசையாக நடை பெற்றது. 26.02.2009 அன்று திருமலை திருப்பதி தேவஸ்தானம் இக்கோயிலை தன் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து, கோயிலை புணரமைத்து 16.09.2019 அன்று மிக வைபவமாக குடமுழுக்கை நடத்தியது.

இத்திருக்கோயிலில் வீற்றிருக்கும் எம்பெருமானையும் ஸ்ரீவீர ஆஞ்சநேயரையும் தரிசனம் செய்ய சுற்று வட்டார கிராமங்களில் இருந்து திரளான பக்தர்கள் வந்து எம்பெருமானை சேவித்து எம்பெருமானின் அருளுக்குப் பாத்திரமாகின்றார்கள்.

ஸ்ரீபெருந்தேவி சமேத ஸ்ரீகரிவரதராஜ பரப்ரம்மணே நம:

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 45

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | 3 | | | | 4 | |
| | | | | | | | | | 5 | | |
| | | | | 6 | | | | | | | |
| | | 7 | | | | | | 8 | 9 | | |
| 10 | | | | 11 | | | | | | | |
| | 12 | | 13 | | | | | | | | 14 |
| | | | | 15 | | | 16 | | | | |
| 17 | | | | 18 | | | | | | | 19 |
| | | 20 | | 21 | | 22 | | | | | |
| | | | | | | | | 23 | | | 24 |
| | | | 25 | 26 | | | 27 | | | | |
| | | | 28 | | 29 | 30 | | | | | |

**தொகுப்பு : திரு. பட்டுக்கோட்டை டி.ஆர். மனோகர், தஞ்சாவூர், 99426 44807**

**விடைக்கு 49 ஆம் பக்கம் பார்க்கவும்.**

## இடமிருந்து வலம்

1. சந்தனு மஹாராஜாவின் மனைவி .....(6)
5. திருதராஷ்டிரனின் தம்பி....(3)
6. கீதையை உரைத்தவர்....(5)
13. சூரிய புத்திரன்....(4)
15. கர்ணனின் வளர்ப்புத் தாய்...(2)
18. பாஞ்சால நாட்டு அரசன்.....(5)
22. பாண்டுவின் தாயார்....(5)
26. சூதாட்டக் கருவி....(3)
27. தனுர் வேதம்.....(5)
29. கிருஷ்ணரின் தங்கை....(4)

## வலமிருந்து இடம்

4. ஐவர் மனைவி....(4)
13. கண்ணனின் மாமன்.....(4)
19. அர்ஜுனனின் தம்பி....(4)
22. அர்ஜுனனின் அன்பு மகன்.....(5)
23. மகாபாரதப் படைப்பாளர்....(4)
25. பிதாமகர்.....(4)
28. மறுபிறவியில் அலி.....(4)

## மேலிருந்து கீழ்

1. துரியோதனனின் மாமன்.....(3)
2. கண்ணனின் வளர்ப்புத் தாய்....(3)
3. தர்மர்......(6)
4. ஐவர்.....(7)
8. வில்விஜயன்....(5)
9. திருதராஷ்டிரனின் தாய்.....(4)
11. யுத்தத்தில் கண்ணன் ஓட்டியது.....(2)
12. பீஷ்மரின் தந்தை....(4)
13. கிருஷ்ணரின் மறுபெயர்..... (4)
17. அசுவத்தாமனின் தந்தை.....(4)
24. புனித சுலோகங்கள் கிருஷ்ணர் அருளியது.....(2)

## கீழிருந்து மேல்

7. பாஞ்சாலி.....(4)
9. மறுபிறவியில் சிகண்டி.....(3)
10. நந்தகோபரின் ஒரு மனைவி....(3)
11. கிருஷ்ணரை பெற்ற தாய்....(3)
12. புத்திசாலியான கடைகுட்டி....(5)
14. கர்ணன் பெற்ற நாடு...(5)
16. நேர்மையான மந்திரி, பாண்டுவின் சகோதரர்.....(4)
20. போர், சண்டை.....(4)
21. கிருஷ்ண ஜன்ம பூமி....(3)
25. வலிமையான சகோதரன்.....(3)
29. வியாசரின் புதல்வர்...(3)
30. சேனையாகும்.....(2)



# மதுரகவி கண்ட மாறன்

ஆழ்வார்களில் நடுநாயகமாக விளங்குபவர் நம்மாழ்வார் ஆவார். இவருக்குப் பல பெயர்கள் இருப்பினும், மாறன் என்பது முதலில் தாய் தந்தையர் இட்ட பெயராகும். பிறந்த பொழுதே தொடங்கி அழுதல், பாலுண்ணுதல் முதலியன செய்யாமல் உலக நடைக்கு மாறாக இருந்ததனால், இவருக்கு மாறன் என்ற திருநாமம் இடப்பட்டது. மதுரகவி என்பவர் இனிமையாகப் பாடல் பாடுபவர். மற்ற ஆழ்வார்களைப் போல எம்பெருமானுக்கு அடிமையாகாமல், அப்பெருமானது அடியரான நம்மாழ்வாருக்கே அடிமையாய் இருந்தவர். அதாவது "வேறொன்றும் நான் அறியேன்" என்று நம்மாழ்வாரை விட்டு மற்ற விஷயங்களில் கண்வையாதவராய், சடகோபர் என்னும் திருநாமத்தையுடைய நம்மாழ்வாருடைய அநுபவத்தால் வெளிப்பட்டதான திருவாய்மொழியின் கானமே அநுபவமாயிருப்பவர். அவ்வளவிலும் நில்லாது அதற்கு மேலும் நம்மாழ்வாரின் வாத்ஸல்யம் முதலான

– திருமதி குமுதா வரதராஜன்,
சென்னை.

குணங்களுக்குத் தோற்று, அவரையே தம்மை அடிமை கொள்ளும் தலைவன் என்று நிச்சயித்தவர் மதுரகவிகள்.



இவர் அருளிய பிரபந்தம் கண்ணிநுண் சிறுத்தாம்பு. பதினோரு பாடல்களைக் கொண்ட இப்பிரபந்தத்தில் மதுரகவியாழ்வார், கிருஷ்ணாவதாரத்திலும் ஸ்ரீவைஷ்ணவர்கள் பக்கலிலும் நம்மாழ்வார் பண்ணினதெல்லாம் ஆழ்வார் திருவடிகளிலேயாக்கி, அது ருசித்து, அத்தைப்பேசி அநுபவிக்கிறார். "என் அப்பனில்" என்று பகவத் விஷயத்தில் ஈடுபடுவதைக் காட்டிலும் ஆழ்வார் திறத்து ஈடுபடுவது சுலபம் என்பர். பகவத் விஷயத்தை அநுபவித்தால் ஆழ்வாருக்குப் பிறக்கும் ஆநந்தமெல்லாம் ஆழ்வார் திறத்து ஒரு சொல் மாத்ரத்தாலே தனக்கு ஸித்தித்தது என்பதற்குச் சேர "அண்ணிக்கும்–தித்திக்கும்" என்கிறார். அதுமட்டுமின்றி "அமுதூறும்" என்பதற்கு ஏற்ப இந்த பூமிக்குத் திரும்பி வருதலில்லாத பகவானாகிற விஷயம் ஆழ்வாருக்கு எம்பெருமான் அருளாலே நித்யமாய்ச் செல்லுமாபோலே, மதுரகவிக்கு ஆழ்வார் அருளாலே என்றும் புதுமையாய்ச் செல்வதாக அநுபவிப்பர். ஆழ்வார் பக்கலிலே மனத்தை வைத்து ஆழ்வார் திருநாமத்தைச் சொன்னாலே நினைத்த மனமும் தித்தித்து, சொன்ன நாக்கும் தித்திக்கும் என்பர் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்.

ஆழ்வார் பிறந்த ஊரின் பெருமையைச் சொல்லும்போது *''பெரியவண்குருகூர்''* என்கிறார். அதாவது ஆழ்வார் ஒருவர்க்கே ஈச்வரன் அறியாமையைப் போக்கி, பக்தியையும் ஞானத்தையும் அருளினான். ஆழ்வாரோ உலகத்துக்காக திருவாய்மொழி மூலமாக

அறியாமையைப் போக்கி பக்தியையும் ஞானத்தையும் அருளினார். ஆழ்வாரையும் காட்டித் தரும் ஊராகையாலே வண்மையின் மிகுதி சொல்லுகிறது. அறிவிற்சிறந்தார் எல்லோரும் திரண்ட ஊர் என்பர் நஞ்சீயர். ஆழ்வார் மதுரகவியைத் தந்தாப்போலே ஆழ்வாரைத் தந்த திருநகரி. பரமபதம் ஒரு சிறாங்கை என்னும்படி மண்ணாடும் விண்ணாடும் ஒதுங்கலாம்படி பெருமையை உடையதான ஊர் என்பர் நாயனார். மேலும் மதுரகவிகள் ஆழ்வாரே தமக்குத் தாய் தந்தையர் என்பதற்குச் சேர **''அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும் தன்மையான்''** என்று அருளுகிறார். அதாவது ஆழ்வாரல்லது இவருக்கு காப்பார் இல்லை என்னும்படி இவருக்கு எல்லா வித உறவானவர் என்பர் நம்பிள்ளை. இதற்கு எடுத்துக்காட்டாக, இராமாவதாரத்தில் காகாசுரன் சீதையிடம் பட்ட அபசாரத்துக்கு ஏற்பட்ட துன்பம் போக்க எல்லாவிடத்திலும் திரிந்து புகலின்றி மீண்டும் இராமனையே சரணம் பற்றினாப்போலே, வெளியிலே இவருக்கு பிடிப்பல்ல என்று எல்லாவிதத்திலும் காப்பாளராவர் ஆழ்வார் என்கிறார் நம்பிள்ளை. தாய் செய்வது தகப்பன் செய்ய மாட்டான். தகப்பன் செய்வது தாய் செய்யமாட்டாள். வெளியிலுள்ளார் செய்வது இருவரும் செய்ய மாட்டார்கள். எல்லார்



செய்யுமதுவும் செய்யவல்ல பூர்த்தியுடையவர் சடகோபரான நம்மாழ்வார் என்பர்.

எம்பெருமானுடைய க்ருபையைக் காட்டிலும் ஆழ்வாருடைய க்ருபை மிகுதியை **''கண்டு கொண்டு என்னைக் காரிமாறப்பிரான்''** என்ற பாசுரத்துக்குச் சேர உரைப்பர். ஆழ்வாருக்கு ஞானம், பக்தி, வைராக்யம், க்ருபை என்று சில குணங்கள் உண்டு. அதில் ஞானம் என்பது அறிவில் பொருள், அறிவுள் பொருள், ஈச்வரன் ஆகிய முப்பொருள் விஷயமாயிருக்கும். பக்தி என்பது ஈச்வரன் ஒருவனே விஷயமாய் இருக்கும். வைராக்யம் என்பது அறிவுள் பொருள், அறிவில் பொருள் விஷயமாயிருக்கும். ஞானம் என்பது விட வேண்டியது, பற்ற வேண்டியது ஆகியவற்றை பகுத்தறிவதாய் இருக்கும். பக்தியானது கொள்ள வேண்டிய விஷயமேயாயிருக்கும். வைராக்யமானது விட வேண்டியது ஒன்றையே விஷயமாயிருக்கும். க்ருபையானது துன்பத்தைப் போக்கும் விஷயமாயிருக்கும். அதில் ஞானம் உண்மைப் பொருள் பற்றியது. நெஞ்சென்னும் உட்கண்ணால் காணும் அறிவு. அதில் பகவானாகிற விஷயம் ஸ்வரூபம், வடிவு, குணம், செல்வங்கள் என்று பல பகுதிகளையுடையதாயிருக்கும். பக்தியும் பல பகுதியாயிருக்கும். வைராக்யமும் உலக உலகத்தோடு உண்டான பொருள், வேறு தேவதை, வேறு தேவதைகளிடம் ஊன்றியவர்கள், உலக விஷயங்கள், ஆத்மாநுபவம், எம்பெருமான் அநுபவத்தில் தனக்கு என்னுமது ஆகிய இப்படி வைராக்யம் பலவகையாய் இருக்கும். இவை எல்லாவற்றிலும் விஞ்சியிருப்பது க்ருபை என்னும் குணம். அதாவது ஈச்வரனுடைய ஞானம், சக்தி முதலானவைகளும் ஸம்ஸாரிகளைக் காப்பதில் குறைவற்று இருக்கும். இதனை க்ருபை என்பர். அந்த ஈச்வரனுடைய க்ருபையைக் காட்டிலும் ஆழ்வாருடைய க்ருபை தன்னேற்றமுடையது என்பர். மேலும் **''எண் திசையும் அறிய இயம்புகேன்''** என்பதற்கு ஏற்ப ஸ்ரீஜாம்பவான் எம்பெருமான் திரிவிக்ரம அவதாரம் புரிந்து உலகை அளந்தபோது அவருடைய புகழை பறைசாற்றித் திரிந்தாப்போலே, தாமும் மாறனுடைய புகழைப் பரப்புவதாகக் கூறுவர். எவ்வாறு எனில் அங்கு எம்பெருமானுடைய சக்தி ப்ரபாவம், இங்கு ஆழ்வாருடைய க்ருபா ப்ரபாவம். அங்கு வேறு பயன் பெறுபவர் வாழ்ந்தபடி. இங்கு வேறுபயன் கருதாது எம்பெருமானையே பயனாக்கருதுபவர் வாழ்ந்தபடி. அங்கு வஞ்சகத் தொழில். இங்கு வஞ்சனையில்லாத தொழில். அங்கு திருவடிகள் வைப்பு. இங்குத் திருவாய் மொழி

யில் பதங்களுடைய முறை வைப்பில் பயன், என்று நம்மாழ்வாரின் க்ருபையின் பெருமையை உரைப்பர்.

ஆழ்வாருடைய அருள் இந்த உலகத்தில் மிக்கது என்பதற்குக் காரணம் *''மிக்க வேதியர் வேதத்தின் உட்பொருள் நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினான்''* என்பதற்குச் சேர தன்னுடைய தண்மை பாராமல் எல்லா வேதங்களினுடைய ரகசியப் பொருளான திருவாய் மொழியின் அர்த்தங்களை தன் நெஞ்சிலே சேரும்படி உதவி செய்தார் ஆழ்வார் என்கிறார். அதாவது நித்ய மாயிருக்கும் தன்மை, ஒரு மனிதனால் இயற்றப்படாத



## ஸ்ரீமத்பாகவதம் வினாக்கள்


திருமதி என். ஹேமா,
திருப்பதி.
77020 15076


1. ருஷப ராஜனின் புத்ரர் யார்?
2. இந்திரன் எந்த முனிவரின் அஸ்தியைக் கொண்டு, யாரைக் கொண்டு ஆயுதம் பண்ணினார்?
3. துருவன் காட்டிற்கு தவம் செய்ய சென்ற போது அவருக்கு முதலில் தென்பட்டவர் யார்? அவர் உபதேசித்த மந்திரம் என்ன?
4. துருவன் தன் தவ பலனால் கண்ட காட்சி என்ன?
5. ஸ்ரீஹரி எதைக் கொண்டு துருவனுக்கு நற்கதி அளித்தார்?
6. ஹிரண்ய கசிபுவின் மகன் யார்? அவரில் யாரின் ஸ்வரூபம் இருந்தது?
7. பிரகலாதனுக்கு பாடம் கற்பித்த குரு யார்?
8. குருகுலத்தில் தைத்யனின் புத்ரிரர்களுக்கு கூறப்பட்டது என்ன?
9. இரண்ய கசிபு எந்த யுக்திகளைக் கொண்டு துருவனை கொல்ல நினைத்தார்?
10. இறுதியில் உன்னுடைய ஹரி எங்குள்ளான் என்று கேட்டபோது நடந்தது என்ன?


விடைகளுக்கு 40ம் பக்கம் பார்க்கவும்


தன்மை, குற்றமற்ற தன்மை ஆகியவற்றால் உயர்ந்ததான "வேதம்" என்கையாலே பிர மாண வைபவமும், "வேதியர்" என்கையாலே அதன் படி அனுட்டானம் செய்யுமவர்களின் வைபவமும்,

## ஸப்தகிரி

ஸ - ஸதா காலமும் கோவிந்த நாம மகிமையை
ப் - ப்ரபந்தங்கள் மூலம்
த - தங்களிடத்திற்கே
கி - கிட்டுவிக்கும் நாரத மஹ
ரி - ரிஷி




திரு. கே.ஆர்.இரவிச்சந்திரன்
திருப்பதி


"பொருள்" என்கையாலே அதில் சொல்லப்பட்ட பகவத் வைபவமும், "உட்பொருள்" என்கையாலே எம்பெருமா னுக்கு விருப்பமான பாகவத வைபவமும் இவர் நெஞ் சிலே படும்படி முழுமையாக உபதேசம் பண்ணினார் ஆழ்வார். இப்படி ஆழ்வார் பண்ணின உதவிக்குக் கைம்மாறு இல்லாமையாலே *''முயல் கின்றேன் உன்தன் மொய்கழற்கன்பையே''* என்கிறார்.

மொய்கழலாவது – அழகான திருவடிகள் என்றபடி, அதாவது வகுள மாலையாலே அலங்கரிக்கப்பட்ட அழ கான ஆழ்வார் திருவடிகள். இந்தத் திருவடிகள் மதுரகவி களுக்கு அன்பைக் கொடுத்தது, அன்பு கைம்மாறு செய்வதில் தூண்டிற்று. அதுக்கு இடம் காணாமையாலே அலமாப்பை உண்டுபண்ணிற்று. ஆசார்யரான நம்மாழ் வார் மதுரகவிக்குப் பண்ணின உதவிக்கு ஐம்பது கோடி பரப்புள்ள பூமியும் ஒப்பானதன்று என்று விஷ்ணு தர்மம் கூறுவதைக் காட்டி உரைப்பர் பெரியவாச்சான்பிள்ளை.

*''அன்பன் தன்னை''* என்ற இறுதி பாடலில் "அன்ப னாய் மதுரகவி" என்று தம்மைச் சொல்லுவதற்கு ஏற்ப ஆழ்வாருடைய பகவத் ஞானம், பக்தி முதலானவை களாகிற ஆத்ம குணம் கண்டு மதுரகவிக்கு பக்தி உண்டா யிற்று. நம்மாழ்வார் பகவானாகிற விஷயத்தைக் கவிபாடு கையாலே *''என் நாவில் இன்கவி''* என்றார். மதுரகவி களும் ஆழ்வாரைக் கவிபாடுகையாலே தம்மை "மதுர கவி" என்கிறார். நெஞ்சுக்குப்பணி ஆழ்வார் பக்கல் பக்தி யாய், வாய்க்குப்பணி அவருடைய குணப் பெருமை களை துதிப்பதேயாகும்.



# வைகாசி மாத சிறப்புகள்

பருவ தினம்

வைகாசி மாதத்தை "மாதவ மாதம்" என்பர். வைகாசி மாதத்துக்கு மட்டுமே இந்தச் சிறப்பு உண்டு. வைகாசி விசாகத்தில் உதித்தவர் முருகப் பெருமான், வியாசர் அவதரித்த மாதம் வைகாசி.

நாயன்மார்களுள் கழற்சிங்கர், சோமாசி மாறர், திருஞான சம்பந்தர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநீலநக்கர், முருக நாயனார், நமிநந்தியடிகள் ஆகியோர் அவதரித்ததும் வைகாசி மாதத்தில் தான்.

பெரிய புராணம் அருளிய சேக்கிழார் சுவாமிகளும், வைணவப் பெரியரான நம்மாழ்வாரும், திருக்கோட்டியூர் நம்பியும் அவதரித்தது இந்த மாதத்தில்தான்.

இராம ராவண யுத்தம் விசாகம் அமைந்துள்ள கோள் நிலையில் நடந்ததாக ஸ்ரீமத் ராமாயணம் கூறுகிறது.

**கோயில்களில் விழாக்கள் :**

வைகாசி மாதத்தில்தான் பல கோயில்களில் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இதில் முருகனின் :அவதார தினமான வைகாசி விசாகம் உள்ளதால், முருகன் உறையும் ஆறுபடை வீடுகளும் மற்றுமுள்ள அத்தனை முருகத் தலங்களிலும் விசாகத் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படும்.

அம்மன் கோயில்களில் விழாக்களும், வைணவக் கோயில்களில் பிரம்மோத்ஸவமும், கருட சேவையும் நடைபெறும். சிவத்தலங்களிலும் திருவிழாக்களும் நடைபெறும். 108 திவ்ய தேசங்களில் மூன்றாவதான காஞ்சிபுரம் தேவராஜ ஸ்வாமி ஆலயத்தில் வைகாசி மாதத்தில் மிகச் சிறப்பாக கருட சேவையும் நடைபெறும்.

மேலும் குடந்தை ஆதிகும்பேஸ்வரர் தீர்த்தவாரி வைபவமும், மயிலை கபாலீஸ்வரர் விழாவும், வெள்ளீஸ்வரர் கோயில் திருக்கல்யாணமும் வைகாசியில் நடைபெறும் முக்கிய திருவிழாக்கள் ஆகும்.

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோயிலில் வைகாசி விசாக பிரம்மோத்ஸவத்திற்கு கொடிமரம் மற்றும் கயிற்றை, "வசவாத்துறை" என்ற மீனவர்கள் தேங்காய் நாரில் திரித்துக் கொடுப்பார்கள். அன்றைய நாளில் மட்டுமே அடைக்கப் பட்டே இருக்கும் கிழக்கு வாயிலைத் திறந்து குதிரை வாகனத்தில் பகவதி அம்மன் உலா வந்ததும் பின் மூடப்படும்.

—திரு. ஜி.வேலாயுதம், சேலம்

# நவவித பக்தி

பக்தியானது ஒன்பது வகைப்படும். பாகவதத்தில் ஒன்பது விதமான பக்தியைப் பற்றியும், பக்தர்களைப் பற்றியும் கூறப் பட்டுள்ளது.

*"ச்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ: ஸ்மரணம் பாத ஸேவனம்।*
*அர்ச்சனம் வந்தனம் தாஸ்யம் சக்யமாத்ம நிவேதனம் ॥"*

நவவித பக்தியில் ஸ்ரவண பக்திக்கு பரீக்ஷித்தையும், கீர்த்தனைக்கு சுகமஹ ரிஷியையும், ஸ்மரணத்திற்கு பிரகலாதனையும், பாத சேவைக்கு மஹா லக்ஷ்மியையும், அர்ச்சனைக்கு வ்ருது மஹா ராஜாவையும், வந்தனத்திற்கு ஆக்ரூரரையும், தாஸ்ய பக்திக்கு ஆஞ்சனேயரையும், சக்யத்திற்கு அர்ச்சுனனையும், ஆத்ம நிவேதனத்திற்கு பலி சக்கரவர்த்தியையும் உதாரண புருஷர்களாகக் கூறப்பட்டுள்ளனர். இந்த ஒன்பது விதமான பக்தியில் மிகச் சிறந்தது தாஸ்ய பக்தியே.

இந்த நவவித பக்தி யில் தாஸ்ய பக்தியே மேன்மையானதாகும். தாஸ்ய பக்தி என்றால் ஸ்வாமிக்கு, தாய் தந்தைக்கு அன்புடன், பக்தியுடன், பணிவுடன் சேவை செய்து ஆனந்த மடைவதே ஆகும். வாயு தேவர் தன்னுடைய மூன்று அவதாரங்களாகிய ஹனுமன், பீமன், மத்வாச்சாரியார் ஆகிய மூன்றிலும் தாஸ்ய பக்திக்கே முதன்மையான இடத்தினைக் கொடுத்தார். இந்த தாஸ்ய பக்திக்கு மூலாதாரம் "ஸ்ரீஹரி" என்றே சொல்லலாம். "தாஸ்யம்" என்றவுடன் நம் நினைவிற்கு வருவது அன்பு, பணிவு, விவேகம் போன்ற நற்குணங்களாகும்.




அதுமட்டுமின்றி இறைவனை அடையும் மார்க்கமும் இதுவே. பகவான் தன் லீலாவதாரத்தில் தாஸ்யனாக இருந்து அனைவரின் கோரிக்கைகளை நிறைவேற்றுகிறார்.

*"நிருதனின்ன ரமனெய தாசிளனிபளு"*

என்ற கன்னட வாக்கியம் மூலம், எப்பொழுதும் உன் பாத சேவை புரியும் லக்ஷ்மி தேவி தாஸ்யபக்தியுடன் உள்ளாள் என்பதை உணர்த்துகிறது. சர்வ ஜச்வர்யங்களும், சக்திகளும் உடைய லக்ஷ்மி தேவி இங்கே ஸ்வாமிக்கு தாஸ்ய பக்தியுடன் உள்ளாள் என்று தாஸ்ய பக்தியினை விளக்குகிறது.

அதுமட்டுமின்றி வேங்கடாசல மஹாத்மியத்தில் ஸ்ரீமஹாலக்ஷ்மி சகல தேவதைகள் செய்யும் சேவையைக் கண்டு, அனைத்து சேவைகளையும் தானே செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார். லக்ஷ்மி தேவி ஸ்ரீஹரியின் இதயத்தில் வசித்தாலும் தாஸ்ய பக்தியுடனேயே இருந்தார்.

ஸ்ரீமன் மத்வாச்சாரியர், ஸ்ரீமஹாலக்ஷ்மி நாள்தோறும் பகவானை அன்புடனும், அனுராகத்துடனும் சேவித்து வழிபடும் விதத்தை மிக அழ காக வருணித்துள்ளார். *"இந்திரா சஞ்சலாபாங்க நீராஜிதம் மந் தரோத்*

*தாரி ஹ்ருத்யோத் புஜா போகினம்''* லக்ஷ்மி தேவி தன் கருணை கடாக்ஷத்தால் கற்பூர நீராஜ னத்தை ஸ்வாமிக்கு சமர்ப்பிக்க, ஸ்வாமியும் கூண்டில் உள்ள கிளி போன்று காட்சி தருகிறார். இவ் வைபவத்தை புரந்தரதாசரும் தம் பாடலில்,

*''கோடகோடி ப்ருத்ய ரிரலு ஹாடகாம்பரண சேவே... ஏனு தன்யசோல குமிளந் தாமான்யளோ!''* கோடி கோடி ப்ருத்யுலு *''பிரம்மா, ருத்ராதி வந்த்யம்தம்''* பிரம்மா ருத்ரர் முதலா னோர் அந்த ஸ்வாமியை சேவிப்பதற்கு உள்ளனர். அவர்களை விட மிகுந்த அளவில் சேவிக்க லக்ஷ்மி தேவி உள்ளார். அவை எவ் வாறு எனில், சத்ர, சாமரம் முதலிய பூஜை பொருட் களால் ஹரியை நித்யமும் சேவித்து தாஸ்ய பக்தியை வெளிப்படுத்துகிறார் என்று புரந்தர தாசர் தம் பாடல்களால் விளக்குகிறார். லக்ஷ்மி தேவியு டன் பிரம்மாதி தேவதைகள் இந்த தாஸ்ய பக்தியை செய்து வருகின்றனர். தாஸ்ய பக்தியில் ஹனுமனும் *''தாஸோஹம் கோச லேந்த்ரஸ்ய ராமஸ்ய க்லீஷ்ட கர்மணா!''* என்று, தான் கோசல தேசாதிபதியான ஸ்ரீராமச் சந்திரனின் தாசன் என்று பகைவரான



இராவணனின் முன் கூறினார். பக்தியின் சிகாமணியான பிரகலாதனும் *''பூமன் ப்ரமா மிவதமே தவ தாஸ்ய யோகம்''* என்று தாஸ்ய பக்தியைத் தெரிவித்தார்.

"ஆயிரம் நாமங்கள் கொண்ட வேங்கடரமணா என்னை உம் தாச னாக ஆக்கிக் கொள்" என்று புரந்தராசர் வேண்டுகிறார். *''தாச தாச தாசர தாஸ்யவ கொடு''* தாச தாச தாசல தாஸ் யத்தை அருளுமாறு விஜயதாசரும், *''தாசநெந் தந்த ம்யேதெ மாசி மாடு வரே''* தாசன் என்று கூறிய பின்னும் என்னை சோதிக் கின்றாயா? ஸ்வாமி, என்று கோபாலதாசரும், *''தாசோ ஹம் தவ தாசோ ஹம்''* என்று ஜகன்னாத தாசரும் தம் தாஸ்ய பக்தி யினை பறைசாற்றுகின்றனர். *தாச தாச ரமனேய தாசியர மகனானு* – தாச தாச தாச ஜனத்தின் தாசபுத்திரன் நான் என்று கனகதாசரும் தம் தாஸ்ய பக்தியினை வெளிப் படுத்துகின்றார்.



தொடரும்...

தெலுங்கு மூலம் : திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம் : திரு. வி. வேங்கடரமணா



# ஸ்ரீஆஞ்சநேய அஷ்டோத்ர சதநாமாவளி

## ஸ்ரீஆஞ்சநேய அஷ்டோத்ர சதநாமாவளி

ஓம் ஆஞ்சநேயாய நம:
ஓம் மஹாவீராய நம:
ஓம் அனுமதே நம:
ஓம் மாருதாத்மஜாய நம:
ஓம் தத்வஜ்ஞாநப்ரதாய நம:
ஓம் சீதாதேவீமுத்ராப்ரதாயகாய நம:
ஓம் அசோகவநிகாசேத்ரே நம:
ஓம் சர்வமாயாவிபஞ்ஜநாய நம:
ஓம் சர்வபந்தவிமோக்த்ரே நம:
ஓம் ரக்ஷோவித்யம்சகாரகாய நம: (10)

ஓம் பரவித்யாபரீஹாராய நம:
ஓம் பரசௌர்யவிநாசநாய நம:
ஓம் பரமந்த்ர நிராகர்த்ரே நம:
ஓம் பரயந்த்ர ப்ரபேதகாய நம:
ஓம் சர்வ க்ரஹவிநாசினே நம:
ஓம் பீம சேன ஸஹாயக்ருதே நம:
ஓம் சர்வ து:கஹராய நம:
ஓம் சர்வ லோகசாரிணே நம:
ஓம் மனோஜவாய நம:
ஓம் பாரிஜ்தாத்ருமூலஸ்தாய நம: (20)

ஓம் சர்வ மந்த்ரஸ்வரூபவதே நம:
ஓம் சர்வ தந்த்ர ஸ்வரூபிணே நம:
ஓம் சர்வ யந்த்ராத்மகாய நம:
ஓம் கபீஸ்வராய நம:
ஓம் மஹாகாயாய நம:
ஓம் சர்வ ரோகஹராய நம:
ஓம் ப்ரபவே நம:
ஓம் பலசித்திகராய நம:
ஓம் சர்வ வித்யாஸம்பத்ரபதாயகாய நம:
ஓம் கபிஸேநாநாயகாய நம: (30)

ஓம் பவிஷ்யச்சதுராநநாய நம:
ஓம் குமாரப்ரஹ்மசாரிணே நம:
ஓம் ரத்னகுண்டல தீப்திமதே நம:
ஓம் சஞ்சலத்வாலஸந்நத்தலம்ப மான
சிபோஜ்வலாய நம:
ஓம் கந்தர்வவித்யாதத்வஜ்ஞாய நம:
ஓம் மஹாபலபராக்ரமாய நம:
ஓம் காராக்ருஹவிமோக்த்ரே நம:
ஓம் ச்ருங்கலாபந்தமோசகாய நம:
ஓம் ஸாகரோத்தாரகாய நம:
ஓம் ப்ராஜ்ஞாய நம: (40)

ஓம் ராமதூதாய நம:
ஓம் ப்ரதாபவதே நம:
ஓம் வானராய நம:
ஓம் கேசரிசுதாய நம:
ஓம் சீதா சோக நிவாரணாய நம:
ஓம் அஞ்சனாகர்பஸம்பூதாய நம:
ஓம் பாலார்க்ஸத்ருசாநநாய நம:
ஓம் விபீஷண ப்ரியகராய நம:
ஓம் தசக்ரீவகுலாந்தகாய நம:
ஓம் லக்ஷ்மணப்ராணதாத்ரே நம: (50)

ஓம் வஜ்ரகாயாய நம:
ஓம் மஹாத்யுதயே நம:
ஓம் சிரஞ்சீவிணே நம:
ஓம் ராமபக்தாய நம:
ஓம் தைத்யகார்ய விகாதகாய நம:
ஓம் அக்ஷஹந்த்ரே நம:
ஓம் காணிஸநாபாய நம:
ஓம் பஞ்சவக்ரத்தாய நம:
ஓம் மஹாதபசே நம:
ஓம் லங்கிணி பஞ்ஜநாய நம: (60)

ஓம் ஶ்ரீமதே நம:
ஓம் சிம்ஹிகாப்ராணபஞ்ஜநாய நம:
ஓம் கந்தமாதநசைலஸ்தாய நம:
ஓம் லங்காபுர விதாஹகாய நம:
ஓம் சுக்ரீவசசிவாய நம:
ஓம் தீராய நம:
ஓம் சூராய நம:
ஓம் தைத்யகுலாந்தகாய நம:
ஓம் சுரார்சிதாய நம:
ஓம் மஹாதேஜசே நம: (70)

ஓம் ராமசூடாமணிப்ரதாய நம:
ஓம் காமரூபாய நம:
ஓம் பிங்களாக்ஷாய நம:
ஓம் வார்திமைனாகபூஜிதாய நம:
ஓம் கபளீக்ருதமார்தாண்டமண்டலாய நம:
ஓம் விஜிதேந்த்ரியாய நம:
ஓம் ராமசுக்ரீவஸந்தாத்ரே நம:
ஓம் மஹாராவண மர்தநாய நம:
ஓம் ஸ்படிகாபாய நம:
ஓம் வாகதீசாய நம: (80)

ஓம் நவவ்யக்ருதி பண்டிதாய நம:
ஓம் சதுர்பாஹவே நம:
ஓம் தீனபந்தவே நம:
ஓம் மஹாத்மனே நம:
ஓம் பக்தவத்ஸலாய நம:
ஓம் சஞ்சீவனநகாஹர்த்ரே நம:
ஓம் சுசயே நம:
ஓம் வாக்மினே நம:
ஓம் த்ருடவ்ருதாய நம:
ஓம் காலநேமிப்ரமதநாய நம: (90)

ஓம் ஹரிமர்கட மர்கடாய நம:
ஓம் தாந்தாய நம:
ஓம் சாந்தாய நம:
ஓம் ப்ரசந்நத்மனே நம:
ஓம் சதகண்டமதாபஹ்ருதே நம:
ஓம் யோகினே நம:
ஓம் ராமகதாலோலாய நம:
ஓம் சீதாந்வேஷணபண்டிதாய நம:
ஓம் வஜ்ரதந்ட்ஷ்ராய நம:
ஓம் வஜ்ரநகாய நம: (100)

ஓம் ருத்ரவீர்ய ஸமுத்பவாய நம:
ஓம் இந்த்ரஜிதப்ரஹிதாமோக
ப்ரஹ்மாஸ்த்ர நிவாரகாய நம:
ஓம் பார்த்த த்வஜாக்ர
ஸம்வாசினே நம:
ஓம் சரபஞ்ஜரபேதகாய நம:
ஓம் தசபாஹவே நம:
ஓம் லோக பூஜ்யாய நம:
ஓம் ஜாம்பவத்ப்ரீதி வர்தநாய நம:
ஓம் சீதா சமேத ஶ்ரீராமபாதசேவா
துரந்தராயன நம: (108)





கொரோனா நோயிலிருந்து
மக்களைக் காக்க வேண்டும் எனும்
நல்நோக்கத்துடன் தி.தி.தே.
நிர்வகித்த ஸ்ரீஸ்ரீநிவாச சாந்தி
உத்ஸவத்துடன், தன்வந்தரி
மஹா யாகம் மற்றும்
ஸ்ரீஸ்ரீநிவாச
வேத மந்திர ஆரோக்கிய
ஜப யக்ஞ திருக்காட்சிகள்









அஞ்சனை மைந்தன்



# அனுமனின் பெருமைகள்

கே.எஸ். மணி,
செஞ்சிக்கோட்டை

அஞ்சனை மைந்தன் ஆஞ்சநேயன் அளவிலா ஆற்றல் பெற்றவன். வாயு பகவான் அருளால், அஞ்சனா தேவிக்கும் கேசரிக்கும் மைந்தனாய் ஆஞ்சநேயர் பிறந்தார்.

வாயுபகவானின் பிறந்ததால் வாயுபுத்ரன் என்ற சிறப்புப் பெயராலும் அழைக்கப்படு கின்றார். ஸ்ரீராமர் மீதுள்ள பக்தியின் காரணமாகவும், அவர் மீது அதிகப் பற்றின் காரணமாகவும் இராமதாசர் எனப் புகழப் படுகின்றார்.

இராமாயணத்தில் இராவணனின் மீது ஸ்ரீராமர் நடத்திய போரில் அனுமனின் பங்கு மகத்தானது. அனுமனின் சிறு வயதுப் பிராயத்தில் மிகக் குறும்புக்காரராகத் திகழ்ந்தார். இவரது குறும்புத்தனத்தால் தேவர்களும் அவதியடைந்தனர். இதனால் தாய் அஞ்சனை தேவி மிகவும் கவலை அடைந்தார். அவரை மேலும் வருத்தம் அடையச் செய்த நிகழ்வு நடந்தது.

அனுமன் ஒரு நாள் மாளிகையின் மேற்புரத்தில் விளையாடினார். அப்போது வானில் சூரிய பகவானைப் பார்த்த மாருதிக்கு வினோதமான எண்ணம் தோன்றியது. சூரியன் செக்கச் சிவந்த பழமாக அனுமன் கண்ணுக்குக் காணப்பட்டார். அதனால், பழம் என்று நினைத்து அனுமன் குதூகலித்து வானில் பறந்து சூரியனைப் பறிக்க முற்படும் போது, சினம் கொண்ட சூரிய பகவான் தனது வெப்பத்தினால் அனுமனை மூர்ச்சை அடையச் செய்கின்றார்.

பின்னர் தன் மீது தான் தவறு, சிறுதவற்றிற்கு சிறுவனை இவ்வாறு தண்டிப்பது நியாயமில்லை என்று சூரியன் அனுமனை மூர்ச்சையிலிருந்து விடுவிக்கின்றார். இந்நிகழ்வால் சூரிய பகவானின் சாபத்தைப் பெறும்படி ஆயிற்று. அது யாதெனில் அனுமனுக்குத் தன் பலம் என்னவென்று பிறர் தெரிவிக்கும் போது தான் புரியும். அதுவரை சாதாரண வானரத்தின் பலத்தில் தான் இருப்பான் எனவும், தனது பேராற்றலை அவர் அரிய முடியாது எனச் சாபமிடுகின்றார்.

சாபம் தரக்காரணம் என்னவெனில் சிறு வயதிலேயே அளப்பறிய ஆற்றலுடன் திகழ்வது அனுமனுக்கு ஆபத்தாக முடியலாம் எனக் கருதி வழங்கப்பட்டிருக்க வேண்டும். பின்னாளில் ஸ்ரீராமர் வனவாச காலத்தில் சீதையை இராவணன் இலங்கைக்கு கடத்திச் செல்ல, ஸ்ரீராமர் சீதை இருக்கும் இடத்தை அறிந்திட, ஜாம்பவான் அங்கதன் அனுமன் உள்ளிட்டோருடன் தேடுதல் வேட்டை மேற்கொண்டனர். அப்போது ஜடாயுவின் தமையனைக் காண்கின்றனர். அவர் சீதையைக் கவர்ந்து சென்றதாகவும் அதைத் தடுக்க முற்பட்ட ஜாடாயுவின் இறக்கையை இராவணன் வெட்டி வீழ்த்தினான் எனவும் உரைக்கின்றார்.

இதனைக் கேட்ட ஜாம்பவான், அங்கதன் உள்ளிட்டோர் திகைக்கின்றனர். அனுமன் மட்டும் பலமான யோசனையில் அமர்ந்திருக்க, ஜாம்பவான் அங்கதனிடம் சீதை இருக்கும் இடத்தைச் சென்றடைய அனுமனால்



மட்டுமே முடியும் எனவும், அவனுக்கு சூரிய பகவான் விடுத்த சாபம் பற்றியும் எடுத்துறைத்தான். பின்னர் அனுமனிடம் சென்று அவனது பலத்தை எடுத்துக் கூறி தன்னம்பிக்கையூட்டினர். அனுமனும் சமுத்திரத்தை ஆகாய மார்க்கமாகக் கடந்து இலங்காபுரிக்குச் செல்கின்றார்.

ஸ்ரீராமதூதனான அனுமன் இராமர் மீது அளவு கடந்த பக்தியும் விசுவாசமும் கொண்டவர். அனுமனுக்குத் தனிக்கோயில் ஒன்று விஜய நகர அரசர் காலத்தில் காஞ்சிபுரம் அருகே ஐயங்கார்குளம் என்ற ஊரில் மிகப் பெரியத்தலமாக எழுப்பப்பட்டுள்ளது.

பலநூறு ஆண்டு கடந்த நிலையில் இன்றளவும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. இத்திருக்கோயிலில் நடவாவி என்னும் கிணறு உள்ளது. நடவாவிக் கிணற்றில் வருடம் தோறும் சித்திராப்பௌர்ணமியன்று காஞ்சிபுரத்தில் இருந்து அருள்மிகு வரதராஜப்பெருமாள் புறப்பாடு மேற்கொண்டு இத்திருத்தலத்தில் நடவாவி உற்சவம் நடைபெறுகிறது.



இத்தலம் தமிழகத்தில் இருக்கக் கூடிய மற்றைய ஆஞ்சநேயர் தலங்களைவிட பழமையான, சிறப்பு வாய்ந்தத் தலமாகக் கருதப்படுகின்றது. அனுமனுக்குச் செந்தூரம் சார்த்தி வழிபடுவது வழக்கமாகும். செந்தூரம் வெற்றியின் சின்னமாகக் கருதப்படுகின்றது.

நினைத்த காரியம் தடையின்றி வெற்றி பெற பக்தர்கள் அனுமனுக்கு வெற்றிலை மாலைக் கட்டி அணிவிக்கின்றனர். இராகு தோஷத் தலமாகவும், வாழ்வில் வளம் பெறவும் அனுமனுக்கு உளுந்தால் செய்யப்பட்ட வடை மாலையை அணிவித்து வணங்கினால், ராகு தோஷம் விலகி தொல்லைகள் நீங்கி நலம் பல பெறுவர் என்பது ஐதீகம்.



பக்த ஆஞ்சநேயர் நின்ற அல்லது மண்டியிட்ட நிலையில் ஸ்ரீராமரை நோக்கி பக்தியுடன் வணங்கும் வடிவில் அமைக்கப்படுகின்றார். அதனால் அவர் பக்த ஆஞ்சநேயர் எனவும் அழைக்கப்படுகின்றார். ஜெயவீர ஆஞ்சநேயர் எனவும் அழைக்கப்படுகின்றார்.

சஞ்சீவி ஆஞ்சநேயர், சஞ்சீவி மலையைத் தூக்கியவாறு இருப்பார். இச்சிறப்பு நிலை பெரும்பாலும் சுதை வடிவில் சிற்பமாகக் காணலாம். சன்னதியைச் சுற்றி மேல் விமானத்தில் சிற்பமாகவும் அமைக்கப் பட்டிருக்கும். யோக ஆஞ்சநேயர் யோக நிலையில் ஸ்ரீராமரை தியானிக்கும் நிலையில் காணப்படுவார். இவரை இந்த நிலையுடன் வணங்குபவர்களுக்கு அனுமன் அருளுடன் ஸ்ரீராமரின் அருளும் கிடைப்பதாக ஐதீகம்.

பஞ்சமுக ஆஞ்சநேயர் நின்ற நிலையில் இருப்பார். இது போன்ற வடிவம் பாண்டிச்சேரிக்கடுத்த திருச்சிற்றம்பலம் – சந்திப்பு சாலைக்கருகிலுள்ள பஞ்சவடி என்ற ஊரில் அமைந்துள்ளது.

பஞ்சமுகங்களுடன் முறையே வலப்புறம் வராக முகமும், பின்புறம் கருட முகமும், தலையில் குதிரை முகமும் – இடப்புறம் சிம்ம முகமும் கொண்டவராய்,

பத்துத் திருக்கரங்களுடன் கோடாரி, சங்கு, கேடயம், சஞ்சீவி மலையும் கொண்டவராய், கதாயுதமும், நெற்றியில் திருநாமமும், கிரீடமும் தரித்து காட்சியளிக்கின்றார்.





தமிழகம் முழுவதும் அனுமனுக்கு ஆலயங்கள் எழுப்பி பன்னெடுங்காலமாக வணங்கி வருகிறோம். ஒவ்வொரு ஆலயமும் ஒவ்வொரு விதமான சிறப்புக்களைப் பெற்றுள்ளன. அவற்றில் சில இங்கேக் காணலாம்.

காஞ்சிபுரம் ஐயங்கார் குளம் அருள்மிகு சஞ்சீவி ராயர் திருக்கோயில் மிகப் பழமையானது. அனுமன் தலங்களிலேயே பெரியத் தலமாகக் கருதப்படுகிறது. இங்குள்ள நடவாவிக் கிணறு ஓர் அதிசய நீரூற்றாகும்.

சென்னையில் ஆஞ்சநேயருக்குப் பல சிறப்பானத் தலங்கள் உள்ளன. அவற்றில் ஆழ்வார் பேட்டையில் உள்ள பக்த ஆஞ்சநேயர் ஆலயம் சிறப்பானதாகும்.

சென்னை நங்கைநல்லூரில் "32" அடி உயரத்தில் ஆஞ்சநேயர் காட்சியளிக்கின்றார்.



சென்னையை அடுத்த கேளம்பாக்கத்தில் ஸ்ரீவீர ஆஞ்சநேயர் ஆலயம் மலை மீது அமைந்துள்ளது. இக்கோயில் மூலவர் விசேஷ சக்தி கொண்டவராக வணங்கப்படுகின்றார்.

மாமல்லபுரத்தை அடுத்த கல்பாக்கம் செல்லும் சாலையில் பெருமாள் சேரி என்னும் ஊரில் பக்த ஆஞ்சநேயர் ஆலயம் அமைந்துள்ளது. இங்குள்ள ஆஞ்சநேயர் "12" அடி உயரத்தில் அழகுறப்படைக்கப்பட்டு கம்பீரமாகக் காட்சியளிக்கின்றார்.

செங்கல்பட்டு நகரில் பல ஆஞ்சநேயர் தலங்கள் இருந்தாலும், பேருந்து நிலையத்தருகே அமைந்துள்ள ஸ்ரீகணையாழி ஆஞ்சநேயர் ஆலயம் பிரசித்திப் பெற்றது ஆகும். ஸ்ரீராமரின் தூதுவனாக கையில் கணையாழி கொண்டு செல்லும்போது இத்தலத்தில் தங்கி சென்றதாகக் கூறப்படுகிறது.



நாமக்கல் அருள்மிகு பக்த ஆஞ்சநேயர் "18" அடி உயரத்தில் நின்ற நிலையில் வீற்றிருக்கின்றார். இது உலகப் பிரசித்திப் பெற்றத் திருத்தலமாகும்.

தஞ்சையில் மூலக்கடை அனுமன் தலம் பிரசித்திப் பெற்றதாகும். அமாவாசை தினத்தில் சிறப்பு அபிஷேகம் நடைபெறும்.

கும்பகோணம் மாவட்டம் வலங்கைமான் அருகில் உள்ள ஆண்டான் கோயில் கிராமத்தில் ஸ்ரீ ஜெயவீர ஆஞ்சநேயர் ஆலயம் அமைந்துள்ளது.

நாகை மாவட்டம் செம்பனார் கோயில் மேலப்பாடியில் ஸ்ரீஇரட்டை ஆஞ்சநேயர் கோயில் அமைந்துள்ளது. கருவறையில் இரு ஆஞ்சநேயர்களும் அருகருகே அமைந்துள்ளனர். இவர்களை வணங்கினால், இரட்டிப்புப் பலன் கிடைப்பதாக ஐதீகம்.



# சிறார்களுக்காகவே

# "ஸப்தகிரி"



*"வேங்கடாத்ரி ஸமம் ஸ்தானம் ப்ரஹ்மாண்டே நாஸ்தி கிஞ்சன*
*வேங்கடேச ஸமோ தேவோ ந பூதோ ந பவிஷ்யதி"*

இப்புவியில் அர்ச்சை வடிவில், திருமலை என்கிற ஏழுமலைகளில் எழுந்தருளி தன்னை நம்பி வந்தவர்களுக்கு கலியுக வரதனாக காக்கும் கடவுள் திருவேங்கடமுடையான். அந்த எம்பெருமான் உவந்து ஏற்ற கிரீடாசலமான திருவேங்கடமலையை குறித்தும், அங்கு வாழும் தெய்வத்தை குறித்தும், "திருவேங்கட மலைக்கு நிகரானதொரு மலை இப் பூவுலகில் எங்கும் இல்லை" எனவும், "திருவேங் கடத்து எம்பெருமானுக்கு நிகரான தெய்வம் கடந்த காலத்திலும் சரி, வருங்காலத்திலும் சரி இருந்ததும் இல்லை, இனி இருக்கப்போவதும் இல்லை" எனவும் புகழ்கின்றனர்.

அத்தகைய சிறப்பு மிகுந்த ஏழு மலைகளின் பெயரால், திருமலை திருப்பதி தேவஸ்தானத்தி னரால் வெளிவந்து கொண்டிருக்கும் "ஸப்தகிரி" மாத இதழுக்கு "50 வருடங்கள்" நிறைந்து விட்டன என்பதை அறிவது மிகவும் மகிழ்ச்சியாக இருக் கின்றது. ஸப்தகிரி பத்திரிகையில் "சிறார் பகுதி" என் னும் சிறப்பான பகுதி சிறார்களுக்காக வெளியிடப் பட்டு வருவது சிறப்பான அம்சமாகும். என்னுடைய சிறு சிறு கதைகள் நிறைந்த கட்டுரைகளையும் நான் ஸப்தகிரியில் கண்டு ஆனந்தம் கொண்ட நாட்களும் உண்டு. "ஸப்தகிரி"யோடு என்னுடைய அனுப வத்தை நான் இங்கு பகிர்ந்துள்ளேன்.

ஸப்தகிரி என்றால் ஏழுமலை என்று பொருள். அழகான ஏழுமலைகளின் தொகுப்பே திருமலை. அங்கு பிரம்மாண்ட நாயகனாக திருவேங்கடவன் எழுந்தருளி நம்மை எல்லாம் வழிநடத்துகின்றார். திருவேங்கடவனின் லீலைகள், திருமலையின் சிறப்புகள், நிகழ்வுகள் மற்றும் திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்தின்கீழ் செயல்படும் பல்வேறு ஆலயங்கள், அதன் வரலாறு, அவ்வாலய சிறப்பு நிகழ்வுகள் என பலவிதமான கட்டுரைகளால் நான் என்னுடைய ஆன்மீக அறிவை விரிவாக்கிக் கொள்ள இயலுகிறது. ஸப்தகிரியில் சிறார்களுக்கான கட்டுரை பகுதி மட்டுமே இல்லாமல் "சிறார் வினா–விடை" பகுதி, "பாகவத புதிர்" போன்றவை ஆன்மீக அறிவை அலசும் விதமாக அமைந்துள்ளன.

இதற்கு முன்னர் வெளியான இதழ்களில் இராமாயண, மகாபாரத புதிர் பகுதி மூலம் எனக்கு தெரியாத பல விஷயங்களைத் தெரிந்து கொண் டேன்.

இந்து தர்ம தத்துவத்தையும், அதில் பொதிந் துள்ள நுணுக்கங்களையும், மிகவும் எளிய நடையில், என்னை போன்ற சிறார்களுக்குப் புரியும் வகையில் வெளியிடுவதால் சிறார்கள், இந்த இயந்திர யுகத்தில்




தங்களுடைய பள்ளிக் கல்வியுடன், ஆன்மீகக் கல்வியையும் கற்க வழி வகுக்கிறது.

சிறு வயதிலிருந்தே, என் தாயார் மற்றும் பாட்டி, இந்த ஸப்தகிரியை காண்பித்து,அதில் வெளிவரும் கட்டுரைகளை கதை வடிவில் அழகாகக் கூறுவர்.

என் போன்ற சிறார்களின் ஆன்மீக அறிவை மிகவும் விரிவாக்கும் விதமாக, இவ் வாண்டு, மார்ச் மாதத்திலிருந்து சிறார்க ளுக்கு என சிறப்பாக வெளிவரும் "பால ஸப்தகிரி" இலவச இணைப்பு காண்ப தற்கு மிகவும் இனிதாக இருக்கின்றது.

இந்த பாலர் பகுதியில் இந்து கடவுள்கள், ஆழ்வார்கள், கன்னட ஹரிதாசர்கள் எனும் பகுதிகளின் வாயிலாக இந்து தர்மத்தையும், அதை நிலைநிறுத்தப் பாடுபட்டவர்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள இயலுகிறது.

வினாவிடை பகுதி மற்றும் சிறுவர்களுக்குப் பிடித்த விதத்தில், அதே நேரத்தில் புராண இதிகாச காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளை எங்களுடைய கண் முன்னே சித்திரை கதை மூலம் நிறுத்துவதினால் எங்களுக்கு முன்னோர் களுடைய பண்பாட்டினையும், கலாச்சாரத்தையும் அறிய ஏதுவாகிறது. சிறுவர்களான எங்களுக்கு அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நல் ஒழுக்கங்களை பற்றிய நீதிகளை சிறிய கதை வடிவில் விளக்கும் விதமும் சிறப்பானது.


சிறு பிள்ளைகளின் சாதனை அட்டவணையும் அவர்களின் புகைப் படத்தையும் காண்பதால் என் போன்ற சிறார்கள் சிறப்பான பல சாதனைகள் புரிய ஊக்கமளிக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

சித்திரம் வரைய ஒரு பகுதியும் இருப்பதால் எங்களுடைய ஓவியம் வரையும் ஆற்றல் விரிவடையும்.

பல சிறார்களை ஊக்குவித்து நம்முடைய இந்து தர்ம கலாசாரத்தை அறிய வைத்து, வருங்காலத்தில் எங்களை போன்ற சிறார்கள் இந்து தர்மத்தை நிலை நாட்டுவதற்கு வழி வகுக்கும். இந்த ஸப்தகரி பல நூற்றாண்டுகள் எங்களைப் போன்ற சிறார்களுக்கு வழிகாட்டி யாக அமையும் என்பதனை எண்ணி எண்ணி பெருமகிழ்ச்சி அடைகிறேன்.



**செல்வன் சி. ஸ்ரீவாசுதேவன்**
த/பெ. சி. சேஷகிரி,
எண்.46,
ஆர்.என். மாடா வீதி,
திருப்பதி.



அன்றாட வாழ்வுக்கு
ஆழ்வார்களின்
அருளிச்செயல்–4

# கன்னிகா தானத்தின் சிறப்பு

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி,
94434 39963

சென்ற இதழில் ஆண்டாள், பாடிய திருக்கல்யாண வைபவத்தைப் பற்றிப் பார்த்தோம். இந்த சடங்குகள் எப்படி நடத்த வேண்டும்? இதன் அர்த்தம், விசேஷங்கள் என்ன? இதனை ஆழ்வார்கள் எந்தெந்த இடத்தில் பாடி இருக்கின்றார்கள்? நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் இவற்றை நாம் எப்படிப் பின்பற்றி வருகின்றோம் என்பதைப் பற்றித் தொடர்ந்து பார்க்க இருக்கின்றோம்.

வேதத்தில் கர்ம காண்டம், ஞான காண்டம் என்று இரண்டு பகுதிகள் இருக்கின்றன. அதில் கர்ம காண்டத்தில் பல கர்மாக்கள் வலியுறுத்தப்படுகின்றன. அந்த கர்மாக்களின் மூலமாக மட்டும்தான் நாம் நம்முடைய ஆத்மாவையும் உடலையும் தூய்மையாக்கிக் கொள்ள முடியும். நம்முடைய ஆத்மாவிற்குத் தூய்மையைத் தருவதற்காகவே நம்முடைய வேத மதத்தில் பல விதமான சம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டுள்ளன. அதில் ஒன்று திருமணம் (விவாகம்). இச்சடங்கு மற்ற சடங்குகளுக்கு அடித்தளமாக இருக்கிறது.

உதாரணமாக உபநயனம் என்பது (பூணூல் போடுவது). இல்லறம் நடத்தி ஒரு குழந்தை இருந்தால்தான் நாமகரணம், அன்னப்ராசனம், உபநயனம் போன்றவற்றையெல்லாம் நடத்த முடியும். திருமணம் நடந்தால்தான் கர்ப்பதானம் முதலிய விஷயங்கள் வரும் (விதிவிலக்கு உண்டு). திருமணமானால்தான் பெண்ணுக்கு பும்ஸவனம், சீமந்தம் முதலியவற்றை நடத்த முடியும்.

எனவே மற்ற சம்ஸ்காரங்களுக்கெல்லாம் ஆணிவேராக விளங்குவதுதான் திருமணம். திருமணம் என்பது ஆத்ம பந்தம். வேத தர்மத்தின் அநேக விஷயங்களை அனுஷ்டிப்பதற்கானத் தகுதியைத் தருவது இது.

விவாகத்தின் போது சொல்லப்படும் ஒவ்வொரு மந்திரங்களையும் நாம் கவனித்தால், அந்த மந்திரங்கள், தம்பதிகள் எப்படி வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகின்றன என்பதைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளலாம்.

திருமணங்கள் எல்லாமே பெண்ணின் பெயரோடுதான் பிரசித்தமாக அழைக்கப்படுகின்றன. சீதாகல்யாணம், ஆண்டாள் கல்யாணம், பத்மாவதி கல்யாணம், ருக்மணி கல்யாணம், ராதா கல்யாணம் என்றும், (சைவத்தில் மீனாட்சி கல்யாணம், வள்ளி தெய்வானை திருமணம், பார்வதி திருமணம் என்றும்) சொல்கிறோம்.

மனுஸ்மிருதி இந்தத் திருமணங்களை எட்டு விதமாகப் பிரித்துச் சொல்லுகின்றது.



*"ப்ராம்மோ தைவ
ஸ்ததைவார்ஷ:
பிராஜாபத்யா
ஸ்ததாசுர:
காந்தர்வோ
ராக்ஷஸஸ்சைவ
பைஸாஸாஷ்டம
ஸம்ருத:"*

இத்திருமணங்களைப் பற்றி தமிழ் நூலான தொல்காப்பியமும் கூறுகிறது.

1) பிரம்ம விவாகம், 2) தைவ விவாகம், 3)ஆர்ஷ விவாகம், 4)ஆசுர விவாகம், 5) கந்தர்வ விவாகம், 6) ராட்சச விவாகம், 7) பைசாச விவாகம், 8) பிராஜா பத்ய விவாகம். முதல் வகையானது அறநிலை என்று சொல்லப்படுகின்ற பிரம்ம விவாகம். அதாவது ஒரு கன்னிகையை அணிகலன்கள் அணிவித்து அலங்கரித்து கௌரவமான முறையில், பிரம்மச்சாரியாக இருக்கின்ற சரியான காலத்தில், நல்ல முகூர்த்தத்தில் தானமாகக் கொடுப்பது. இதனை கன்னிகாதானம் என்று சொல்லுவார்கள். இருக்கக்கூடிய தானத்திலேயே மிக உயர்ந்த தானம் இந்த கன்னிகாதானம்.

பொதுவாக நம்முடைய சாஸ்திரங்கள் எல்லாமே புத்திர ப்ராப்தியைப் பற்றிப் பேசுகின்றன. புத்திர ப்ராப்தி இல்லாதவர்க்கு புத் என்கிற நரகம் கிடைத்து விடும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதாவது பெற்றோர்களுக்குக் கடைசியாக செய்ய வேண்டிய சரம காரியங்களைச் செய்வதற்கு ஒரு புத்திரன் வேண்டும். அப்போதுதான் பெற்றோர்கள் நற்கதியை அடைவார்கள் என்று சாத்திரம் கூறுவது உண்மைதான்.

ஆனால் குழந்தைகளே இல்லாதவர்களுக்கும், அல்லது பெண் குழந்தை மட்டும் உள்ளவர்களுக்கும் சந்நியாசிகளுக்கும் என்ன கதி என்கிற ஒரு கேள்வி எழுகின்றது. உண்மையில் பகவானிடத்தில் சரணடைந்த ஒவ்வொருவருக்கும் மோட்சம் உண்டு என்பதுதான் நம்முடைய அறநூல்கள் கூறும் செய்தி.



இராமாயணத்தில் தசரதன் தனக்குப் பிள்ளை இல்லையே என்பதற்காக மிகவும் வருந்தினான். வெகுகாலம் அவனுக்குக் குழந்தை இல்லை. அதற்கான காரணத்தை தசரதன் சொல்கின்றான். எனக்கு நரகம் கிடைக்காமலிருக்க என் சொத்துக்களை அனுபவிக்க வாரிசு வேண்டும் என்று கேட்கவில்லை. தன் குலம் விளங்க பிள்ளை வேண்டும் என்கிறான்.


*அறுபதினாயிரம் ஆண்டு மாண்டு உற
உறுபகை ஒடுக்கி இவ்வுலகை ஓம்பினேன்
பிறிது ஓர் குறை இலை என்பின் வையகம்
மறுகுறும் என்பது ஓர் மறுக்கம் உண்டு அரோ*

*அருந்தவ முனிவரும் அந்தணாளரும்
வருந்துதல் இன்றியே வாழ்வின் வைகினார்
இருந்துயர் உழக்கும் என்பின் என்பது ஓர்
அருந்துயர் வருந்தும் என் அகத்தை என்றனன்.*

"அறுபதினாயிரம் ஆண்டுகள் இந்த ராஜ்ஜியத்தை நன்றாகக் காத்தேன். பகைவர்களை ஒடுக்கினேன். என் காலத்திற்குப் பின் என்னுடைய மக்களுக்குத் தொண்டு செய்வதற்காக ஒரு பிள்ளை இல்லையே! என் செய்வேன்! அது மட்டுமே குறை" என்று தன் குரு வசிட்டரிடம் சொல்கிறான்.

"அருந்தவ முனிவர்களும், வேதம் ஓதும் அந்தணர்களும், இதுவரை, ஒரு வருத்தமும் இன்றியே இருந்தனர். என் காலத்துக்குப்பின், அவர்களைக் காப்பாற்றும் மன்னனின்றி, பலப்பல துயரங்கள் வந்து விடும் என்கிற துயரம் மட்டுமே எனக்கு" என்கிறான்.





## சாஸ்த்திர நீதிகள்–79

யச்மிந் தேசேந சந்நாநோ ந ப்ரீதீ ந ச பாந்தவா |
ந வித்யா நாஸ்தி தனிகா ந தத்ர திவசம் வசேது ||

எந்த தேசத்தில் குளிக்க வசதிகள் இல்லையோ, பிரியமான பொது ஜனங்கள் இல்லையோ! உறவினர்களும், படிப்பு அறிவு பெற வசதியும் இல்லாத கிராமத்திலும், உபகாரம் செய்யக்கூடிய மனிதர்கள் இல்லாத கிராமத்திலும் ஒரு நிமிடம் கூட தங்கி விடக் கூடாது!

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.




இதை மனதில் கொண்டே ஆண்டாளும், வாரண மாயிரம் கடைசிப் பாசுரத்தில், வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ்வரே என்று மக்கட்பேறு பற்றிப் பாடி முடித்தாள்.

நன்மக்கள் என்பதற்கு என்ன பொருள் என்பதை அவருடைய தந்தையாகிய பெரியாழ்வார் ஒரு பாசுரத்தில் அருளிச் செய்திருக்கிறார். *''மணிவண்ணன் தாள் பணியும் மக்களைப் பெறுவதே நன்மக்கட்பேறு''.*

சரி. பெண் குழந்தை உள்ளவர்கள் தங்களுக்கு ஆண் குழந்தை இல்லையே. அதனால் தங்களுக்கு கதி மோட்சம் கிடைக்காதா என்று ஒரு ஏக்கம் இருக்கும் என்று பார்த்தோம் அல்லவா. உண்மையில் சாஸ்திரம் எப்படி சொல்லுகிறது தெரியுமா..?

ஒரு ஆண் குழந்தையைப் பெற்றவர்களை விட, ஒரு பெண் குழந்தையைப் பெற்றவர்கள் சிறப்புக்குரியவர்கள் என்கிறது. காரணம் என்ன தெரியுமா?

தன் பெண்ணை உரிய காலத்தில் பிரம்மச் சாரியாக இருக்கக்கூடிய ஒருவனுக்குக் கன்னிகா தானம் செய்து கொடுப்பதன் மூலமாக அவருடைய இருபத்தோரு தலை முறைகள் பிரம்மலோகம் அடைகின்றன. கன்யாதானம் செய்வதற்கு முன் மஞ்சள் படுத்திய தேங்காய் தாம்பூலத்தை வைத்து ஒரு ஸங்கல்பம் செய்வது உண்டு. அந்த மந்திரம் இது.



*''தஸானாம் பூர்வேஷாம், தஸானாம் பரேஷாம், ஆத்மநச்ச, குலோத்தாரணத்வாரா, நித்ய, நிரதிஸய, ஆநந்த, ஸாஸ்வத, ப்ரம்மலோக வாப்யர்த்தம், கன்னிகாதானாக்ய மகாதானம், கர்த்தும் யோக்யதா ஸித்திம் அனுக்ரகாண...''*

இந்த மந்திரத்துக்கு என்ன பொருள்?

"என்னுடைய முந்தைய 10 தலைமுறையும், எனக்குப் பின்னால் வருகின்ற பத்து தலை முறையும், நானாகிய ஒரு தலைமுறையும் சேர்ந்து, இருபத்தோரு தலை முறை, நித்ய, நிரதிசய, பிரம்ம லோகம் கிடைக்க வழி செய்த, இந்த கன்னிகாதானத்தை மேற்கொள்ளுகின்ற தகுதியை, எனக்குக் கொடுக்க வேண்டும்".

இந்த வாய்ப்பு ஆழ்வார்களிலே பெரியாழ்வாருக்கும், குலசேகர ஆழ்வாருக்கும் கிடைத்தது. ஏன் பெண்ணைப் பெற்ற ஒவ்வொருவருக்கும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எப்படி? தொடர்ந்து பார்ப்போம்.

அருளிச்செயல் தொடரும்...



# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

## பும்சவன விரதம்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி-9676695443

"பும்சவனம்" என்னும் விரதத்தைப் பற்றிய கதை ஸ்ரீமத்பாகவதத்தில் ஆறாம் ஸ்கந்தத்தில் வருகிறது. அசுரர்களின் தாயாகிய திதி மேற்கொண்ட இவ்விரதத்தின் விவரங்கள் இவ்வாறாக உள்ளது.

காசிப பிரஜாபதிக்கு அதிதி, திதி என இரண்டு மனைவிகள். அதிதிக்குப் பிறந்தவர் கள் தேவர்கள் ஆவர். அவர்களில் பதினோ ராவது பிள்ளையாகப் பிறந்தவன் தான் சொர்க்கத்திற்கு அரசனான இந்திரன். பிறகு பன்னிரண்டாவது பிள்ளையாகப் பிறந்தவர் தேவாதி தேவன். அவரே வாமனன். அந்த வாமனன் தான் பலிமஹாராஜாவிடமிருந்து மூன்றடி மண் கேட்டு, மூவுலகத்தையும் அளந்து பெற்று, அதைத் தன் சகோதர னாகிய இந்திரனுக்குக் கொடுத்தான்.

அதேபோல் காசிபரின் இரண்டாவது மனைவியாகிய திதிக்குப் பிறந்தவர்கள் தைத்யர்களாக அறியப்படுகிறார்கள். இருப் பினும் அந்த வம்சத்தில் பக்த பிரகலாதன், பலிமஹாராஜா போன்ற மஹாபாகவதர்கள் பிறந்தார்கள். திதிக்கு இரண்யாக்ஷன், இரண்ய கசிபு என்ற இருவர் பிறந்தனர். இவர்களுக்குப் பிறகு நாற்பத்தொன்பது குழந்தைகள் பிறந்தனர். அவர்கள் மருந் துகள் என்ற பெயரில் தேவர்களானார்கள். திதி கர்ப்பத்தில் அவர்கள் பிறந்திருந்தாலும் அவர்களுக்கு இந்திரன் தேவத்துவத்தை பிரசாதித்தான். இதற்குத் தொடர்புடையதே பும்சவன விரதம்.

இந்திரனுக்கு உதவுவதற்காக விஷ்ணு பகவான் இரண்யா க்ஷனையும் இரண்யகசிபுவையும் வதம் செய்தான். தன் பிள்ளைகள் வதம் செய்யப்பட்டதைக் கண்டு தாயின் உள்ளம் துடித்தது. புத்திர சோகத்தில் இருந்த அவள் இதற்குக் காரணமாக இருந்த இந்திரன் மேல் மிகவும் கோபம் கொண்டிருந்தாள். அதற்கு இந்திரனைக் கொல்லக் கூடிய பலசாலியான பிள்ளை ஒருவனைப் பெற வேண்டும் என நினைத்தாள். தான் நினைத்தது நடைபெற வேண்டும் என்றால் தன் கணவனின் அனுக்கிரகம் நிச்சயம் வேண்டும் என்பதை அறிந்த திதி காசிபரை மிகவும் பணிவோடு வணங்கினாள். அவளுடைய வணக்கத்தை ஏற்றுக் கொண்டு மனம் மகிழ்ந்த காசிபர், உனக்கு என்ன வரம் வேண்டுமோ கேள் எனக் கூறினார்.

மிகவும் பலசாலியான தன் கணவர் வரம் தருவதாகக் கூறியவுடன், தக்க தருணத்திற்காக காத்துக் கொண்டிருந்த திதி, தன் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருந்த எண்ணத்தை வெளிப்படுத் தினாள், "சுவாமி! நான் இப்பொழுது என் பிள்ளைகளை இழந்து நிற்கின்றேன். தாங்கள் எனக்கு வரம் கொடுக்க நினைத்தால், இந்திரனை கொல்லக் கூடிய பலசாலியான ஒரு பிள்ளையை எனக்கு பிரசாதிக்க வேண்டும் என்றாள். விஷ்ணுவின் துணையோடு இந்திரன் என் பிள்ளைகளை வதம் செய்தான். எனவே தான் இவ்வரத்தை உம்மிடம் வேண்டுகிறேன்" என்றாள். அவள் கூறியதைக் கேட்டு காசிப

பிரஜாபதி திடுக்கிட்டார். வாக்குறுதி கொடுத்துத் தான் மோசம் போய் விட்டதை உணர்ந்தார். இருப்பினும் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும் என்பதால் "பெண்ணே! உன் விருப்பம் நிறை வேற வேண்டும் என்றால் நீ ஒரு விரதம் மேற் கொள்ள வேண்டும். அவ்விரதத்தை செய்ய நான் கூறும் முறையைக் கடைப்பிடித்து ஒழுக வேண்டும். அப்படி செய்தால் இந்திரனை வதம் செய்யக் கூடிய பிள்ளையை நீ பெறுவாய். ஒரு வேளை அவ்விரதத்தில் குறை ஏதாவது ஏற்பட்டு விடுமேயானால் பிறக்கும் பிள்ளை இந்திரனுக்கு அனுகூலமானவனாக இருப்பான்" எனக் கூறி வாழ்த்தி வரம் தந்தார்.

திதியின் மூலமாக வைஷ்ணவ விரதத்தைச் செய்வித்து, அதன் வாயிலாக அவளை வைஷ்ணவியாக மாற்றுவதே காசிபரின் நோக்கமாகும். மேலும் இந்திரனை வதம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தைப் போக்கி, தூயவளாக மாற்றுவதே அவரின் எண்ணமாக இருந்தது. "இந்திரஹோதேவபாந்தவ:" என்று கூறிக் காசிபர் வாழ்த்தினார். "இந்திரஹோ" என்ற சொல்லுக்கு இந்திரனை அனுசரித்து நடப்பவன் என்றும், இந்திரனின் கட்டளையை ஏற்று நடப்பவன் என்றும் பொருள் கூறலாம். "இந்திரஹோ–தேவ பாந்தனு" என்றால் உன் பிள்ளை இந்திரனை வதம் செய்வான். இருப்பினும் அவன் தேவர்களுக்கு நெருக்கமான நண்பனாகவும் இருப்பான் எனப் பொருள். தேவர்களுக்கு நெருக்கமானவனாக இருந்தால் இந்திரனை எப்படி கொல்ல முடியும்? இவ்வாறாக இரண்டுக்கும் இடைப்பட்ட நிலையான வார்த்தையை காசிபர் திதியிடம் கூறினார். மேலும், "தேவி! இந்த விரதத்தின்போது ஹிம்சை செய்யக்கூடாது. எவருக்கும் துன்பம் விளைவிக்கக் கூடாது. எவரையும் சபிக்கக் கூடாது. பொய் சொல்லக் கூடாது. நகங்களையும், முடியையும் வெட்டக் கூடாது. கபாலம், எலும்புகள் போன்ற அசுத்தமான பொருள்களைத் தொடக்கூடாது. நதியில் இறங்கி ஸ்நானம் செய்தல் கூடாது. கோபம் கூடாது. தீயவர்களுடன் நட்பும், வார்த்தையாடுதலும் கூடாது. அசுத்தமான ஆடைகளை அணியக் கூடாது. ஒரு முறை அணிந்த பூமாலையை மறுமுறை அணியக் கூடாது. எச்சில் உணவை உண்ணக் கூடாது. கீழோர் கொண்டு வந்த அல்லது தொட்ட உணவை உண்ணக் கூடாது. மாதவிலக்கு ஏற்பட்ட பெண் தொட்ட உணவை உண்ணக் கூடாது. இரண்டு கைகளாலும் தண்ணீரை அள்ளிப் பருகுதல் கூடாது."

"என் விருப்பத்திற்குரியவளே! உணவு உண்ட பின்பு வாய், கால் கைகளைக் கழுவாமல் வெளியே செல்லக் கூடாது. சந்தியா காலத்திலும் மற்றும் கூந்தலை விரித்துப் போட்டுக் கொண்டும், ஆபரணங்களை அலங்கோலமாக அலங்கரித்துக் கொண்டும் வீதியில் செல்லக் கூடாது. பேச்சைக் கட்டுப்படுத்தாமலும், உடல் முழுவதும் ஆடையால் மூடாதபடி வெளியே செல்லக் கூடாது. கால்களைக் கழுவாமலும், ஈரக்கால்களோடு படுக்கைக்குச் செல்லக் கூடாது. வடக்கு, மேற்குத் திசைகளில் தலை வைத்துப்படுக்கக் கூடாது. ஆடைகள் களைந்து உறங்கக் கூடாது. சூரியோதயத்தின் போதும் சூரியஸ்தமத்தின் போதும் உறங்கக் கூடாது".

"தூய்மையான ஆடைகளை உடுத்திக் கொண்டு எப்பொழுதும் தூய்மையாக இருக்க வேண்டும். மஞ்சள் சந்தனம் முதலிய மங்களகரமான பொருள்களால் அலங்கரித்துக் கொண்டு, பகல் உணவுக்கு முன்பாக பசுக்கள், அந்தணர்கள், லக்ஷ்மி தேவி, அச்சுதன்

## ஸ்ரீமத்பாகவதம் விடைகள்

1. **பரதன்.**
2. **ததிசீ முனிவர், விஸ்வ கர்மா.**
3. **நாரத ரிஷி, ஓம் நமோ பகவதே வாசுதேவாயா.**
4. **ஸ்ரீமந்நாராயணனே எதிரில் தோன்றியது.**
5. **பாஞ்சஜன்யம் (சங்கு).**
6. **பிரகலாதன், தேவதையின் ஸ்வரூபம்.**
7. **சண்டா, மர்கறு.**
8. **பகவானின் ஸ்மரணம்.**
9. **நீரிலும், நெருப்பிலும், கொடூர விலங்கும், சர்ப்பங்கள் இருக்கும் இடத்திலும் பல பல கடினமான யுக்திகளை கையாண்டான்.**
10. **ஹரி தூணிலும் துரும்பிலும் இருப்பார் என்று கூற, பகவான் நரசிம்ம அவதாரம் எடுத்து இரண்ய கசிபுவை வதம் செய்தார்.**

தொகுப்பு : திருமதி. என். ஹேமா, திருப்பதி

போன்றோருக்கு பூஜை செய்தல் வேண்டும். விருப்பத்திற்குரியவளே! இவ்விதமாக ஒரு வருட காலம் நியமம் தவறாமல் அனுஷ்டித்து வந்தால் இந்திரனை கொல்லக் கூடிய மகன் உனக்குப் பிறப்பான். ஆனால் இவ்விரதத்தில் ஏதாவது குறை உண்டானால் உன் பிள்ளை இந்திரனுக்கு நண்பனாக இருக்கக்கூடியவனாக இருப்பான்.

கணவர் கூறிய விரத முறைகளை கேட்டறிந்த திதி அவற்றை கடைப்பிடிக்க சம்மதித்தாள். திதி மேற்கொண்டுள்ள விரதச் செய்தி இந்திரனுக்கு தெரிய வந்ததும் அவன் திடுக்கிட்டுப் போனான். தன் தாயின் தங்கையான திதி தன்னை கொல்வதற்கு மேற்கொண்டுள்ள விரதத்தை எப்படியாவது ஈடேறாமல் செய்து விட வேண்டும் என்று திட்டமிட்டான். சிறிய தாயான அவளிடம் பாசம் உள்ளவன் போல் நடித்தும், அவள் உடல் நலத்தில் அக்கறை உள்ளவன் போல் பாசாங்கு செய்தும், அவள் ஆசிரமத்திற்குள்ளே வந்து அவளுக்குப் பலவிதமான பணிவிடைகள் செய்து வந்தான். ஒரு நாள் சந்தியா காலத்தில் திதி உறங்கி விட்டாள்.

கடுமையான விரதம் மேற்கொண்டு வந்ததால் அசதி காரணமாய் அவளால் எழுந்திருக்க முடிய வில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை இந்திரன் பயன்படுத்திக் கொண்டான். தன்னுடைய யோக சக்தியால் அவன் திதியின் கர்ப்பத்தில் நுழைந்து, தன் கையில் உள்ள வஜ்ஜிராயுதத்தைக் கொண்டு தங்கம் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கும் கருவை அவன் ஏழு துண்டுகளாக வெட்டினான். துண்டாக்கப்பட்ட அந்த கரு அலறி அழத் தொடங்கின. “அழுவாதீர்கள் அழுவாதீர்கள்” எனச் சொல்லிக் கொண்டே இந்திரன் அந்த ஏழு துண்டுகளையும் மற்றுமொரு ஏழேழு துண்டுகளாக வெட்டினான்.

அப்பொழுதும் அந்த நாற்பத்தொன்பது துண்டுகளிலும் ஜீவன் இருப்பதைக் கண்டான். அவைகள் இந்திரனை வணங்கி, “இந்திரனே! நாங்கள் மருந்துகள். உன்னுடைய சகோதரர்கள். எங்களை ஏன் கொல்ல வேண்டும் என்று நினைக்கின்றாய்?” என்று கேட்டனர். உண்மையில் அவர்கள் யாவரும் தனக்கு அன்பர்களே என்பதை உணர்ந்த இந்திரன் தன் சகோதரர்களால் தனக்கு அச்சமில்லை எனக் கூறி அவர்களைக் கொல்லும் காரியத்தைக் கைவிட்டான்.

ஒரு வருடக்காலம் விஷ்ணு விரதம் செய்து ஆன்மீகப் பலம் பெற்ற காரணத்தினால் திதி கர்ப்பத்தில் இருந்த யாவரும் தேவர்கள் ஆனார்கள்.

திதி பிள்ளைகளுக்கு அமரத்துவத்தை பிரசாதித்த பும்சவன விரதம் இவ்வாறாக மேற்கொள்ளப்படுகிறது. மார்கழி மாதத்தில் கணவரின் துணையோடு பத்தினியாகிய மனைவியால் இவ்விரதம் மேற்கொள்ளப்படுகிறது. விஷ்ணுவை பூஜிப்பதற்கு முன்பாக, அவள் மருந்துகளின் பிறப்புக் கதையை கேட்டல் வேண்டும்.

வேதபண்டிதர்களான பிராமணர்களின் அறிவுரையின்படி லக்ஷ்மி நாராயண பூஜையை ஆரம்பிக்க வேண்டும். லக்ஷ்மி நாராயணனை முறைப்படி பூஜித்தப் பின்பு அவள் மந்திரங்களை உச்சரித்தவாறு பன்னிரண்டு ஆகுதிகளை சமர்ப்பிக்க வேண்டும். தூபதீப நைவேத்தியங்களோடு அர்ச்சித்தப் பிறகு அவள் பகவத் பிரசாதத்தை கணவனுக்கு சமர்ப்பிக்க வேண்டும். முறையாக இந்த விரதத்தை மேற்கொள்ளும் ஆண்கள் அவர்கள் கோரிக்கைகள் அனைத்தும் இந்த ஜென்மத்திலேயே இறைவனால் நிறைவேற்றப்படுகின்றன.

மேலும், மனைவி சௌபாக்கியத்தையும் , ஐச்வர்யத்தையும், நல்ல மக்கட்பேற்றையும், தீர்க்காயுளை உடைய கணவனையும், அனைத்து செல்வங்களையும், நல்ல வீட்டையும் பெறுவாள். திருமணமாகாத கன்னிப் பெண் கள் இவ்விரதத்தை மேற்கொண்டால் உத்தமமான கணவனைப் பெறுவார்கள். கணவன் மற்றும் பிள்ளைகள் இல்லாத பெண்கள் இவ்விரதத்தைச் செய்தால் அவர்கள் ஆன்மீக உலகத்தைச் சென்றடைவர்.

பிறக்கும்போதே இறந்து பிறக்க வேண்டிய குழந்தைகளும் தாய் இவ்விரதத்தை மேற்கொள்வதினால் தீர்க்காயுள் உடைய பிள்ளைகளாய்ப் பிறப்பர். அதுமட்டுமின்றி அவள் ஐச்வர்யம் உடையவளாயும் ஆவாள். அழகற்ற ஒரு பெண் அழகானவளாகவும், உடல் ஆரோக்கியம் இல்லாதவர்கள் உடல் நலம் பெற்றவர்களாகவும் ஆவார்கள். இவ்விரதம் மேற்கொள்பவர்கள் ஸ்ரீலக்ஷ்மி நாராயணனுக்கு மிகவும் நெருக்கமானவர்களாயிருப்பர்.

பாகவத கதை சாகரம் தொடரும்...

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

**ஆண்டாள் வாழித்திருநாமம்...**

ஆண்டாள் ஆடி மாதம் பூர நக்ஷத்ரத்தில் ஸ்ரீவில்லி புத்தூரில் அவதரித்தவள். பூமிப்பிராட்டி அம்சமான ஆண்டாள் அருளிய பிரபந்தங்கள் திருப்பாவையும், நாச்சியார் திருமொழியுமாகும்.

*“திருவாடிப்பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே*
*திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே*
*பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே*
*பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே*
*ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே*
*உயர் அரங்கற்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே*
*மருவாரும் திருமல்லி வளநாடி வாழியே*
*வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே”*

(பதவுரை) திருவாடிப்பூரத்தில் – அழகிய ஆடி மாதம் பூரம் என்னும் நக்ஷத்ரத்தில், செகத்து – இவ்வுலகில், உதித்தாள் – தோன்றினாள், வாழியே – வாழ வேண்டும். திருப்பாவை முப்பதும் – திருப்பாவை என்னும் 30 பாசுரங்கள் கொண்ட பிரபந்தத்தை, செப் பினாள் – அருளினாள். பெரியாழ்வார் – விஷ்ணுசித்தர் என்னும் பெயர் கொண்ட பெரியாழ்வார், பெற்றெடுத்த, பெண்பிள்ளை – பெண் குழந்தையான ஆண்டாள். பெரும்பூதூர்– ஸ்ரீபெரும்பூதூரில் அவதரித்த, மாமுனிக்கு – இராமாநுஜருக்கு, பின்னானாள் – பின் பிறந்தவளாகக் கருதப்படுமவள், ஒரு நூற்று நாற்பத்து மூன்று – 143 பாசுரங்கள் கொண்ட நாச்சியார் திருமொழி என்னும் பிரபந்தத்தை, உரைத்தாள் – அருளினாள். உயர் அரங்கற்கே – உயர்ந்த திருவரங்கத்தில் பள்ளிகொண்ட அரங்கனுக்கே, கண்ணி – திருமுடியில் மாலையை, உகந்து – தான் அணிந்ததால் வந்த உகப்பு தோன்ற, அளித்தாள் – அரங்கனுக்கு அளித்தாள். மருவாரும் – வாசனை நிறைந்த, திருமல்லி – அழகான மல்லி என்னும், வளநாடி – செழுப்பான நாட்டுக்குத் தலைவியானவள். வண்– அழகிய, புதுவைநகர் – ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் நகரில், கோதை – ஆண்டாளுடைய, மலர்ப்பாதங்கள் – மலரை ஒத்த திருவடிகள், வாழியே – வாழ வேண்டும்.

(சிறப்புரை) *(திருவாடிப்பூரத்தில் செகத்துதித்தாள்)* – செகத்து – வடமொழியில் “ஜகத்” என்பது தமிழில் “செகத்து” ஆயிற்று – உலகம் என்று பொருள். செகத்து உதித்தாள் – உலகுக்கெல்லாம் செல்வமாகத் தோன்றின ஸர்வேச்வரனுக்குச் செல்வமாகவும், ஸத்துவ குணமுள் ளவர்களுக்கு செல்வமாய் இருப்பவளு மான ஆண்டாள் அவதரித்தாள் என்ற படி. *“இன்றோ திருவாடிப் பூரம்!”* என்று உபதேசரத்ன மாலையில் மணவாள மா முனிகள் கொண்டாடுகிறார். திரு வாடிப்பூரம் என்ற சிறப்பான திருநக்ஷத்ரம் இன்றோ! இப்படி இருப்பது ஒரு நாள் நமக்கு கிடைக் கப்பெற்றது இன்றோ! கிடை யாதது கிடைத்தால் அது தான் ஈடு பாட்டுக்குக் கார ணமாக வன்றோ இருப்பது. இதற்குக் காரணம் குழந்தை கிணற்றிலே விழுந்தால் ஒக்கக் குதித்து எடுக்கும் தாயைப்போலே, பிறவி யில் மூழ்கினவர்களான நம்மை எடுக்கைக்காக



எல்லா உலகுக்கும் தாயான ஆண்டாள் இவ்வுல கில் வந்து பிறந்தாள் என்றபடி. ராஜாவினுடைய மனைவியான ராணி, ராஜாவினுடைய பூம்படுக் கையை அலட்சியம் செய்து குழந்தையினுடைய தொட்டிலைக் கட்டிக் கொண்டு கிடந்து காக்குமா போலே, ஆண்டாளும் குன்றாத வைகுந்த வான் போகத்தை விட்டு இந்த செகத்தில் வந்து தோன்றி னாள். மேலும், "ஆண்டாள் பிறந்த திருவாடிப்பூரத்தின் சீர்மை ஒரு நாளைக்கு உண்டோ மனமே உணர்ந்து பார்" என்கிறார் மாமுனிகள்.


*(திருப்பாவை முப்பதும் செப்பினாள்)* – (திருப்பாவை) – வடமொழியில் ஸ்ரீ என்பது போல தமிழில் திரு என்பது பல பொருள் ஒரு சொல்லாகும். இங்கு திரு–மேன்மை, பாவை – என்பதும் பலபொருள் ஒரு சொல்லாகும். இங்கு பாவை – நோன்பு, மேன்மை என்ற பொருளில் மேன்மையான நோன்பு என்று பண்புத்தொகையாக ஆவது, மேன்மையுடைய நோன்பு என்று சிறப்பாக இரண்டன் உருபும் உடன் தொக்கத் தொகையாக ஆவது விரிவதாகும். ஆண்டாள், கிருஷ்ணா வதாரத்தில் ஐந்து லக்ஷம் குடியில் ஆயர்பாடிப் பெண்களும் கூடி கண்ணனைப் பெறுகைக்கு மார்கழி நீராடி நோற்ற நோன்பை, பிற்பட்டவர்களும் நினைக்கும்படி கண்ண பிரானை நோக்கி பிரபந்தமாக அருளிச் செய்தது திருப்பாவை என்று பெயர் பெற்றது. நோன்பு என்னும் காரியத்தைக் கூறும் பெயர் அக்காரியத்தைக்கூறும் பிரபந்தத்தை உணர்த்துவ தால் காரிய ஆகு பெயர் என்பர். எனவே திருப்பாவை என்ற சொல் அடையடுத்த ஆகு பெயராகும். அன்மொழித் தொகை யாகவும் கொள்ளத்தகும். இப்பிரபந்தத்தில் உள்ள முப்பது பாட்டுக்களில் இறுதிப்பாட்டு நீங்கலாக *''ஏலோரெம் பாவாய்''* என்றும், இறுதிப் பாட்டு *''எம்பாவாய்''* என வருதலால் "திருப்பாவை" என்று பெயர் அமைந்ததாகவும் கூறுவர். முப்பதும் – உம் – சிறப்பு உம்மை. ஒரு பாட்டும் நழுவாத என்றபடி. *"சங்கத்தமிழ் மாலை முப்பதும் தப்பாமே"* என்பது ஆண்டாள் வாக்கு.

செப்புதல் – சொல்லுதல். முப்பது பாட்டின் கருத்தாவது, 1 கண்ணனைக் கொண்டாடிக் கொண்டு நோன்பிலே இழிவதைக் கூறுதல், 2 நோன்புக்கு அங்கமாக செய்ய வேண் டுவதையும் விட வேண்டியதையும் கூறுதல், 3 நோன்புக்கு அநுமதி பண்ணின நாட்டார்க்கு உண்டாகும் பயனைச் சொல்லுதல். 4 மழையை வேண்டி அத்தால் வரும் பயனைச் சொல்லுதல், 5 நோன்புக்கு தடையான பாபங்கள் எம்பெருமானை வாயினால் பாடி, மனத்தினால் சிந்தித்தால் தன்னடையே போகும் என்றதை உரைத்தல், ஆறாம் பாட்டு தொடங்கி பதினைந் தாம் பாட்டு வரை உள்ள பத்து பாடல்க ளாலே பத்து பெண்களை எழுப்புதல், 16 திரு வாசல் காக்குமவர்களை எழுப்புதல், 17 நந்தகோபர், யசோதைப் பிராட்டி, கண் ணன், நம்பி மூத்தப்பிரான் ஆகியோரை முறைப்படி எழுப்புதல், 18 நப்பின்னைப் பிராட் டியை பலவாறாகச் சொல்லி எழுப்புதல், 19, 20 இரண்டு பாடல்களால் நப்பின்னை, கண்ணனை சேர எழுப்புதல், 21,22 தாங்கள் குணங்களுக்குத் தோற்று வந்தபடியையும், அபிமானம் போய் வந்த படியையும் சொல்லி எழுப்புதல், 23 சீரிய சிங்கா சனத்தில் ஆஸ்தானம் கொண்டு எழுந்தருள வேண்டுதல், 24 ஆஸ்தானத்தில் வந்த கண்ண னுடைய வீர சரிதத்துக்கு போற்றி போற்றி என்று சொல்லி வாழ்த்து தெரிவித்தல், 25 தாங்கள் யாசகர் களாய் வந்ததைச் சொல்லுதல், 26 நோன்புக்கு உரிய உபகரணங்களை வேண்டுதல், 27 நோன்பு நோற்றபின் பெறும் ஸந்மானங்களைப் பெற வேண் டுதல், 28 தங்கள் சிறுமையையும் அவன் பெருமை யையும் சொல்லிப் பிழைகளைப் பொறுத்தருள வேண்டுதல், 29 தங்களுடைய உணர்வை வெளிப் படையாகக் கூறி அதனை நிறைவேற்ற வேண்டும் என்று நிர்ப்பந்தித்து பிரார்த்தித்தல், 30 பயனு ரைக்கும் பாடலாக எம்பெருமான் திருவருள் பெற்று மகிழ்வர் என்று சொல்லுதல், இத்தகைய பெருமை படைத்த திருப்பாவையானது பாதகங்கள் தீர்ப்ப தாய், பரமனடி காட்டுவதாய், வேதமனைத்துக்கும் வித்தாகும் என்பர். வேதாந்த தேசிகர் தாம் அருளிய பிரபந்த சாரத்தில் *"நேயமுடன் திருப்பாவை பாட்டு ஆறைந்து நீ உரைத்த"* என்று அருளியது காண்க.

*(பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை)* திருமாலுக்குப் பொங்கும் பரிவாலே என்ன தீங்கு வருமோ என்று அஞ்சி பல்லாண்டு பல்லாண்டு என்று வாழ்த்துகூறியதாலே பட்டர் பிரான் என்னும் இயற் பெயரையுடையவர் பெரியாழ்வார் என்று பிரசித்தியானார். இவர் பெருமாளுக்குத் திரு மாலைக் கட்டுகையைத் தொழிலாக உடையவர். இவர் நந்தவனத்தில் திருத்துழாய்ச் செடிக் கீழே கிடைத்த பெண்ணை எடுத்துக் கொண்டு போய் தம்

மனைவியிடம் கொடுத்தார். மலடியாயிருந்த அவளும் இப்பெண்பிள்ளையை மிக்க அன்புடனே எடுத்துக் கொண்டாள். அப் போது அவளது கொங்கைகள் ஆண்டாளிடம் பாலைச் சொரிந்தன. ஈன்ற தாய்மார்க்கன்றோ தங்கள் குழந்தை பக்கல் இரக்கம் பிறந்து இப்படி யாவது. அந்த வகையில் பெரியாழ்வார் பெண்பிள்ளையாய்த் தோன்றிய மெய்ப்பாடு இங்கு பிறந்தபடி. எனவே, *''பெரியாழ்வார் பெற்று எடுத்த பெண்பிள்ளை''* என்றபடி. உலகுடைய நாச்சியாரே உலகத்திலே வந்து அவதரித்தது என்பர்.

*(பெரும்பூதூர் மாமுனிக்கு பின்னானாள்)* பெரும் பூதூர் – நான்முகனால் படைக்கப்பட்ட ருத்ரன் ஒரு சமயம் மாலை வேளையில் நடனம் ஆடினான். அதனைக் கண்டு சிரித்த பூதகணங்களைத் தன்னை விட்டு விலகும்படி ருத்ரன் சபித்தான். பின்னர் பிரமன் ஆலோசனைப்படி பூத கணங்கள் ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தில் கடும் தவம் செய்ய, அதனால் மகிழ்ச்சி அடைந்த திருமால், அவர்களுக்குக் காட்சி அளிக்க, அதனைக் கண்ட பூதகணங்கள் அழகான ஊரை நிர்மாணித்து இங்கேயே காட்சி அளிக்க திரு மாலை வேண்ட, அவரும் இசைந்தார். பூத கணங்களால் நிர்மாணித்த தேசம் பூதபுரி என்று வட மொழியிலும், தமிழில் பெரும்பூதூர் என்றும் வழங்கப்படுகிறது.



பெரும்பூதூர் – பெருமை – மை விகுதி கெட்டு பெரும் என்றாயிற்று. பூதூருக்கு பெருமையா வது இராமாநுசர் அவதரித்த பெருமையாகும். "எம்பெருமானா ராகிய பேரேரி" என்பர். பெரிய ஏரியாலே சூழப்பட்டது பெரும்பூதூர். எல்லா உயிரினங்களுக்கும் இருப்பு, வளர்ச்சி ஆகிய வற்றை உண்டாக் கும் ஊர். (மாமுனி)

*''சூடிக்கொடுத்தவள் தொல்லருளால் வாழ்கின்ற வள்ளல் இராமாநுசர்''* என்று திருவரங்கத்தமுதனார் அருளியபடியே ஆண்டாளுடைய இயல்பான கரு ணையே விளைநீராக வாழ்பவராய், வள்ளலாய், முனி வர்களுக்குள் உயர்ந்தவரானார் என்பதற்குச் சேர "மாமுனி" என்றபடி. (பின்னானாள்) ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழியில் திருமாலிருஞ்சோலை அழ கரைக் குறித்து "நாறுநறும் பொழில்" என்ற பாசுரத்தில் *''மாலிருஞ்சோலை நம்பிக்கு நான் நூறு தடாவில் வெண் ணெய் வாய் நேர்ந்து பராவி வைத்தேன் நூறு தடா நிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்''* என்கிறாள். அதாவது "அடியேன் அழகருக்கு நூறு தடாக்களில் (பானைகளில்) நிறைந்த வெண்ணெயை வாயாலே சொல்லி சமர்ப் பித்தேன்.

மேலும் நூறு தடா நிறைந்த அக்கார அடிசிலும் வாயாலே சமர்ப்பித்தேன்" என்கிறாள். பிற்காலத்தில் இதனை உணர்ந்த இராமாநுசர் தென் தேச யாத்ரையாகத் திருமாலிருஞ்சோலைக்குச் சென்றபோது ஆண்டாள் ஆசைப்பட்டு சமர்ப்பியாமலிருந்த நூறு தடா நிறைந்த அக்காரவடிசிலையும், நூறு தடா நிறைந்த வெண்ணெ யையும் அழகருக்கு சமர்ப்பித்தார்.

பின்னர் இராமாநுசர் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண் டாளை சேவித்த போது "எனது விருப்பம் இராமாநுசரால் தங்கையின் விருப்பத்தை தமையன் நிறைவேற்றுவது போல நன்கு நிறைவேற்றப்பட்டது" என்று ஆண்டாள் மிகவும் உவந்த உள்ளத்தையுடையவளாய் "கோயில் அண்ணர்" என்று அவருக்குத் திருநாமம் இட்டாள். இது பற்றியே ஆண்டாள் *''பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள்''* என்றபடி, திருமலை அநந்தாழ்வானும் தாம் அருளிய கோதா ஸ்துதியில் *''ப்ராதா சேத் யதிசேகர:''* என்று அருளியபடியே ராமாநுஜரை அண்ணராகச் சொன்னது காண்க.

வாழித்திருநாமம் வளரும்...

48

# 108 திவ்விய தேசவைபவம்







# வரகுணமங்கை

## (நவதிருப்பதி) (நத்தம்)

– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

இங்கு, உரோமசர் என்ற மஹரிஷி தவம் செய்து வாழ்ந்தபோது, அவருக்கு இருந்த சத்தியவான் என்கிற சிஷ்யன், ஒரு அதிசயத்தைப் பார்த்தான். அகநாச தீர்த்தம் என்கிற குளத்தில், செம்படவன் ஒருவன் வலை போட்டு மீன்களைப் பிடித்து உலர்த்தி வந்தான். தான் வாழ்வ தற்குப் பலப்பல மீன்களின் உயிர்களை மாய்க்கின்ற செம்படவன் செயல் கொடியதாகத் தோன்றிய சமயத் தில், அந்தச் செம்படவனைக் குளக்கரையில் கருநாகம் தீண்ட, செம்படவன் இறந்தான்.

பல உயிர்களை, நாள் தோறும் கொன்ற செம்பட வனின் உயிர், நரகவேதனைப்படும் என்று எண்ணிய சத்தியவான், ஆச்சர்யம் அடைந்தான். வானத்தில் ஒரு விமானம் தோன்ற, அதிலிருந்து பகவானின் அடியார்கள், குளக்கரைக்கு வந்து, செம்படவனின் ஜீவனை விமானத்தில் ஏற்றிக் கொண்டு சென்றனர். உயிர்க் கொலை புரிந்தவனுக்கு ஏன் நரகம் கிடைக்க வில்லை என்று ஆசார்யனைக் கேட்டான். அதற்கு, உரோமச முனிவர், வரகுணமங்கையில் பிறந்து அகநாச தீர்த்தக் கரையில் உயிர் பிரிந்ததால் அவர்களுக்கு உயர்கதியே கிடைக்கும். எப்படிப்பட்ட பாவியானாலும், உயர் கதியைப் பெறுவான் என்றார்.

இன்னொன்று,

ரேவா என்கிற ஆற்றங்கரையில் புண்யகோசம் என் கிற நகரம். இங்கு வேதத்தில் வல்ல "வேதவித்" என்கிற பிராம்மணன், மந்திரத்தை உருவேற்றி, மந்த்ரஸித்தியும் கடுமையான தபஸூம் செய்ய முயற்சிக்கும் போது, பக வான், ஒரு பிராம்மணன் வடிவில் அவன் முன்தோன்றி வரகுணமங்கையே உன் எண்ணத்துக்கு ஏற்ற இடம் என்று சொன்னதாகவும் அந்த "வேதவித்" இங்கு வந்து தபஸ் செய்ய, பகவான் நேரில் தோன்றி, மோக்ஷம் அளித் ததாகவும், தவத்துக்கு வெற்றியை கொடுத்த பகவான் "விஜயாஸனர்" என்கிற திருநாமத்துடன் இங்கு எழுந்த ருளி இருக்கப் பிரார்த்திக்க, அப்படியே இந்த வரகுண மங்கை "விஜயாஸனம்" என்றும், பகவானின் திருநாமம் "விஜயாஸனர்" என்றும் ஆயிற்று என்பர்.

**சிறப்பு :**

ஒன்பது கிரகங்களில், சந்திரனுக்குப் பரிகார க்ஷேத்ரம் இது. அமர்ந்த திருக்கோல எம்பெருமானுக்கு, ஆதிசேஷன் இங்கும் குடைபிடிக்கும் கைங்கர்யம் செய்கிறார்.

பெருமாள்–விஜயாஸனர். ஆதி சேஷன் மீது கிழக்கு நோக்கி அமர்ந்த திருக்கோலம். வரத ஹஸ்தம். ஆக்ஞாமுத்ரை.

| | |
|---|---|
| தாயார் | – வரகுணவல்லி, வரகுணமங்கை |
| புஷ்கரணி | – தேவ புஷ்கரணி. |
| விமானம் | – விஜயகோடி விமானம், |
| தீர்த்தம் | – அக்நி தீர்த்தம், அகநாசதீர்த்தம் |
| தல விருக்ஷம் | – .... |
| ப்ரத்யக்ஷம் | – அக்னி, உரோமசர், சத்யவான், வேதவித். |
| ஆகமம் | – வைகானஸம். |
| மங்களாசாஸனம் | – நம்மாழ்வார். |
| விசேஷம் | – .... |

**த்யான ச்லோகம்**

*ப்ரக்யாதோ விஜயாஸநோ விஜயகோட் யாக்யாத வைமாநிக:*
*ஸ்வாதீநோதய திங்முக: வரகுண ஸ்ரீவல்ல பஸ்தத்புரே!*
*நித்யாநந்த விதாய கோஜ்ஜ்வல வபுஸ் ஸாக்ஷாத் க்ருதோ வஹ்நிநா*
*பாஸ்வத் பாஸ்கர கோடி கோடி ஸத்ருசஸ் ஸாகம் ஸுரைஸ்ஸேவிதா: ||*

**பாசுரம்**

புளிங்குடிக்கிடந்து வரகுணமங்கை இருந்து
வைகுந்தத்துள் நின்று
தெளிந்த என்சிந்தை அகம் கழியாதே என்னை
ஆள்வாய்! எனக்கருளி

நளிர்ந்த சீருலகம் மூன்றுடன் வியப்ப நாங்கள்
கூத்தாடி நின்று ஆர்ப்ப
பளிங்கு நீர்முகிலின் பவளம் போல் கனிவாய்
சிவப்ப நீ காண வாராயே.

– நம்மாழ்வார்

“காலமும் நோயும் கருதாத அன்னைமீர்!
வேலன் வெறியை விலக்குமின்கள்
வரகுண மங்கையன் தாள் வண் துழாய்மேல்
(ஆ)தரகுணமங்கை தனக்கு”

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

# சித்ரா பௌர்ணமி

சித்திரையில் வரும் பௌர்ணமியை சித்ரா பௌர்ணமி என்று கொண்டாடுவர். எமதர்ம ராஜனின் கணக்கரான சித்ர குப்தரின் ப்ரீதிக்காக சித்ராபௌர்ணமி கொண்டாடப்படுகிறது. நம் பாவ, புண்ணியங்களை கணக்கிடும் தேவனான சித்ர குப்தனை திருப்தி செய்ய விரதம் இருந்து வழிபடுவர். இவ்விரதம் அனுஷ்டிக்கும் நாளில் பசுவின் பால், பசுவின் மோர் சாப்பிடக்கூடாது. ஆனால் எருமைப் பால் உபயோகிக்கலாம்! உப்பு சேர்க்கக் கூடாது. பயற்றம் பருப்பும், எருமைப் பாலும் சேர்த்து பாயசம் செய்து நிவேதனம் செய்வது மிகச் சிறப்பாகும். பூஜையை முடித்து விட்டு சித்ரகுப்தரை பய பக்தியுடன் கீழ்வருமாறு பிரார்த்திக்க வேண்டும்.

“சுவாமி, அடியேன் இப்பிறவியில் அறியாது செய்த பாவங்கள் மலையளவு இருந்தாலும், தேவரீர் எங்களை மன்னித்து அப்பிழைகளை கடுகளவாக்கிக் கொள்ள வேண்டும். அதேபோல் அடியேன் கடுகளவு புண்ணியம் செய்திருந்தாலும் தேவரீர் கருணைக் கூர்ந்து அதை மலையளவு புண்ணியமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.”

சித்ரகுப்தரின் சிலையை சில கோயில்களில் ஏடும், எழுத்தாணியும் தாங்கிய கரங்களுடன் கூடிய வடிவில் காணலாம். சித்ரா பௌர்ணமியன்று சித்ர குப்தரை திருப்தி செய்ய வேண்டி பல மன்னர்கள் அன்னதானம் செய்தனர் என்று திருச்சி மலைக்கோயிலிலுள்ள கல்வெட்டு சாசனம் கூறுகிறது. சித்ரா பௌர்ணமி தினத்தன்று தேவேந்திரன் சொக்கநாதப் பெருமானை வழிபட்ட வைபவத்தை புராணத்தில் காணலாம். இன்றும் சித்ரா பௌர்ணமி தினத்தன்று தேவேந்திரன் சொக்கநாத பெருமானையும், மீனாட்சி அம்மனையும் வழிபடுவதாகக் கொண்டு மதுரையில் சித்ரா பௌர்ணமி விழா ஒரு பெரிய திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

– அமரர். வி.எஸ். ஸ்ரீனிவாசன், சென்னை.

## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம்



அங்கம் கலிதம் பலிதம் முண்டம்
தசன விஹீநம் ஜாதம் துண்டம் ।
விருத்தோ யாதி கிருஹீத்வா தண்டம்
ததபி ந முஞ்சத்யாசா பிண்டம் ॥

**மனிதனாக இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவனுக்கும் ஏற்படும் தவிர்க்க இயலாத அவஸ்தைகளை அனுபவித்தும் "ஆசை" என்பது மனிதனை விடுவதே இல்லை என்ற உண்மையை அழகாக உணர்த்துகிறார் ஆதி சங்கர பகவத் பாதாள். வயதானதும் உடல் தளர்ந்து விடுகிறது. தலை முடி நரைத்து விடுகிறது. சிலருக்கு மொத்தமாக உதிர்ந்து மொட்டையாகி (வழுக்கையாக) விடுகிறது. பற்கள் அனைத்தும் சக்தி இழந்து வாயினில் இருந்து உதிர்ந்து விடுகிறது. நடப்பதற்கே ஒரு குச்சியை பிடித்துக் கொண்டு கால்களை நகர்த்த வேண்டியுள்ளது. ஆனாலும் – இந்நிலையிலும் பலவிதமான ஆசாபாசங்கள் (ஆசைகள்) அவனை விடுவது இல்லை...**

**– திரு. சீதாராமன், சென்னை.**

### நாமாக்கள்

431. ஓம் அர்த்த: நம:
(எல்லோராலும் விரும்பப்படுபவனே)
ஓம் அதீந்த்ரியாயை நம:
(சாஸ்த்ரம் ஒன்றாலேயே அறியத் தக்கவளே)

432. ஓம் அநர்த்த: நம:
(எல்லாம் நிரம்பியுள்ளதால் தான் விரும்புவது ஏதும் இல்லாதவனே)
ஓம் யோகி ஸேவ்யாயை நம:
(ஸநகாதியோகிகளால் ஆராதிக்கப்படுபவளே)

433. ஓம் மஹாகோஸ: நம:
(கொடுக்கக்கொடுக்கக் குறையாத பொக்கிஷமே)
ஓம் ஸத்யரதாயை நம:
(எவ்வித விகாரமும் இல்லாத பகவானிடம் ஈடுபட்டவளே)

434. ஓம் மஹாபோக: நம:
(சிறந்த யோகங்களை அளிப்பவனே)
ஓம் யோக மாயாயை நம:
(ஜீவன்களுக்கு, கர்ம பலனான பலப்பல சரீர சம்பந்தத்தை உண்டாக்கும் ஆச்சர்ய சக்தி உள்ளவளே)

435. ஓம் மஹாதந: நம:
(அளவற்ற பொருள்களை உடையவனே)
ஓம் புராதன்யை நம:
(ஒவ்வொரு கல்பத்திலும் மஹா, ப்ருத்வி, ஸமஷ்டி, ஸத்யாதி லோகங்களைச் சிருஷ்டிப்பவளே)

436. ஓம் அநிர்விண்ண: நம:
(சிறிதும் சோர்வு, வெறுப்பு இல்லாதவனே)
ஓம் சர்வேஸ்வர்யை நம:
(உடல் மிசை உயிர் என மறைந்து, நின்று, ஏவி, கார்யம் கொள்ளுபவளே)

437. ஓம் ஸ்தவிஷ்ட: நம:
(மிகவும் விரிந்தவனே)
ஓம் ஸுதருண்யை நம:
(சம்சாரக் கடலை எளிதில் கடக்கும் ஓடம் போன்றவளே)

438. ஓம் பூ: நம:
(அனைத்தையும் தாங்குபவனே)
ஓம் சரண்யாயை நம:
(சரணாகதி அடைந்தவரைக் காப்பவளே)

439. ஓம் தர்மயூப: நம:
(தர்மத்தைத் தலைமையானதாக வைத்திருப்பவனே)
ஓம் தர்ம தேவதாயை நம:
(ஹோம, யாக, மோக்ஷ, உபாஸன ஆராதனம் செய்பவர்களுக்கு அது அதற்கு உள்ள பலனை அளிப்பவளே)

440. ஓம் மஹாமக: நம:
(யாகத்தை தன் அங்கமாகக் கொண்டவனே)
ஓம் ஸூதராயை நம:
(எளிதில் ஆச்ரயிக்கத் தக்கவளே)

ஸ்ரீமதே வரகுணவல்லீ நாயிகா ஸமேத
ஸ்ரீவிஜயாஸன பரப்ரம்மணே நம:

**ஸ்ரீவைகுண்டம் – தூத்துக்குடி சாலையில் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.**

திவ்ய தேச வைபவம் வளரும்...



பகவத் கீதை - இளைய சமுதாயம்

# இது கர்ம பூமி

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. பு.வெ. ராஜா.

தற்போது நாம் இருப்பது கர்ம நிலை. உன்னத லோகத்தை யோக நிலை என்பர். தற்போதுள்ள லோகத்தை துன்ப நிலை அல்லது தண்டனை நிலை என்பர். நாம் தற்போது யோக நிலைக்கும், துன்ப நிலைக்கும் இடையில் இருப்பதால் போகமும், இன்பமும் இங்கே உள்ளன. ஆனால் முக்கியமான, முதன்மையான குணம் மட்டும் கர்மமேயாகும். அதாவது கர்மாக்களை செய்வது அனைத்து உயிர்களின் முதன்மையான செயல், முதன்மையான குணம், முதன்மையான இலட்சயமாக இருத்தல் வேண்டும்.

இவ்வுலகில் மானிடர்கள் மட்டுமின்றி பறவைகளும் கர்மாக்களில் பங்கு கொள்வதை காண முடிகிறது. எந்த ஒரு பணியுமின்றி அமர்ந்து இருக்கும் பறவைகளை நாம் காணமுடியாது. ஆனால் பணிகள் செய்யாமல் வெறுமனே வீற்றிருக்கும் மானிடர்களை நாம் காண முடியும். ஒவ்வொரு மானிடருக்கும் அவரின் குணங்களை பொருத்து கர்மாக்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. அவர்களே பிராமணன், சத்ரியன், வைசியன், சூத்திரன். இந்த வர்ணங்கள் குறித்து பகவத்கீதையிலும் கூறப்பட்டுள்ளது.

புலன்களை மட்டுமே உபயோகித்து சகலலோக கல்யாண காரியத்தை செய்பவர்கள் பிராமணர்கள். பிராமணர்களின் அறிவுரைகளின் வாயிலாக ஆட்சிப் புரிபவர்கள் சத்ரியர்கள், பிராமணர்களின் ஆசியுடனும், சத்ரியர்களின் பாதுகாப்புடனும் வியாபாரம், பசு பராமரிப்பு, விவசாயம் செய்வோர் வைசியர்கள். பிராமண, சத்ரிய, வைசியர்களின் கட்டளைகளை செய்து மகிழ்ச்சியுடனும், ஆரோக்கியத்துடனும் வாழ்பவர்கள் சூத்திரர்கள். மொத்தத்தில் அனைவரும் கர்மத்திலேயே வீற்றிருக்கின்றனர்.



கர்மாக்கள் ஏன் செய்ய வேண்டியிருக்கிறது? இக் கேள்விக்கு அளிக்கும் பதில் ஒன்றே. நமக்கு கிடைக்காத ஒன்றினை பெறு வதற்காக கர்மாக்களை செய்ய வேண்டி இருக்கின்றது. தனக்கு அருகில் இல்லாத ஒன்றினை பெறுவதற்காக மானிடர்கள் கர்மாக் களில் சிக்குகின்றனர். எனினும் பகவா னுக்கும் இது போன்ற நிலை இருக் கவே இருக்காது. அனைத்து உலகங் களையும் படைத்தது தானே என்பதால் தன்னால் முடியாதது இவ்வுலகில் இல்லவே இல்லை. ***"ஈஸாவாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச் ஜகத்யாம் ஜகத்"*** – இந்த உலகில் உள்ள யாவும் எம்பெரு மானுடையதே என்று ஈசோபநிஷத் கூறுகின்றது.

ஆனால் எம்பெருமான் இந்த உலகிற்கு வரும்போது, அல்லது அவ தரிக்கும்போது கர்மாக்களை செய்து கொண்டே இருக்கின்றார்.

"அர்ஜுனா! எனக்கு மூவுலகங் களிலும் செய்ய வேண்டிய கடமை ஒன்றுமில்லை. அடைய வேண்டியது ஏதும் அடையப்படாமலுமில்லை. ஆனாலும் நான் கர்மா செய்வதிலேயே தான் ஈடுபட்டுள்ளேன்" – பகவத் கீதை *3–22.*

"ஏனெனில், ஒருக்கால் நான் கவனத்துடன் கர்மாக்களில் ஈடுபடாமல் இருந்தால் பெரிய தீங்கு விளையும். ஏனெனில் மனிதர்கள் எல்லா விதங்க ளிலும் என்னுடைய வழியையே பின் பற்றுகிறார்கள்" பகவத் கீதை *3–23.*

இது ஸ்ரீகிருஷ்ண பகவானின் வார்த்தை. நான் அடைய வேண்டி யதோ அல்லது தன் அருகில் இல்லாத தையோ அல்லது ஏதும் இல்லையா னாலும் நான் கர்மாவில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன் என்று அந்த தேவாதிதேவன் கூறினார். ஆதலால் ஒவ்வொருவரும் முக்கியமாக இளைஞர்கள் பணிகளை மேற்கொள்ளாமலோ, பணியின்றியோ இருத்தல் கூடாது. பணிகளில் இருத்தல் வேண்டுமெனில் விழிப்பு, உற்சாகம் நிலையான புத்தி, தைரியம் இருத்தல் வேண்டும். புத்தியின் வாயிலாகத் திட்டங்களை வகுத்து இலட்சயத்துடன் வாழ்க்கையை நடத்துதல் வேண்டும். சோம்பேறித்தனத்தை, போகத்தை முற்றிலும் அழித்தல் வேண்டும். அப்பொழுதுதான் ஆரோக்கியமும், மனதும் நன்றாக இருக்கும். வாழ்க்கையும் ஆனந்த மானதாக அமையும். பணியில் இருப்போரும் 60 வயதினை கடந்தவுடன் தன் கடமைகள் அனைத்தும் முடிந்ததாகவும், இனி தமக்கு கடமைகள் இல்லை என்றும் எண்ணுவர். எம்பெருமானே பணிகளில் வீற்றிருக்கும் போது மானிடர்களான நாம் எம் மாத்திரம்?

ஒவ்வொரு மானிடருக்கும் தனது வயது, கல்வி, சக்தி, காலத்திற் கேற்றவாறு எத்தனையோ வகையான பணிகள் உள்ளன. மனதிருந்தால் மார்க்கம் உண்டு எனும் வாக்கியத்தின்படி "நான் எனது வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியுடன் கர்மாக்களை செய்து கொண்டே இருப்பேன்" என எவரேனும் எண்ணிக் கொண்டே இருந்தால் அவர்களுக்கு அற்புத மான வாய்ப்பு, ஆரோக்கியம் எல்லாம் சிறப்பாக அமையும். அப்பேர் பட்டவர்களே நீண்ட ஆயுளுடன், பரம ஆனந்தத்துடன் வாழ்வர்.

பகவத்கீதை தொடரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 45க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | த் | தி | 2 ய | வ | தி | 3 யு | லி | சா | ஞ் | 4 பா | |
| கு | ன் | ப | சோ | | | தி | | | 5 பா | ண் | டு |
| னி | வ | ரௌ | தை | 6 கி | ரு | ஷ் | ண | ன் | ம் | ட | நா |
| கி | தே | 7 தி | | வ | | டி | ர் | 8 அ | 9 அ | வ | க |
| 10 ரோ | கா | | | 11 தே | | ர | ர | ர் | ம் | ர் | ங் |
| ன் | 12 ச | ம் | 13 க | ர் | ண | ன் | து | ஜீ | பி | க | 14 அ |
| | ந் | த | ண் | 15 ரா | தா | | 16 வி | ன | கா | ள் | |
| 17 து | த | த் | ண | 18 து | ரு | ப | த | ன் | ல | கு | 19 ந |
| ரோ | னு | 20 யு | ன் | 21 ம | பி | 22 அ | ம் | பா | லி | கா | |
| ண | | | ம | | ர் | ச | யா | 23 வி | | | 24 கீ |
| ர் | ம | ஷ் | 25 பீ | 26 ப | க | டை | 27 வி | ல் | வி | த் | தை |
| டி | ண் | க | 28 சி | | 29 சு | 30 ப | த் | ரை | | | |




# ஸப்தகிரியின் வைணவ தொண்டு

- திரு. சத்தியதாரா, சென்னை.

ஸ்ரீவைஷ்ணவத் தொண்டில் ஸப்தகிரியின் நெடிய பயணம்! ஸ்ரீராமாயண காவியத்தில், ஒரு அணில் எம்பெருமானுக்கு பாலம் கட்ட உதவியது போல், நாமும் ஸப்தகிரியின் ஸ்ரீவைஷ்ணவத் தொண்டினை அலச முற்படுகிறோம்.

ஜனனம் முதல் முக்தி வரை... இடைப்பட்ட இகபர சுக துக்கங்கள் அனைத்தையும், அலசி ஆராய்ந்து, இனிமையான அனுபவத்துடன், இறுதியில் முக்தி பெற, இதோ வழி, இதுதான் வழி, இறுகப் பற்றிக் கொள்ளுங்கள் பரந்தாமனின் பாதங்களை...! என்று ஒரு பக்குவமான பரிசுத்தமான, எளிதான, இன்பமான இறை தத்துவத்தை போதிப்பதுதான் ஸ்ரீவைஷ்ணவம்...!

அநந்தகோடி வருஷங்களாக, அச்சுதனின் பெருமைதனை, தசாவதாரங்கள் உணர்த்தி மானிட இனத்தை உய்வித்து வருகின்றன. தொடர்ந்து ஆசார்யர்கள் பலர், பக்த துருவனில் தொடங்கி, ராமானுஜர், அவரால் ஸ்தாபிக்கப்பட்ட 74 சிம்மாசனாதிபதிகள், நாதமுனிகள் போன்ற பரம்பரை வழி வந்து, இன்றைய ஸ்ரீவைஷ்ணவ பீடங்களை அலங்கரிக்கும் ஜீயர் ஸ்வாமிகள் வரை, ஸ்ரீவைஷ்ணவத்தைக் கட்டிக்காத்து, இணையற்ற தொண்டுகள் செய்து வரலாறு படைத்துள்ளனர். இந்த மனித வாழ்வில், நமது தலைமுறையில் தற்போதுள்ள நாகரீக கலாச்சார வாழ்க்கையில், இது போன்ற அவதார புருஷர்கள் ஆற்றிய அரும் பெரும் தொண்டினை... தொடர்ந்து ஆழமான, அழுத்தமான, பதிவுகளுடன் அரிய கருத்துக்களை யும், பாமரனுக்கும் புரியும் பசுமையான தமிழில், ஸ்ரீவைஷ்ணவத்தின் பெருமைதனை, அலசி, ஆராய்ந்து, கருத்தினில் நிறுத்தும்படி, கவர்ச்சி யானதொரு சேவையில் ஐம்பது ஆண்டுகளாக அச்சுதனுக்கு, ஆழ்வார்களுக்கு அடியானாக தொண்டு செய்து வருவது... "ஸப்தகிரி" என்றால், அதில் இரண்டாவது கருத்து இருக்கவே இயலாது. இது ஓர் யக்ஞம் என்றால் அது மிகையாகாது.

முதலாவதாக, இந்த நாகரிக கலாச்சாரத்தில், காகிதம், அச்சு என்ற நிலைதாண்டி, கணினி நிலை கொண்டு ஆட்சி செய்து வரும் நிலையில், அடுத்த இதழ் எப்போது வரும் என்று ஏங்க வைக்கும் ஸப்தகிரியின் ஸ்ரீவைஷ்ணவ தொண்டின் வெற்றி யின் –முதல் ரகசியம்... எம்பெருமான் ஸ்ரீவைகுண்ட நாதனின், பல்வேறு வடிவங்களை வண்ணவண்ண மாக வடித்து, வழுவழுப்பான பின்னணியில் அளிப் பதேயாகும். பாமரர் பலர் படித்து அனுபவிப்பதை

விட, பார்த்து அனுபவித்தே அச்சுதனின் அருளுக்கு பாத்திரமாகிறார்கள். இது ஒரு சத்யமான, சாத்தியமான, சாத்தியமாகிவிட்ட உண்மை. இதனை ஒரு சிறு மேற்கோளில் காணலாம். சில மாதங்களுக்கு முன்னாள் ஒரு இதழில் (நவம்பர் 19) பிரம்மோத்ஸவ வாகன வண்ணப்படங்கள் கண்ணுக்கு விருந்தாக அமைவது போல் வெளியாகி இருந்தன.

ஸ்ரீவைஷ்ணவ குறுக்கெழுத்துப் புதிர், சிறுவர் பகுதி வினா–விடைகள்.... பாலபருவத்தில் மாதம் ஒரு முறை அனுபவிக்கும் பட்டாசு, மத்தாப்பு, வெடிகள்...!! முடிந்த வரை முடியை குலுக்கி, சிலுக்கி, முடிவில் .... விடைகளை எட்டிய உடன், கிடைக்கும் உணர்வு... எழுத்தில் வடிக்க இயலாத ஒரு இன்ப உணர்ச்சியாகும். இவ்வாறு ஒவ்வொரு உணர்விலும், வைகுண்ட நாதனை, பரமபத நாயகனை, பார்த்த சாரதியை, பல வடிவங்களில் நிலைப்படுத்தும் பணியினை எவ்வாறு புகழ்வது?

ஆழ்வார்களின் வரலாறு, திவ்யப் பிரபந்தங்களில் காணப்படும் திகட்டாத சுவைகள், திவ்ய தேசங்கள் பலவற்றின் தல புராணங்கள், ஆங்காங்கே ஸ்துதிகள் மற்றும் அதன் சாரம் இத்துணை விருந்துக்கு பின் திருக்கண்ணமுது போல் ஸ்ரீமத் பாகவதம்.

அருவியாக பொழியும், ஆன்மீக எழுத்தாளர்களை கொண்டு, அவர்களின் எழுத்துக்களை அச்சில் ஏற்றும் ஸப்தகிரியின் நிர்வாகத்தை என்னவென்று பாராட்டுவது! இவர்களின் அந்தரங்க வலிமை, ஆன்மீக வலிமை... இவர்கள் மேற்கொண்டுள்ள ஸ்ரீவைஷ்ணவத் தொண்டில் ஈடுபாடு தவிர வேறெதுவும் இல்லை...

வாழ்க ஸ்ரீவைஷ்ணவ தொண்டின் சீரிய கலைஞர்கள்... வளர்க ஸப்தகிரி...

**ஓம் நமோ பகவதே வாசுதேவாய!** **ஸர்வம் ஸ்ரீகிருஷ்ணார்ப்பணம்!!**



ஆயுர் வேதம்

தொடர்

# பேரிச்சம்



தெலுங்கு மூலம் :
டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390.
தமிழாக்கம் :
திருமதி. வி. உஷா, 99850 03156

பூஜைகள், நோன்புகள், விரதங்கள், திருமணங்கள் போன்ற சுபகாரியங்களில் மங்களகரமாக இந்த பேரிச்சம் பழத்தை முன் வைக்கின்றனர். இந்த சம்பிரதாயம் தொன்று தொட்டு வந்து கொண்டிருக்கிறது.

பேரிச்சம்பழத்தில் இரு வகை உண்டு. ஒன்று உலர்ந்த பேரிச்சம்பழம், மற்றொன்று பழுத்த பேரிச்சம் பழம்.

ஆங்கிலத்தில் டேட்ஸ் என்றும், ஹிந்தியில் கர் ஜுர் என்றும் அழைக்கப்படுகிறது. இதன் அறிவியல் பெயர் போனிக்ஸ் பெராடாக்டிலி. பேரிச்சம்பழம் அரகேசி என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்தது. இப்பேரிச்சம் பழம் நல்ல சக்தி மிகுந்ததாய் இருப்பதுடன் இதில் பலவித ஆரோக்கிய குணங்களும் அடங்கியுள்ளன. விரைவாக இரத்தத்துடன் கலந்து வேகமாக சக்தியைத் தரும் பேரிச்சம்பழம் உணவுப் பொருட் களில் முதன்மை பெற்றுள்ளது.

நம் வாழ்வில் ஏற்படக் கூடிய பலவித நோய்களுக்கு எவ்வாறு மருந்தாகப் பயன்படுகிறது என்பதைப் பற்றி அறிந்து கொள்வோம்.

**மலச்சிக்கல் நீங்க :**

நாள்தோறும் இரவு படுக்கும் முன் 2–3 உலர்ந்த பேரிச்சம் பழத்தை விதை நீக்கி, 10 உலர்ந்த திராட்சைப் பழத்தை சேர்த்து, 100 மி.லி. நீரில் சிறிது நேரம் கொதிக்க வைத்து குடித்தால் மலச்சிக்கல் தீரும்.

**உபவாசம் இருக்கும் போது சக்தியுடன் இருக்க :**

100 மி.லி. நீரில் இரண்டு பேரிச்சம் பழக்காயை நன்கு இடித்து விதை நீக்கி, 1–2 கிராம் பிஸ்தா பருப்பு, முந்திரி பருப்பு ஆகியவற்றை ஊற வைத்து, மிருதுவாக அரைத்து 100 மி.லி. பாலில் கலந்து நன்கு கொதிக்க வைத்து, சர்க்கரை சேர்த்து குடித்தால் சக்தி அதிகரிக்கும்.

**மாதவிலக்கு சரியாக ஏற்பட :**

பேரிச்சம்பழக்காயை நன்கு காய வைத்து பொடி செய்து கொண்டு 50 கிராம் எடுத்துக்கொள்ள வேண்டும். அதனுடன் சுக்கு பொடியையும் 50 கிராம் கலந்து வைத்துக் கொண்டு, மாதவிலக்கு வருவதற்கு 10 நாட்களுக்கு முன்பிருந்து வெறும் வயிற்றில் 200 மி.லி. சூடான பாலிலோ அல்லது வெதுவெதுப்பான நீரிலோ அரை ஸ்பூன் முதல் ஒரு ஸ்பூன் வரை இந்த பொடியை கலந்து உட்கொண்டால் இப்பிரச்சனை தீரும். இவ்வாறு மூன்று அல்லது நான்கு மாதங்கள் செய்ய வேண்டும்.

**உடலில் இரத்தம் அதிகரிக்க :**

இரவு படுக்கும் முன் 100 மி.லி. நீரில் இரண்டு உலர்ந்த பேரிச்சம்பழக்காயை இடித்து விதை நீக்க வேண்டும். பின் தோல் நீக்கப்பட்ட பாதாம்பருப்பு 3–4 சேர்க்க வேண்டும். 15–20 உலர்ந்த திராட்சையையும் சேர்த்து காலை அனைத்தையும் நன்கு மென்று தின்று அந்நீரை பருக வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் உடலில் இரத்தம் அதிகமாகும்.

**மாதவிலக்கின் போது இரத்தப்போக்கு குறைய :**

உலர்ந்த பேரிச்சம்பழப்பொடி, மிளகுப்பொடி, கற்கண்டு பொடி, திராட்சைப் பொடி ஆகியவற்றை 25

கிராம் வீதம் எடுத்துக் கொண்டு, காலை மாலை 2 கிராம் மருந்தை 50 மி.லி. நீரில் கலந்து உட் கொள்ள வேண்டும்.

**சிறுநீரகம் சீராய் வருவதற்கு :**

நாள்தோறும் ஒன்று அல்லது இரண்டு முறை 200 மி.லி. நீரில் 2–3 பேரிச்சம்பழக்காயை இடித்து விதை நீக்கி 2–3 கிராம் கொத்தமல்லி பொடியையும் சேர்த்து 100 மி.லி. ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து ஆறியபின் வடிகட்டி குடித்தால் சிறுநீரகம் சீராய் வரும்.

**குழந்தை பாக்கியம் பெற :**

ஆண்கள் நாள்தோறும் வெறும் வயிற்றில் பேரிச் சம் பழம், பிஸ்தா, அக்ரோட், அம்ஜிரா, பாதாம் பருப்பு போன்றவற்றை 1–2 தின்று ஒரு கப் பால் குடித்து வந்தால் விந்தணுக்கள் பெருகி குழந்தை பாக்கியம் பெற வழி செய்யும்.

**கர்ப்பிணிகளுக்கு ஊட்டச்சத்து பெருக :**

பேரிச்சை பழப்பொடி, பாதாம்பருப்பு பொடி, உலர்ந்த திராட்சை ஆகியவற்றை 100 கிராம் வீதம் எடுத்துக் கொண்டு, ஏலக்காய் பொடி 20 கிராம் சேர்த்து மிக்ஸியில் போட்டு நன்கு கலந்து இரண்டு முறை வேளைக்கு ஒரு டீஸ்பூன் பொடியை தகுந்தளவு கற்கண்டு பொடியு டன், 100 மி.லி. பாலில் கலந்து நாள்தோறும் குடித்து வந்தால் கர்ப்பிணிகள் ஆரோக்கியமாக இருப்பது மட்டுமின்றி வயிற்றில் உள்ள குழந்தையும் நன்றாக இருக்கும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்வு அல்ல.

ஆயுர்வேதம் வளரும்...



# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## உயிர்மெய் எழுத்துக்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| क | ख | ग | घ | ङ | की | खी | गी | घी | ङी |
| க | க$_2$ | க$_3$ | க$_4$ | ங | கீ | கீ$_2$ | கீ$_3$ | கீ$_4$ | NGEE |
| का | खा | गा | घा | ङा | कु | खु | गु | घु | ङु |
| கா | கா$_2$ | கா$_3$ | கா$_4$ | ஙா | கு | கு$_2$ | கு$_3$ | கு$_4$ | NGU |
| कि | खि | गि | घि | ङि | कू | खू | गू | घू | ङू |
| கி | கி$_2$ | கி$_3$ | கி$_4$ | NGI | கூ | கூ$_2$ | கூ$_3$ | கூ$_4$ | NGOO |

– திரு. உ.வே. பி.டி. சேஷாத்திரி, சென்னை,
99404 28830

மேலும் வளரும்...

பக்தர்கள் சேவையில்... திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# கோவிந்த நாமமே திவ்ய ஔஷதம்



**திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி, பொறுப்பாண்மைக்குழுத்தலைவர், தி.தி.தே.**

## தி.தி.தே.வின் தொலைநோக்கு :

தி.தி.தே. கொரோனா தொற்றால் ஏற்படக்கூடிய நெருக்கடிகளை ஊகித்து அதற்கான செயல்திட்டங்களை மேற்கொண்டது. மார்ச் 17ஆம் தேதி முதல் பக்தர்களுக்கு நேர ஒதுக்கீடு தரிசன முறையை அமுல்படுத்தி, இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை சானிடைசரால் சுத்தம் செய்து, சமூக இடைவெளியை கடைப்பிடித்தனர். மார்ச் 19ம் தேதி முதல் திருமலை தரிசனம் தற்காலிகமாக நிறுத்தி வைப்பது குறித்து மாண்புமிகு ஆ.மா.முதல்வர் திரு. ஜகன்மோகன் ரெட்டி அவர்களை கலந்து ஆலோசித்து, அனைத்து ஆர்ஜித சேவைகளை ஏகாந்தமாக ஆகமப்படி நேரம் தவறாமல் நடைபெற வழிவகுத்தனர்.

## நோய்களை கட்டுப்படுத்த யாகங்கள் :

மார்ச் 26ஆம் தேதி முதல் 28ஆம் தேதி வரை ஸ்ரீஸ்ரீநிவாச சாந்த்யோத்ஸவத்துடன் தன்வந்தரி மகா யாகத்தையும் மூன்று நாட்கள் திருமலையில் உள்ள தர்மகிரி வேத விக்ஞான பீடத்தில் மிகச் சிறப்பாக நடத்தியது. இதைத் தவிர ஸ்ரீநிவாச வேத மந்திர ஆரோக்கிய ஜெப யாகத்தை திருமலையில் உள்ள ஆஸ்தான மண்டபத்தில் மார்ச் 16ஆம் தேதி முதல் 25 ஆம் தேதி வரை நடத்தியது. தன்வந்தரி மகா மந்திர பாராயணத்தையும் திருமலையில் உள்ள நாத நீராஜனம் மண்டபத்தில் ஏப்ரல் 10–ஆம் தேதி ஆரம்பித்தனர்.

## மக்கள் சேவையே மாதவ சேவை :

ஊரடங்கு உத்தரவால் திருப்பதி மற்றும் திருப்பதியை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள ஆதரவற்றோர், தினக்கூலிகள் பசியுடன் இருக்காவண்ணம் அன்னப் பிரசாதத்துறையினர் வாயிலாக உணவு தயாரித்து தினமும் 1,20,000 உணவு பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லால் வாயில்லா ஜீவராசிகளுக்கும் உணவு வழங்கும் பணியையும் தி.தி.தே. மிகச் சிறப்பாக செய்து வருகிறது.

## ஆயுர்வேத மருந்துகள் :

தி.தி.தே. ஆயுர் வேத ஆராய்ச்சி நிலையத்தில் ஐந்து வகையான மருந்துகளை தயார் செய்து வருகின்றது. உணவு பொட்டலங்களை தயார் செய்து வரும் தி.தி.தே. ஊழியர்களுக்கு இம்மருந்துகளை அளித்தனர். ரக்ஷோஜ்ஞ தூபம்(கிருமியை அழிக்கும் தூபம்), பவித்ர (கைகளை தூய்மைப்படுத்தும் திரவம்), கண்டூசகம்(வாய் கொப்பளிக்கும் மருந்து), நிம்பனஸ்யமு(மூக்கில் விடக்கூடிய சொட்டு மருந்து), அமிர்த (நோய் எதிர்ப்பு சக்தி மாத்திரைகள்)

## கொரோனா யுத்தத்திற்காக 19 கோடி :

ஆந்திர மாநிலம், ராயலசீமாவில் புகழ்பெற்ற ஸ்விம்ஸ் மருத்துவமனை, பத்மாவதி பெண்கள் மருத்துவ கல்லூரி கொரோனா மருத்துவமனைகளாக மாற்றப்பட்டது. அவற்றிற்கான உபகரணங்கள் வாங்குவதற்காக 19 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. திருப்பதியில் ஸ்ரீநிவாசம், விஷ்ணு நிவாசம், மாதவம், இரண்டு சத்திரங்கள், திருச்சானூரில் உள்ள பத்மாவதி நிலையம் சித்தூர் மாவட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

## எஸ்.வி.பி.சி. பங்கு :

"நித்திய கல்யாணம் பச்சை தோரணம்" என்ற வாசகத்திற்கு ஏற்ப தி.தி.தே. ஏகாந்தமாக தினந்தோறும் கல்யாணம் நடத்தி, அதை எஸ்.வி.பி.சி. பக்தி சேனலில் நேரடியாக ஒளிபரப்பினர். திருமலையில் நடத்தப்படும் ஹோமங்கள் போன்றவற்றை ஒளிப்பரப்பி திருவேங்கடமுடையானை தினமும் தரிசிக்கும் வாய்ப்பினை பக்தர்களுக்கு வழங்கியது.

"கோவிந்தா" என்று கூப்பிட்டால் போதும் நம் கவலைகளை தீர்ப்பார். "கோவிந்தா" என்ற நாமமே இந்நோயிலிருந்து நம்மை காப்பாற்றும் ஔஷதமாகும்.

*Edited and Published on behalf of T.T.Devasthanams by **Dr. K. Radha Ramana**, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. R.V. Vijayakumar,** B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.*



## உலகளாவிய கொரோனா தொற்று பாதிப்பால் விதிக்கப்பட்ட ஊரடங்கு காரணத்தால் நலிவடைந்த ஆதரவற்றோர்களுக்கும், வாயில்லா ஜீவராசிகளுக்கும் தி.தி.தேவஸ்தானம் உணவு வழங்கும் காட்சிகள்














SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams printing on 25-05-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12-2018-2020, Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

